March 2026

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு






HAPPY
Anniversary
CELEBRATION
VARSHA
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
17
VARSHA
YEARS
THANK
YOU

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

March 2026 சுவடி — 16
ஒலை — 1

**வணக்கம் பல**

குளிர்காலம் முடிந்து கோடை தொடங்குகின்ற இளவேனிற் காலம், உலகெங்கும் வசந்தத்தை வரவேற்கும் காலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. எண்ணற்ற வளர்ச்சிகளுக்கு வழிகோலும் காலமாக இருப்பதனால், வருகின்ற இளவேனிலை வரவேற்று மகிழ்வோம். இயற்கை தன்போக்கில் இடையறாது இயங்கிக் கொண்டே இருந்தாலும், ‘காலங்கள் மாறினாலும் கோலங்கள் மாறுவதில்லை!’ என்பது போல, சில நாடுகளில் நடக்கின்ற போர்களும் தீவிரவாதத் தாக்குதலும், அரசியல் சீர்கேடுகளும் இன்னமும் முடிந்தபாடில்லை என்பது கவனிக்கத்தக்கது.

16 ஆண்டுகளை நிறைவு செய்து, 17 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் ‘அய் தமிழ்’ இதழ், ஆண்டு தோறும் முகப்பை, கலை உலகில் பெருமை சேர்த்த பலரையும் சிறப்பிக்கும் விதமாக தருகின்ற வகையில், தற்போது முகப்பில் இடம் பெறுபவர் அபிநய சரஸ்வதி அவர்கள்.

தென்னிந்தியத் திரையுலகம் கொண்டாடிய மகத்தான ஆளுமையான இவர், தனக்கென ஒரு கொள்கையை வைத்து வகுத்துக் கொண்டு அதிலிருந்து வழுவாமல் ரசிகர்களை மகிழ்வித்த ஒரு மகத்தான கலைத் தாரகை. 60—களில் தென்னிந்தியாவை ஆட்சி செலுத்திய இவர், அன்றைய காலகட்டத்து மக்களின் ‘கனவுக் கன்னி’ ஆக வலம் வந்தவர் என்பதை விடவும், அந்நாளில் அவர் ஏற்ற பாத்திரங்கள் மூலமாக, ஒரு சிறந்த குடும்பப் பாங்கான கதாநாயகி என்ற அந்தஸ்தையும் ஏற்படுத்திக் கொண்டு, அதிலிருந்து வழுவாமல் குடும்பங்கள் கொண்டாடும் நாயகியாக மலர்ந்த சரித்திரச் சாதனையைச் செய்தவர். இவரோடு நடிக்காத அந்தக் காலத்து கதாநாயகர்களே யாரும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு திரைத்துறையில் தன் ஆதிக்கத்தை செலுத்தியவர். அபிநய சரஸ்வதி, சமீபத்தில் மண்ணுலகை விட்டு மறைந்தாலும், ரசிகர் மனவுலகை விட்டு மறையாத மாதரசியாய் என்றும் அவர் மாணிக்கமாய் ஒளிர்ந்து கொண்டிருப்பார்.


அறிவியல் முன்னேற்றத்தில் அசாத்திய சாதனைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், கடந்து வந்த பாதைகளின் ஆவணங்களைத் தொகுப்புகளாக முன் வைத்துக் கொண்டிருக்கிறது ‘அய் தமிழ்’ இதழ்.

சிறப்புக் கட்டுரைகளோடு, சிறந்த கதை, கவிதை, இலக்கியம் எனப் பல்வேறு படைப்புகளுடன் மனம் கவரும் மலர் மாலை என மலர்கிற இந்த 17 ஆம் ஆண்டு தொடக்க மலரை, வழமைபோல் வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
editor@ithamil.com

(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## உள்ளே


மறுபடியும் வேதாளம்!

பண வெறி

தமிழே தமிழே

புரட்சி பைங்கிளி

சேரமான் கனவு

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

யோக யோகம்

மருத்துவ தமிழ்

இயக்கும் இசை






WE WANT TO SAY
THANK YOU
FOR YOUR SUPPORT
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
VARSHA
Thank You!
HAPPY Anniversary
VARSHA
தமிழ்
VARSHA
17
THANK YOU

# மறுபடியும்

## டிரம்பின் புதிய 10% உலகளாவிய வரி எப்படி செயல்படும்?

கடந்த ஆண்டு உலகளாவிய வரிகளை விதித்தபோது அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது அதிகாரத்தை மீறியதாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**IEEPA** என அழைக்கப்படும் 1977ஆம் ஆண்டின் சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தை பயன்படுத்தி, அதிபர் டிரம்ப் வரிகளை விதிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் கூறி உள்ளது. 9 நீதிபதிகள் கொண்ட அமர்வில் 6 பேர் டிரம்ப் விதித்த வரிகளுக்கு எதிராகவும், 3 பேர் ஆதரவாகவும் தீர்ப்பு வழங்கினர்.இந்தத் தீர்ப்பு, நுகர்வோர் மற்றும் வணிகர்களுக்கு வரிகளால் ஏற்பட்ட 130 பில்லியன் டாலருக்கான பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கியது. ஆனால் நீதிமன்றம் இதில் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அதேசமயம் இவை மற்றொரு நீதிமன்றப் போராட்டத்தின் மூலம் முடிவடையும் வாய்ப்பு உள்ளது.இந்த தீர்ப்பு வெளியான சற்று நேரத்திலேயே அனைத்து நாடுகளின் பொருட்களுக்கு தற்காலிகமாக 10 சதவீத வரியை டிரம்ப் விதித்தார். இந்த வரி பிப்ரவரி 24 முதல் அமலுக்கு வர உள்ளது உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பால் அடுத்து என்ன நடக்கும்? நீதிமன்றம் விதித்த தடை எதற்கெல்லாம் பொருந்தாது? இதுவரை வசூலிக்கப்பட்ட வரிகள் திருப்பி அளிக்கப்படுமா? என்பதை இங்கே தெரிந்துகொள்வோம்.






# வேதாளம் !

## கிரேஸ் எலிசா குட்வின்

எந்த வரிகள் சட்டவிரோதமானவை?

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, டிரம்ப் சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தின் கீழ் விதித்த வரிகளுக்கு மட்டுமே பொருந்தும். இந்தச் சட்டம் அவசரகாலத்தில் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை அதிபருக்கு வழங்குகிறது.டிரம்ப் முதன்முதலில் பிப்ரவரி 2025—ல் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, சீனா, மெக்சிகோ மற்றும் கனடாவிலிருந்து வரும் பொருட்களுக்கு வரி விதித்தார். இதற்கு அந்த நாடுகளிலிருந்து ஃபெண்டனில் கடத்தலுக்கு எதிரான அவசரநிலை என்று அவர் கூறினார்.

சில மாதங்களுக்குப் பிறகு, டிரம்ப் “விடுதலை நாள்” என்று அழைத்த, ஏப்ரல் 2ம் தேதி தனது வரிகளை விரிவுபடுத்தினார். கிட்டத்தட்ட அனைத்து நாடுகளுக்கும் 10 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை வரி விதித்தார். தனது நடவடிக்கை வர்த்தக பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் என்றும் அமெரிக்காவுக்கான வருவாயை அதிகரிக்கும் என்றும் டிரம்ப் கூறினார்.ஆனால், புதிய வரிகளை விதிக்கும் அரசமைப்பு அதிகாரம் அதிபருக்கு இல்லை, நாடாளுமன்றத்துக்கே உள்ளது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும், சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தின் நோக்கம் வருவாயை அதிகரிப்பது அல்ல என்றும் நீதிமன்றம் கூறி உள்ளது.






இருப்பினும், கடந்த ஆண்டில் டிரம்ப் விதித்த பல வரிகள், இந்த சட்டத்தின் கீழ் அவர் அறிவித்த அவசரநிலைகளின் ஒரு பகுதியாக இல்லை, எனவே உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் பொருட்படுத்தாமல் அவை தொடரலாம்.அதாவது எஃகு, அலுமினியம் மற்றும் ஆட்டோமொபைல் போன்ற துறைகள் மீதான தொழில்துறை சார்ந்த வரிகள் இதில் அடங்கும், இவற்றை 1962ஆம் ஆண்டு வர்த்தக விரிவாக்க சட்ட பிரிவு 232 இன் கீழ் தேசிய பாதுகாப்பு காரணங்களை கூறி டிரம்ப் விதித்தார்.

புதிய வரியை எதன் அடிப்படையில் டிரம்ப் விதித்தார்?

உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் கிட்டத்தட்ட அனைத்துப் பொருட்களுக்கும் புதிய 10% வரியை விதிக்க 1974 ஆம் ஆண்டு **Trade Act**—ன் பிரிவு 122—ஐ டிரம்ப் பயன்படுத்தினார். இது அதிகம் அறியப்படாத பிரிவாகும்.இந்தப் பிரிவு அதிபருக்கு 150 நாட்களுக்கு 15% வரை வரிகளை விதிக்க அதிகாரம் அளிக்கிறது, அதன் பிறகு நாடாளுமன்றத்தால் அது அங்கீகரிக்கப்பட வேண்டும். அதாவது இந்தத் தீர்வும் தற்காலிகமானது. சிலர் கூறுகின்றனர்.

வலதுசாரி சிந்தனைக்குழுவான கேட்டோ இன்ஸ்ட்டிட்யூட்டின் கூற்றுப்படி, புதிய அவசரநிலையை அறிவித்து மீண்டும் 150 நாட்களுக்கு வரி விதிப்பதை இந்தப் பிரிவு தடுக்கவில்லை. வெள்ளை மாளிகை கூற்றுப்படி, டிரம்ப் பிரிவு 122 ஐ "அடிப்படை சர்வதேச கொடுப்பனவு சிக்கல்களைத் தீர்க்க" மற்றும் "அமெரிக்க வர்த்தகத்தை மறுசீரமைக்கப் பயன்படுத்துகிறார்", அதே நேரத்தில் 1974 ஆம் ஆண்டு வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 301 இன் கீழ் அவர் வரிகளை விதிக்க முடியுமா என்பதையும் ஆராய்கிறார் என்றது.அந்தச் சட்டம், ஜேமிசன் கிரேர் தற்போது வகிக்கும் "அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி" **(USTR )** பதவியின் மூலம், நாடுகளின் வர்த்தகநடைமுறைகளை விசாரிக்க அனுமதிக்கிறது. பின்னர், நடைமுறைகள் பாரபட்சமானதாகவோ அல்லது நியாயமற்றவையாகவோ இருந்தால் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி வரிகளை விதிக்கலாம் என்று சொகிறது.

1962 ஆம் ஆண்டு வர்த்தக விரிவாக்கச் சட்டத்தின் பிரிவு 232 இன் கீழ் நிர்வாகம்






அதே நேரம், நாடாளுமன்றத்தை தவிர்ப்பதற்கான வழியை டிரம்ப் கண்டுபிடிக்கும் வாய்ப்பும் உள்ளதாக தொடர்ந்து வரிகளை விதிக்க முடியும், இதை டிரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் பெரிதும் பயன்படுத்தினார். இது தேசிய பாதுகாப்பை அச்சுறுத்தும் இறக்குமதிகள் மீது வரிகளை விதிக்க நிர்வாகத்தை அனுமதிக்கிறது, ஆனால்




விசாரணைக்குப் பிறகுதான் இதனை செய்ய முடியும் என்பதால், இது நேரம் எடுக்கக் கூடியது.

சட்டவிரோத வரிகள் திரும்பப் கிடைக்குமா?

இந்த வரி அடிப்படையில் அமெரிக்க அரசாங்கம் இதுவரை பில்லியன் கணக்கான டாலர்களை வசூலித்துள்ளதாக பல அறிக்கைகள் கூறுகின்றன. இந்தத் தொகை சுமார் 130 பில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தின் கீழ் டிரம்ப் விதித்த வரிகள் சட்டவிரோதமானவை என நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும் வசூலித்த தொகையை திருப்பி அளிப்பது குறித்து எதுவும் விளக்கவில்லை.செய்தியாளர்களிடம் பேசும் போது பணத்தை திருப்பித் தரும் விவகாரம் பல ஆண்டுகால சட்டப்போராட்டத்தில் சிக்க கூடும் என டிரம்ப் கூறி இருந்தார்.

அமெரிக்க கருவூலத்துறை செயலர் ஸ்காட் பெசண்ட் கூறும் போது இந்த விவகாரம் பல ஆண்டுகளுக்கு இழுக்கப்படலாம் என்றார். ஏனெனில், வசூலிக்கப்பட்ட பணத்தை திருப்பி அளிப்பது குறித்து உச்ச நீதிமன்றம் எந்த உத்தரவும் வழங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த விவகாரத்தில் அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றம் தீர்ப்பளிக்க வாய்ப்புள்ளது.அதே நேரம், பணத்தைத் திரும்பச் செலுத்த உத்தரவிடப்பட்டால் அவை பெரும்பாலும் பெரிய நிறுவனங்களுக்கே செல்லும் என நிபுணர்கள் கூறுகின்றனர். சிறிய நிறுவனங்களிடம் இந்த சிக்கலான செயல்முறையை முடிக்க திறன் இல்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்போது நடைமுறையில் உள்ள வரிகள் என்ன?

பிப்ரவரி 24 ஆம் தேதி மதியம் 12:01 **EST** மணிக்குத் தொடங்கி, அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் கிட்டத்தட்ட அனைத்துப் பொருட்களுக்கும், அவை எங்கிருந்து வந்தாலும், புதிய வரி 10 சதவீதம் விதிக்கப்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.




அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்ட நாடுகள், இங்கிலாந்து, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட, முன்னர் பேச்சுவார்த்தை நடத்திய வரி விகிதத்திற்குப் பதிலாக, பிரிவு 122 இன் கீழ் உலகளாவிய 10 சதவீத வரியை எதிர்கொள்ள நேரிடும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார்.வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் அவர்கள் ஒப்புக்கொண்ட சலுகைகளை அந்த நாடுகள் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று டிரம்ப் நிர்வாகம் எதிர்பார்க்கிறது என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

“அமெரிக்க பொருளாதாரத்தின் தேவைகள் காரணமாக” சில பொருட்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இவை முக்கிய வகைகளின் கீழ் வருகின்றன, இதனால் சில முக்கியமான கனிமங்கள், உலோகங்கள், எரிசக்தி பொருட்கள், இயற்கை வளங்கள், உணவுப் பயிர்கள், மருந்துகள், மின்னணுவியல், கார்கள் மற்றும் லாரிகள் மற்றும் விண்வெளிப் பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.மேலும், “புத்தகம் உள்ளிட்ட தகவல் பொருட்கள் , நன்கொடைகள் “ ஆகியவற்றுக்கு வரி விதிக்கப்படாது என்று வெள்ளை மாளிகையின் உண்மைத் தகவல் தாளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலக்கு அளிக்கப்பட்ட பல வகைப் பொருட்களுக்கு, இந்தப் பிரகடனம் விரிவானது, ஆனால் எந்தெந்தப் பொருட்களுக்கு விலக்கு



அளிக்கப்படலாம் என்பதை குறிப்பாகக் கூறவில்லை. மற்றொரு முக்கியமான விலக்கு யூஎஸ்எம்சிஏ—வின் ஒரு பகுதியாக இருக்கும் பொருட்கள் — அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா இடையேயான வர்த்தக ஒப்பந்தம்.அந்தப் பொருட்களுக்கும் சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்ட வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது, மேலும் **USMCA** விலக்கு காரணமாக உலகின் மிகக் குறைந்த வரி விகிதத்தைக் கொண்ட நாடுகளில் கனடாவும் ஒன்று என்று பிரதமர் மார்க் கார்னி கூறியுள்ளார்.

இதேபோல், கோஸ்டாரிகா, டொமினிகன் குடியரசு, எல் சால்வடார், குவாத்தமாலா, ஹோண்டுராஸ் மற்றும் நிகரகுவா ஆகிய நாடுகளிலிருந்து வரும் ஜவுளி மற்றும் ஆடைகள் டொமினிகன் குடியரசு—மத்திய அமெரிக்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

அதே நேரத்தில், குறைந்த விலை பொருட்களுக்கான வரிகளைத் தொடர்ந்து விதித்து வருவதாக டிரம்ப் கூறினார். கடந்த ஆண்டு, 800 டாலர் அல்லது அதற்கும் குறைவான மதிப்புள்ள பொருட்கள் எந்த வரியும் செலுத்தாமல் அமெரிக்காவிற்குள் நுழைய அனுமதித்த டி மினிமிஸ் விலக்கு என்று



அழைக்கப்பட்டதை அவர் முடிவுக்குக் கொண்டு வந்தார்."ஏமாற்ற முயலும் எந்தவொரு நாடும்.."— டிரம்பின் அச்சுறுத்தல் இந்தியாவை இலக்காகக் கொண்டதா?

கடந்த வாரம், அமெரிக்க உச்ச நீதிமன்றம் அதிபர் டொனால்ட் டிரம்பின் உலகளாவிய வரிகளை ரத்து செய்தபோது, இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் நிம்மதிப் பெருமூச்சு விடும் என்று தோன்றியது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை அவமானகரமானது என்று அழைத்த டிரம்ப், நீதிபதிகள் மீது தனி நபர் தாக்குதல்களைத் தொடங்கினார். இப்போது, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையொட்டி வர்த்தக ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்யக் கருதும் நாடுகளை அவர் எச்சரித்து வருகிறார்.

டிரம்ப் தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் வெளியிட்ட பதிவில், அந்த நாடுகள் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அச்சுறுத்தியுள்ளார்.அப்பதிவில், "ஒரு அபத்தமான உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் போர்வையில் எங்களை 'ஏமாற்ற' முயலும் எந்தவொரு நாடும், குறிப்பாக பல ஆண்டுகளாக அல்லது பல தசாப்தங்களாக அமெரிக்காவை ஏமாற்றிய நாடுகள், இன்னும் அதிக வரிகளை எதிர்கொள்ள நேரிடும். தற்போது ஒப்புக்கொள்ளப்பட்ட வரிகளை விட அதன் விளைவுகள் மிகவும் மோசமானதாக இருக்கும்," என்று குறிப்பிட்டுள்ளார்.




பயணத்தை ஒத்திவைத்த இந்திய குழு

பிப்ரவரி 22 அன்று, அமெரிக்க ஊடக நிறுவனமான ப்ளூம்பெர்க் மற்றும் பிரிட்டிஷ் செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ் வெளியிட்ட தகவலின்படி, இந்தியா தனது வர்த்தக பிரதிநிதி குழுவை இந்த வாரம் அமெரிக்காவுக்கு அனுப்பும் திட்டத்தை ஒத்திவைத்துள்ளது. அமெரிக்க உச்ச நீதிமன்றம் வரிகளை ரத்து செய்துள்ளதால், நிச்சயமற்ற சூழல் நிலவுவதாகவும், இதைக் கருத்தில் கொண்டு, இந்தியா அதைத் தள்ளிப்போட முடிவு செய்துள்ளதாகவும் ப்ளூம்பெர்க் மற்றும் ராய்ட்டர்ஸ் கூறுகின்றன.

“இரு நாடுகளின் அதிகாரிகளுக்கும் இடையேயான கலந்துரையாடல்களுக்குப் பிறகு, பயணத்தை ஒத்திவைக்கும் முடிவு எடுக்கப்பட்டது” என்று இந்திய வர்த்தக அமைச்சக வட்டாரம் தெரிவித்தது.

“பயணத்திற்கான புதிய தேதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை” என்று ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ராய்ட்டர்ஸ் செய்தியின்படி, இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை இறுதி செய்வதற்காக அந்தத் தூதுக்குழு புறப்படவிருந்தது. இந்தியா, ரஷ்ய எண்ணெயை வாங்குவதுடன் தொடர்புடைய சில இந்திய ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்ட 50% வரிகளை அமெரிக்கா குறைக்கும் கட்டமைப்பின் கீழ் இரு நாடுகளும் உடன்பட்டிருந்தன.

இதன் மூலம் அமெரிக்க வரிகள் 18% ஆகக் குறைக்கப்படவிருந்தது, அதே நேரத்தில் இந்தியா ஐந்து ஆண்டுகளில் 500 பில்லியன் டாலர் மதிப்பிலான அமெரிக்கப் பொருட்களை வாங்க ஒப்புக்கொண்டது. கடந்த வாரம், வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் கூறுகையில், வாஷிங்டனுக்குத் தூதுக்குழு மேற்கொள்ளும் பயணத்தின் போது நிலுவையில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டால், இந்த இடைக்கால ஒப்பந்தம் ஏப்ரல் மாதத்தில் நடைமுறைக்கு வரக்கூடும் என்று தெரிவித்திருந்தார்.




அதிபர் டிரம்ப்பின் புதிய அச்சுறுத்தல் இந்தியாவை நோக்கியும் இருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

டிரம்பின் ‘ட்ரூத் சோஷியல்’ பதிவை எக்ஸ் தளத்தில் மறுபகிர்வு செய்த முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் கன்வல் சிபல், “இந்தியாவுடனான ஒப்பந்தக் கட்டமைப்பு குறித்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் தாக்கம் பற்றி ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், இந்தியாவைக் குறிப்பிடும்போது அவர் ‘ஏமாற்றுதல்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அவரது அகங்காரம் சார்ந்த சிந்தனை ஒரு தீவிரமான பிரச்னையாகும்,” என்று எழுதியுள்ளார். டிரம்பின் பதிவு குறித்து அமெரிக்க வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறையின் முன்னாள் ஆலோசகர் இவான் ஏ. ஃபீன்பாம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

அதில், “ரொனால்ட் ரீகனை மேற்கோள் காட்டிய ஒன்டாரியோ தொலைக்காட்சி விளம்பரத்தை எதிர்த்ததற்காக கனடா மீதான வரிகளை உயர்த்துவதாக டிரம்ப் அச்சுறுத்தினார். ஒரு தொலைபேசி அழைப்பின் போது அந்நாட்டு அதிபரின் பேச்சுத் தொனி அவருக்குப் பிடிக்கவில்லை என்பதால் சுவிட்சர்லாந்து மீதான வரிகளை உயர்த்தியதாக டிரம்ப் கூறினார்.”




எனக் கூறியிருந்தார். மேலும் இவான்,”கடந்த வாரம், டிரம்ப் தனது சொந்த நீதித்துறை உச்ச நீதிமன்றத்தில் வாதிட்ட அதே சட்டப்பிரிவைப் பயன்படுத்தி, 24 மணி நேரத்திற்கும் குறைவான காலத்திற்குள் வரி உயர்வை 10% இலிருந்து 15% ஆக அறிவித்தார். பிரேசிலில் தனது அரசியல் கூட்டாளிகளில் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டதால் அதிருப்தியடைந்து, உலகின் மிக உயர்ந்த வரி விகிதத்தை அந்நாட்டின் மீது அவர் விதித்தார்.” என்று கூறினார்.

“ரஷ்ய எண்ணெயை வாங்குவது தொடர்பாக அவர் இந்தியா மீது வரிகளை விதித்தார். ஆனால் இந்தியாவை விட அதிக ரஷ்ய எண்ணெயை வாங்கும் சீனா மீது அத்தகைய வரிகள் எதையும் விதிக்கவில்லை. இருப்பினும், பிற நாடுகள் வரிகளை வைத்து ‘விளையாடுவதாக’ டிரம்ப் நம்புகிறார்.” என்றும் இவான் கூறுகிறார். இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்காவுடன் கையெழுத்திட்ட இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்திலிருந்து விலகுவது குறித்து இந்தியா இதுவரை எதையும் தெரிவிக்கவில்லை.

இந்தியா பயனடையுமா?

அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, இந்தியா எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருகிறது. தனது வர்த்தக நலன்களை சமநிலைப்படுத்தி, டிரம்ப் நிர்வாகத்துடன் மோதலை தவிர்க்க முயற்சி செய்கிறது. இந்திய வெளியுறவு அமைச்சகம், அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பை ஆய்வு செய்து வருகிறோம் என்று மட்டும் தெரிவித்தது.

உலக வர்த்தக அமைப்பிற்கான இந்தியாவின் முன்னாள் தூதர் ஜெயந்த தாஸ்குப்தா, ப்ளூம்பெர்க் தொலைக்காட்சியின் ஹஸ்லிண்டா அமீனிடம் கூறுகையில், “அமெரிக்கா என்ன நினைக்கிறது, என்ன நடவடிக்கைகளை அவர்கள் பரிசீலிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள இந்தியா அவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க வேண்டும். நாம் அவர்களுடன் கலந்துரையாட வேண்டும். இது எந்த திசையில் செல்லும் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை,” என்றார். இந்தியா ரஷ்ய எண்ணெயை வாங்குவதைக் குறைத்துள்ளது, இருப்பினும் தனது எரிசக்தி தேவைகள் மற்றும் சந்தை நிலவரங்களின் அடிப்படையில் கச்சா எண்ணெயை வாங்குவதற்கான உரிமையைத் தான் கொண்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

எம்கே குளோபல் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் பொருளாதார நிபுணர் மாதவி அரோரா ப்ளூம்பெர்க்கிடம் கூறுகையில், “ரஷ்ய எண்ணெய் கொள்முதல் மீதான வரி அச்சுறுத்தல் முடிவுக்கு வந்துள்ள நிலையில், இந்தியா இப்போது அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யலாம். இருப்பினும், டிரம்புடனான உறவைப் பேணுவதற்காக இந்தியா தொடர்ந்து கொள்முதலைக் குறைக்கக்கூடும். பேச்சுவார்த்தைகளில் இந்தியா இப்போது தங்களுக்குச் சாதகமான கூடுதல் நிபந்தனைகளைக் கோரலாம்,” என்றார்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகும், தான் விரும்பியபடி தொடர்ந்து செயல்படப்போவதாக டிரம்ப் கூறுகிறார். நீதிமன்றத்தின் தீர்ப்பை புறக்கணிப்பதற்கான அறிகுறிகள் எதையும் டிரம்ப் காட்டவில்லை என்றாலும், கிடைக்கக்கூடிய பிற வரம்புக்குட்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தி விரைவாகப் புதிய வரிகளை விதிக்கத் தொடங்கியுள்ளார். டிரம்புக்கு ஆச்சரியம் அளிக்கும் வகையில் அமைந்த உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பில், பழமைவாத நீதிபதிகள் கூட அவருக்கு ஆதரவளிக்கவில்லை. டிரம்பால் நியமிக்கப்பட்ட இரண்டு நீதிபதிகள் கூட இந்த வரிகள் சட்டவிரோதமானவை என்று


HAPPY
Anniversary
CELEBRATION
VARSHA™
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA™
17
YEARS
THANK
YOU




TRADING TARIFFS

அறிவித்தனர்."பல ஆண்டுகளாக, பழமைவாத நீதிபதிகள் டிரம்புக்கு 'கட்டுப்பட்டவர்களாகவே' சித்தரிக்கப்பட்டனர். எனவே, நீதிபதிகள் எதிர்பார்த்தபடி செயல்படாதபோது, அதிபரின் அதே சிந்தனை கொண்டவர்கள் என்று விமர்சிப்பதும் அல்லது அவர்கள் மாறுபடும்போது விமர்சிப்பதும் சற்று முரணாகத் தோன்றுகிறது" என்று என்று வால் ஸ்ட்ரீட் ஜர்னல் செய்தி வெளியிட்டுள்ளது. இப்போதும் கூட, ஒரு பழமைவாத நீதிபதி டிரம்புக்கு எதிராக எப்படித் தீர்ப்பளிக்க முடியும் என்று சில தாராளவாத சிந்தனையாளர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இதுகுறித்து சட்ட நிபுணர் நோவா ஃபெல்ட்மேன் எழுதுகையில், "கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்குப் பிறகு, தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியோர் அதிபர் டொனால்ட் டிரம்பின் எல்லை மீறிய நிர்வாக அதிகாரத்தை எதிர்த்து நிற்பதற்கான ஒரு வழியை இறுதியாகக் கண்டறிந்துள்ளனர்." என்று குறிப்பிட்டுள்ளார்.

டாவோஸ் நகரில் கனடா பிரதமர் மார்க் கார்னி பேசுகையில், வல்லரசுகளின் அரசியலை எதிர்கொள்ள நடுத்தர சக்திகொண்ட நாடுகள் தங்களுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை ஆழப்படுத்த வேண்டும் என்று கூறியபோது, ஒருவேளை இந்தியா அதைத்தான் செய்து கொண்டிருந்தது போல தெரிகிறது. அமெரிக்காவுடனான தனது வணிகச் சார்பைக் குறைப்பதற்காக இந்தியா ஏற்கனவே பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை முடித்திருந்தது. அதிபர் டிரம்ப் மற்றும் அவரது நிர்வாகத்தால் இந்தியாவிற்கு எதிராகப் பல ஆக்ரோஷமான அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆனால் மோதி அரசாங்கம் அதற்கு மிகவும் எச்சரிக்கையுடனேயே பதிலளித்தது. அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் இந்த முடிவு சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற போட்டி




நாடுகளுக்குப் பயனளிக்கும் என்று கூறப்படுகிறது. ஏனெனில் டிரம்பின் வரிகள் முடிவுக்கு வருவது அமெரிக்காவிற்கான ஏற்றுமதி வரி விகிதங்களைக் குறைக்கும்.

மோர்கன் ஸ்டான்லி நிறுவனத்தின் கணிப்புப்படி, சீனாவிலிருந்து வரும் பொருட்கள் மீதான சராசரி வரி 32%—லிருந்து 24%—ஆகக் குறையக்கூடும், அதே சமயம் ஆசியாவிற்கான சராசரி வரி விகிதம் 20%—லிருந்து 17%ஆகக் குறையக்கூடும்.

இருப்பினும், டிரம்ப் பின்னர் 15% வரிகளை அறிவித்தார். இதற்கு முன்பு 10% என்ற குறைந்த வரி விகிதங்களைப் பேச்சுவார்த்தை மூலம் பெற்றிருந்த பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இது சவாலாக அமையக்கூடும். இந்த வரி உயர்வு அமெரிக்காவிற்கான பிரிட்டன் ஏற்றுமதிச் செலவை 4 பில்லியன் பவுண்டுகள் வரை அதிகரிக்கக்கூடும் என்றும், சுமார் 40,000 பிரிட்டிஷ் நிறுவனங்களைப் பாதிக்கும் என்றும் பிரிட்டிஷ் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ் மதிப்பிடுகிறது. அடுத்த மாதம் சீனாவுக்குச் செல்லவுள்ள டிரம்ப், அங்கு சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகி வரும் சூழலில் இந்தத் தீர்ப்பு வந்துள்ளது. இது அவரது பேரம் பேசும் வலிமையைக் குறைக்கக்கூடும்.

ப்ளூம்பெர்க் செய்தியின்படி, வர்த்தக கூட்டாளிகளுடன் ஏற்கெனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அமலில் இருக்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜேமிசன் கிரீர் அவற்றை "நல்ல ஒப்பந்தங்கள்" என்று அழைத்தார். இருப்பினும், எல்லா நாடுகளும் இதற்கு உடன்பட வேண்டிய அவசியமில்லை.

டிரம்ப் நிர்வாகம் தனது கொள்கையைத் தெளிவுபடுத்தும் வரை, ஐரோப்பிய ஒன்றியம் — அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தின் ஒப்புதலை நிறுத்தி வைப்பதற்கான முன்மொழிவு தாக்கல் செய்யப்படலாம் என்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் வர்த்தகத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். "அதேபோல், இந்திய அதிகாரிகளும் இந்த வாரம் அமெரிக்காவில் நடைபெறவிருந்த இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை, நிச்சயமற்ற சூழலைச் சுட்டிக்காட்டி நிறுத்தி வைத்துள்ளனர்.

அடுத்து என்ன நடக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் உலகளாவிய வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் அழுத்தம் கொடுப்பதற்காக டிரம்ப் பயன்படுத்திய மிகவும் பயனுள்ள ஆயுதம் இப்போது பலவீனமடைந்துள்ளது என்பது மட்டும் நிச்சயம்." என ப்ளூம்பெர்க் கூறுகிறது.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



மூன்றாம் உலகப் போரை புதின் ஏற்கெனவே தொடங்கிவிட்டார்”

**ஜெலன்ஸ்கி**

(நீங்க சொல்றது நியாயமானது! ஆனால் அப்படி யாரும் இங்கே நினைக்கலேங்கிறது தான் வேதனையா இருக்கு!)



“இந்தத் தேர்தல் எனக்கும் முதல்வர் ஸ்டாலினுக்கும் நடக்கும் போர்”

**விஜய்**

(இதை மக்களும் நினைக்கிறங்களான்னு சீக்கிரமே தெரிஞ்சுடும்!)



“வாஜ்பாயின் முரட்டு அடிமையாக கருணாநிதி இருந்தாரா? ஆமாம், என்று திமுகவினர் ஒப்புக் கொள்வார்களா?”

**–எடப்பாடி பழனிசாமி**

(அடிக்கடி ஏதாவது தத்துபித்துன்னு சொன்னாலும், சமயத்திலே இப்படி கேட்டு எதிராளியை வாயடைக்க வைச்சிடுறீங்க!)



“ஜனநாயகன்’ தணிக்கை விவகாரத்துக்கு ஒருவர் குரல் கொடுப்பது முக்கியமல்ல. தயாரிப்பாளர் சங்க உறுப்பினர்கள் 1519 பேரும் தணிக்கை அலுவலகத்தில் போய் நிற்பது விரைவில் நடக்கும்.”

**விஷால்**

(அந்த எண்ணம்தான் உங்களை உலக அளவில் உயரத்துக்குக் கொண்டு போய், ‘எல்லை தாண்டியவராக’ காட்டியிருக்கு!)


# பணை

## எப்ஸ்டீன் கோப்புகள் !

எப்ஸ்டீன் கோப்புகள் வெளிப்பட்டதிலிருந்து உலகளவில் எண்ணற்ற பெருந்தலைகள் உருண்டுகொண்டிருக்கின்றன; நம்ப முடியாத அளவில் சில நாள்கள் முன் உயரத்திலிருந்த ஒருவரை வீழ்த்தியிருக்கிறது — பிரிட்டிஷ் அரசர் மூன்றாம் சார்லஸின் தம்பியும் இளவரசர் என்று முன்னர் அழைக்கப்பட்டவருமான ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் விண்ட்சர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

பிரிட்டனின் பன்னாட்டு வணிகத் தூதராக இருந்த காலகட்டத்தில் பிரிட்டிஷ் அரசின் ரகசியத் தகவல்களை அமெரிக்காவைச் சேர்ந்த நிதியாளரும் பாலியல் குற்றவாளியுமான ஜெஃப்ரி எப்ஸ்டீனுக்குப் பகிர்ந்ததுதான் குற்றச்சாட்டு. ஹாங்காங், வியத்நாம், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான தனது அதிகாரபூர்வ பயணங்கள் தொடர்பான விவரங்களை அவர் எப்ஸ்டீனுக்குப் பகிர்ந்திருக்கிறார் ஆண்ட்ரூ. பாலியல்ரீதியில் ஆண்ட்ரூவை வெற்றி கொள்ளத் தாம் (சிறுமியாக இருந்தபோது?) ஒரு முறை பிரிட்டனுக்கு எப்ஸ்டீனால் அனுப்பப்பட்டதாக ஏற்கெனவே ஒரு பெண் குறிப்பிட்டிருந்தார். ஆனால், எப்ஸ்டீனுடைய கிரிமினல் நடவடிக்கைகள் பற்றித் தமக்கு எதுவும் தெரியாதெனத் தொடர்ந்து மறுத்துவருகிறார் ஆண்ட்ரூ (சட்டம் தன் கடமையைச் செய்யும் எனக் கைகழுவி விட்டார் மன்னர் சார்லஸ்!).

எப்ஸ்டீன் கோப்புகள் வெளிப்படுத்துதல் சட்டத்தின்படி, 2026 ஜன. 30 ஆம் தேதி சுமார் 30 லட்சம் பக்கங்கள், 1.80 லட்சம் புகைப்படங்கள், 2 ஆயிரம் காணொலிகளை அமெரிக்க நீதித் துறை வெளியிட்டது. இவற்றில் பல




பெரும்புள்ளிகள் தொடர்புடைய பதறச் செய்யும் படங்களும் சிக்கலான மின்னஞ்சல்களும் இடம் பெற்றிருக்கின்றன.

தற்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், முன்னாள் அதிபர் பில் கிளின்டன்,



# வெறி!

பாண்டியராஜன். எம்.


பிரிட்டிஷ் தூதர் பீட்டர் மான்டல்சன், எலான் மஸ்க், பில் கேட்ஸ், அனில் அம்பானி போன்றோரின் பெயர்களுடன் உலகளாவிய அளவில் அதிகார மையங்களாக இருந்த பலரின் தொடர்புகளும் இருக்கின்றன.


2025 டிசம்பர் 19 ஆம் தேதியே கொஞ்சம் கோப்புகளும் தகவல்களும் வெளியிடப்பட்டபோதிலும் இவற்றில் பெரும்பாலான தகவல்கள் — செய்திகள் மறைக்கப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. முன்னதாக, 2024 ஜனவரியில் எப்ஸ்டீனுடைய தோழியான ஜிஸ்லைன் மாக்ஸ்வெல்லுக்கு எதிரான அவதூறு வழக்கொன்றின் ஆவணங்களில் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாமல் டொனால்ட் டிரம்ப், இளவரசர் ஆண்ட்ரூ, பில் கிளின்டன் போன்றோரின் பெயர்கள் இருந்தன. எப்ஸ்டீன் கோப்புகள் வெளியிடப்பட்டு மூன்று வாரங்களாகிவிட்டன. வெளியான நாள் தொடங்கி எண்ணற்றோரை வீழ்த்திக் கொண்டிருக்கின்றன இவற்றின் பக்கங்கள்.

எப்ஸ்டீனுடன் பெரும் செல்வந்தர்கள், அரசுகளின் தலைவர்கள், தூதர்கள், அரசியல் அதிகாரத் தரகர்கள், தேவைகளை முடித்துக் கொடுப்போர், அறக்கட்டளைகள், அறிவாளிகள் என உலகில் பலரும் கொண்டிருந்த தொடர்புகள் அம்பலப்பட்டு வருகின்றன. இவர்களில் பலர் எப்ஸ்டீன்வழி பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களாகவும் இருக்கலாம்; இல்லாதவர்களாகவும் இருக்கலாம். ஆனால், பாலியல் குற்றவாளியாக அறியப்பட்ட பிறகும்கூட எப்ஸ்டீனுடன் தொடர்பில் இருந்திருப்பதுதான் விந்தை.




ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இப்போது எப்ஸ்டீன் கோப்புகளில் இடம் பெற்ற பலரும்






பதவிகளிலிருந்து விலகிவருகின்றனர்; அல்லது விலக்கப்படுகின்றனர். நிறைய விசாரணைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டன் உள்பட பல்வேறு நாடுகளின் விசாரணை அமைப்புகளும் கோப்புகளை முழுமையாக ஆராயத் தொடங்கியிருக்கின்றன.

எப்ஸ்டீன் தொடர்புடைய அமெரிக்காவில் தொடர் விளைவுகள் இப்போதுதான் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது; விலகல்கள் தொடங்கிவிட்டன. அமெரிக்காவின் உயர் நிலைகளில் இறுக்கமான அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது; விரைவில் பெரும் புயல் வீசக் கூடும். எப்ஸ்டீன் தொடர்புகள் வெளியானதால், அதிபர் பராக் ஒபாமா காலத்தில் வெள்ளை மாளிகையில் உயர் அலுவலராக இருந்த கேத்தரின் ரம்லர், கோல்ட்மேன் சாக்ஸ் நிறுவனத்தின் முதன்மை சட்ட அலுவலர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார்.

உலகின் பெரும் வணிக நிறுவனங்களில் ஒன்றான டிபி வேர்ல்ட் தலைவர்

பதவியிலிருந்து அமீரக பெருவணிகரான சுல்தான் அகமது பின் சுலாயம் விலகியிருக்கிறார். காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எப்ஸ்டீனுக்கு அனுப்பிய பதில் மின்னஞ்சலில் 'நூறு சதவிகித ரஷியப் பெண்ணுக்காக' நன்றி தெரிவித்திருக்கிறாராம்! பிரிட்டனில் அமெரிக்காவுக்கான முன்னாள் தூதர் பீட்டர் மாண்டெல்சன் தொழிலாளர் கட்சியிலிருந்தும், தொடர்ந்து மேலவையிலிருந்தும் விலகியிருக்கிறார்.



அமெரிக்க அதிபராக பில் கிளின்டன் இருந்தகாலத்தில் அவரின் வடக்கு அயர்லாந்துக்கான தூதராக இருந்த ஜார்ஜ் ஜே. மிட்செல், நியூ யார்க் காட்சிக்கலைப் பள்ளித் துறைத் தலைவர் டேவிட் ஏ. ராஸ், ஸ்வீடனிலிருந்த ஐ.நா. அவையின் அகதிகள் முகமையின் தலைவர் ஜோவான்னா ரூபின்ஸ்டீன், ஹயாத் ஹோட்டல்ஸ் கார்ப்பரேஷன் செயல் தலைவர் பதவியிலிருந்த தாமஸ் ஜே. பிரிட்ஸ்கெர் எனப் பலரும் தற்போது தாங்கள் வகித்துவந்த பதவிகளிலிருந்து விலகியிருக்கின்றனர்.


நார்வேயின் முன்னாள் பிரதமரும் ஐரோப்பிய கவுன்சிலின் முன்னாள் முதன்மைச் செயலருமான தார்ப்ஜோர்ன் ஜாக்லேண்ட்டுக்கு எதிராக லஞ்ச — ஊழல் குற்றச்சாட்டின் கீழ் விசாரணை தொடங்கப்பட்டிருக்கிறது. ஜோர்தான் மற்றும் இராக்கிற்கான நார்வேயின் தூதராக இருந்த மோனா ஜூல் கடந்த வாரம் ராஜிநாமா செய்திருக்கிறார். இவருடைய கணவரும் முன்னாள் தூதரக அலுவலருமான தேர்ஜா ராட் லார்சனுக்கு எதிராக லஞ்ச — ஊழல் விசாரணை தொடங்கப்பட்டிருக்கிறது. இவருக்காகப் பெருந்தொகையை எழுதிவைத்திருக்கிறாராம் எப்ஸ்டீன்.

பிரான்ஸின் முன்னாள் பண்பாட்டுத் துறை அமைச்சர் ஜேக் லாங், அவருடைய மகள் கரோலின் லாங் ஆகியோருக்கு எதிராகவும் விசாரணைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பலர் பலர்...

எப்ஸ்டீனின் கதை எல்லாம் ஏற்கெனவே

வெளிவந்திருக்கின்றன. 2005—ல் ஒரு சிறுமியிடம் வல்லுறவு கொண்டதாக அவருடைய தாய் அளித்த புகாரின் பேரில்தான் முதன்முதலில் புளோரிடாவின் பாம் பீச் காவல்துறை விசாரிக்கத் தொடங்கியது. இவரால் பாதிக்கப்பட்ட 36 பெண்களைக் கண்டறிந்தனர், இவர்களில் 14 வயதுச் சிறுமிகளும் இருந்தனர். பாலியல் தொழிலில் பெண்களை ஈடுபடுத்திய எப்ஸ்டீனுக்கு 2008—ல் தண்டனை விதிக்கப்பட்டு 13 மாதங்கள் சிறையிலும் கழித்தார். வெளியே வந்த பின்னர் அவருடைய பாலியல், தரகு, தொடர்புகள் எல்லாமும் நாடுகள், கடல்கள், கண்டங்கள் என எல்லா எல்லைகளையும் தாண்டி வளர்ந்திருக்கிறது.

மீண்டும், 2019 ஜூலை 6—ல் பாலியல் தொழில் — ஆள் கடத்தல் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்ட அவர், மிகவும் சந்தேகத்துக்குரிய வகையில், அடுத்த ஒரு மாதத்திலேயே, ஆகஸ்ட் 10 ஆம் தேதி சிறைக்குள்ளேயே தற்கொலை செய்துகொண்டு இறந்தார். தூக்கிட்டுத் தற்கொலை என நியூ யார்க் நகர் மருத்துவ ஆய்வாளர் தெரிவித்தாலும், இவருடைய மரணத்தில் இன்னமும் தீர்க்கப்படாத — தீர்க்க முடியாத சதிக் கோட்பாடுகள் தொடர்கின்றன. தற்போது எப்ஸ்டீன் கோப்புகள் வெளிவந்து பெரிய தலைகளின் பெயர்கள் எல்லாமும் அடிபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், இந்த சந்தேகங்கள் எல்லாமும் மேன்மேலும் வலுப்பெறுகின்றன.




எப்ஸ்டீன் கோப்புகள் வெளிவந்ததும் இவற்றில் இடம் பெற்றுள்ள பலரும் தாங்கள் மிகவும் நல்லவர்கள் என்றும் எப்ஸ்டீன் தொடர்புடைய குற்றச் செயல்களில் தொடர்பில்லை என்றும் தெரிவிக்கின்றனர். ஏதோ நிதி ஆலோசனைகள் கேட்டதாகவும் பெரும்புள்ளிகளின் தொடர்புகளைப் பெற உதவி வேண்டியதாகவும் எண்ணற்ற காரணங்களைக் கூறுகின்றனர். இருக்கலாம், ஆனால், எப்ஸ்டீனுக்கு எதிராக, சிறுமிகளைச் சீரழித்த மிக மோசமான குற்றச்சாட்டுகளில் தண்டிக்கப்பட்டுச் சிறையிலும் இருந்துவிட்டு வந்த ஒரு நபருடன் தொடர்பில் இருக்கிறோமே, தொடர்பு கொள்கிறோமே என்றெல்லாம் இவர்கள் யோசித்திருக்க மாட்டார்களா? என்றால் அதையும் தாண்டி எதை எதிர்பார்த்தார்கள்? என்ன கிடைத்திருக்கும்? இவை இயல்பாக எல்லாருக்கும் எழக் கூடிய சந்தேகங்கள்தான்.

எப்ஸ்டீனுடைய செயல்பாடுகள் பற்றிய ஆவணங்களில் ஜன. 30 ஆம் தேதியுடன் 35 லட்சம் பக்கங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. இன்னமும் 25 லட்சம் பக்கங்கள் வெளியிடப் படாமல் வைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க வழக்குரைஞர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இந்த 25 லட்சம் பக்கங்களில் இன்னமும் உலகின் பெரிய தலைகளாகக் கருதப்படும் பலருடைய அந்தரங்கங்களும் மோசமான பக்கங்களும் இடம் பெற்றிருக்கலாம்; எனவேதான் இவை நிறுத்தப்பட்டிருக்கின்றன என்றெல்லாமும் பரவலாக சந்தேகம் எழுப்பப்படுகின்றன; குற்றம் சாட்டப்படுகின்றன.



ஒருவேளை அப்படியும் இருக்கும்பட்சத்தில் இவற்றிலுள்ள தகவல்கள் — புகைப்படங்களைக் கொண்டு, இவற்றை வைத்திருப்பவர்களால் யாரை வேண்டுமானாலும் மிரட்டவோ, மிரட்டித்




தங்கள் வழிக்குக் கொண்டுவரவோ முடியும். எக்குத்தப்பாகச் சிக்கிக் கொண்டிருப்பவர்கள் மூலம் அவர்கள் அதிகாரத்திலுள்ள நாடுகளில் தங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் சாதித்துக் கொள்ளவும் முடியும். துண்டு துண்டாகக் கிடக்கும் அல்லது கண்டறியப்படும் எப்ஸ்டீன் கோப்புகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கோணத்தில் விசாரணைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

உண்மையிலேயே பாலியல் குற்றவாளியான ஜெஃப்ரி எப்ஸ்டீன் நடத்திக்கொண்டிருந்த, சிறார்கள் — சிறுமிகள் துன்புறுத்தப்பட்ட பாலியல் சாம்ராஜ்யத்தில் என்னவெல்லாம் நடந்தன? யார் யாருக்கெல்லாம் நேரடி பங்கும் பலனும்? யார் யாருக்கெல்லாம் மறைமுக பங்கும் பலனும்?

2008—ல் தண்டிக்கப்பட்டபோதும், அடுத்த பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தனக்கெனத் தனியொரு உலகைப் படைத்துக் கொண்டு, தனித்தீவைச் சொந்தமாக்கி, அங்கே தேவைப்பட்டவர்களை அழைத்துச் சென்று தேவையான விதங்களில் மகிழ்ச்சிப்படுத்தி, உலகளாவிய புள்ளியாக இருந்துவந்திருக்கிறார் எப்ஸ்டீன். நம்ப முடியாத அளவுக்கு உயர் நிலைகளில் இருந்த, இருக்கிற பலர் அவருக்கு வாடிக்கையாளர்களாகவோ அல்லது நண்பர்களாகவோ இருந்திருக்கின்றனர். உள்ளபடியே, இவர்கள் எல்லாரும் வெறும் நண்பர்கள் மட்டும்தானா? நட்பாக மட்டும்தான் பழகிக் கொண்டிருந்தார்களா? பாலியல் குற்றவாளியென அறியப்பட்ட, தண்டிக்கப்பட்ட நபருடன் அப்படியென்ன இவர்களுக்கு எல்லாம் அதிசயமான நட்பு?

அரசுத் தலைவர்களும் அதிகார வர்க்கமும் பெருவணிக — பெருந்தொழில் நிறுவனங்களும் அறக்கட்டளைகளின் புரவலர்களும் இந்த ஒற்றை நபரால் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றனர் — தேவைப்படும் இடங்களில் மனித பலவீனத்தை அல்லது விகாரத்தை ஆயுதமாகக் கொண்டு. அரசு ரகசியங்களாகக் கருதப்படுகிறவை எல்லாமும் சர்வசாதாரணமாகப் பகிரப்பட்டிருக்கின்றன. ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு இருந்திருக்கின்றனர்; அதற்காக உரிய பலன்களையும் பெற்றிருக்க வேண்டும்.

2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு — எப்ஸ்டீன் என்கிற நபர் சிறுமிகளுடன் வல்லுறவு கொண்ட நபர் என்றும் பாலியல் குற்றவாளி என்று தண்டிக்கப்பட்ட பிறகு — அவருடன் தொடர்பில் இருந்த எவரொருவருமே தங்களுக்கு எதுவும் தெரியாதென்றெல்லாம் நியாயப்படுத்திக் கொண்டுவிட முடியாது. எல்லாமும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் தங்கள் தொடர்பு எத்தகையதென்றாலும் ஒவ்வொருவரும் முன்வந்து தங்கள் ‘சுத்தத்தை’ உறுதிப்படுத்துவதுதான் நேர்மையானதாக இருக்கும். உங்களில் பாவம் செய்யாதோர் எவரெவரோ என அவரவரே தான் முன்வந்து அறிவித்துக் கொள்ளல் வேண்டும்!

எப்ஸ்டீன் கோப்புகளின் இருண்ட பக்கங்களிலும் அவற்றின் இண்டு இடுக்குகளிலும் குற்றமிழைத்த எத்தனை பேர் இன்னும் ஒளிந்துகொண்டிருக்கிறார்கள்? இவற்றையெல்லாம் தாண்டி இந்த வக்கிர பாலியல் சாம்ராஜ்யத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் கிடைக்கப் போவது எத்தகைய நீதி?

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



# தமிழே

## காலத்தை வென்று நிற்கும் தமிழரின் அழியாத ஆவணங்கள்

இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறை **(Archaeological Survey of India - ASI)** வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இந்தியாவில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள சுமார் 1,00,000 கல்வெட்டுகளில், 60,000—க்கும் மேற்பட்டவை தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது, இந்தியாவின் மொத்த கல்வெட்டுச் சான்றுகளில் பெரும்பான்மையானவை தமிழில் அமைந்துள்ளன. இது தமிழின் தொன்மைக்கும், தொடர்ச்சியான எழுத்து மரபிற்கும், மற்றும் தமிழர் நாகரிகத்தின் ஆழ்ந்த வரலாற்று வேர்களுக்கும் மிகச்சிறந்த சான்றாகும்.

கல்வெட்டுகள் வெறும் கற்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் அல்ல; அவை காலத்தைத் தாண்டி நம்முடன் பேசும் தமிழரின் உயிருள்ள வரலாற்றுப் பதிவுகள்.

### கல்வெட்டுகளின் தொடக்கமும் தொன்மையும்

தமிழ்நாட்டில் எழுத்து மரபு என்பது நாம் பொதுவாகக் கருதுவதை விட மிகவும் தொன்மையானது என்பதை அகழாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

பாண்டிய நாட்டிலுள்ள கானப் பேரெழில் எனும் ஊரில் (சிவகங்கை மாவட்டத்தில்) அமைந்துள்ள கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட பானை ஓடுகளில் காணப்படும் எழுத்துக்கள், கி.மு. 6—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என கார்பன் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இது தமிழர் சமூகத்தில் எழுத்தறிவு மிகப் பழமையான காலத்திலேயே இருந்ததை வெளிப்படுத்துகிறது.

பாண்டிய நாட்டின் தலைநகராம் கூடல் மாநகர் (மதுரை) அருகிலுள்ள மாங்குளம் என்ற சிற்றூரின் மலையில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகள், கி.மு. 3—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவை கழக (சங்க) காலப் பாண்டிய மன்னன் நெடுஞ் செழியனின் ஆட்சிக் காலத்தை நேரடியாக உறுதிப்படுத்தும் இன்றியமையாத வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன.

கரூருக்கு அருகிலுள்ள புகலூர் கல்வெட்டு, சேர மன்னர்களின் மூன்று தலை முறையினரைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது. அதேபோல், திருக்கோயிலூருக்கு அருகிலுள்ள (ஜம்பை) வாளையூர் கல்வெட்டு, கழக கால வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சியை ‘சதியபுதோ’ என குறிப்பிடுகிறது. சதியபுத்ரர் என்பதன் பொருள் ‘சத்தியத்தின் மகனார்’ அல்லது ‘அறத்தின் மகனார்’ என்பதாகும்.



மௌரிய மன்னர் அசோகர், தனது கல்வெட்டுகளில் குறிப்பிட்ட ‘சதிய புத்ரர்’ என்பவர்கள் அதியமான் அரச குடும்பத்தினரே



# தமிழே


என்பதை இது உறுதிப்படுத்தும் இன்றியமையா வரலாற்றுச் சான்றாகும்.

எழுத்துக்களின் பரிணாம வளர்ச்சி:

தமிழின் வீர நடை

தமிழ் எழுத்துக்கள் காலத்தின் ஓட்டத்தில் தங்களை உருமாற்றிக் கொண்டாலும், தங்களின் அடிப்படை தனித்தன்மையை ஒருபோதும் இழக்கவில்லை.

'தமிழி' (பிராமி) என்பது தமிழின் தொடக்க கால எழுத்து வடிவமாகும். அசோகர் காலத்து பிராமி எழுத்துக்களிலிருந்து இது மாறுபடுகிறது



## பொற்கொடி நங்கையாள்

குறிப்பாக, தமிழுக்கே உரிய 'ழ', 'ற', 'ன', 'ள' போன்ற ஒலிகளை வெளிப்படுத்தும் எழுத்துக்கள் இதில் தெளிவாகக் காணப்படுகின்றன. இது தமிழ் மொழியின் தனித்துவமான ஒலியமைப்பை வெளிப்படுத்துகிறது.




பின்னர், கல்வெட்டுகளை வேகமாகவும் எளிதாகவும் செதுக்குவதற்காக, எழுத்துக்களின் நேர்க்கோடுகள் வளைந்து வட்டெழுத்து வடிவமாக மாறின. இது குறிப்பாக சேரர் மற்றும் பாண்டியர் ஆட்சிப் பகுதிகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

பல்லவர் மற்றும் சோழர் காலங்களில், தமிழ் எழுத்து முறை மேலும் செம்மைப்படுத்தப்பட்டது. வடமொழிச் சொற்களை எழுதுவதற்காக கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டபோதிலும், தமிழ் எழுத்துக்கள் தங்களின் இயல்பான தமிழி மரபிலிருந்தே தொடர்ந்து வளர்ச்சி பெற்றன.

கி.பி. 11—ஆம் நூற்றாண்டில், குறிப்பாக இராசராச சோழன் காலத்தில், ஒரு சீரான எழுத்து முறை நிலைபெற்றது. அதுவே இன்று நாம் பயன்படுத்தும் நவீன தமிழ் எழுத்துக்களின் அடிப்படையாக அமைந்தது.

கல்வெட்டுகளின் வகைகளும் நோக்கங்களும்.

தமிழகக் கல்வெட்டுகள் பல்வேறு சமூக, அரசியல், மற்றும் பண்பாட்டுச் செறிவுகளைப் பதிவு செய்கின்றன.

மெய்க்கீர்த்திக் கல்வெட்டுகள்.

மன்னர்களின் வீரச் செயல்கள், வெற்றிகள், மற்றும் அரிய செயல்களைச் செய்து முடித்தலைப் (சாதனையை) பதிவு செய்கின்றன. இவை அரசியல் வரலாற்றின் மிகச்சிறந்த சான்றாக விளங்குகின்றன.




அறக்கட்டளைக் கல்வெட்டுகள்

கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலம், பொன், மற்றும் பிற கொடையளித்தல் பற்றிய குறிப்புகளை வழங்குகின்றன. இவை அக்கால சமூகத்தின் பொருளாதார அமைப்பை வெளிப்படுத்துகின்றன.

நடுகற்கள்

போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக நிறுவப்பட்டவை. இவை தமிழர் சமூகத்தில் வீரத்திற்கு அளிக்கப்பட்ட மரியாதையை வெளிப்படுத்துகின்றன.

செப்புப் பட்டயங்கள்

குறிப்பாக பாண்டியர் கால வேள்விக்குடி செப்பேடு போன்றவை, மன்னர்களின் தலைமுறையினர் மற்றும் அரசியல் நிகழ்வுகளை விரிவாக பதிவு செய்கின்றன.

சமூக மேலாண்மையும் — குடியாட்சி முறைகளும்

தமிழகக் கல்வெட்டுகள் தமிழர் சமூகத்தின் மேம்பட்ட நிர்வாகத் திறனையும் முடியாட்சியில் குடியாட்சி முறைகளையும் வெளிப்படுத்துகின்றன.

கச்சிக் கோட்டத்தில் (காஞ்சிபுரம் மாவட்டம்) உள்ள உத்தரமேரூர் கல்வெட்டு, சோழர் காலத்தில் நடைமுறையில் இருந்த 'குடவோலை' முறையைப் பற்றிய விரிவான விளக்கத்தை வழங்குகிறது.

அதேபோல், பல கல்வெட்டுகள் ஏரிகள் வெட்டுதல், நீர்ப்பாசன முறைகள், மற்றும் நீர் மேலாண்மை தொடர்பான தகவல்களையும் பதிவு செய்துள்ளன. இது தமிழர் சமூகத்தின் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வெளிப்படுத்துகிறது.

கடல் கடந்த தமிழ்

தமிழர் நாகரிகம் தமிழக எல்லைகளுக்குள் மட்டுமே அல்லாமல், கடல் கடந்து உலகின் பல பகுதிகளுக்கும் பரவியிருந்தது என்பதை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

எகிப்து மற்றும் செங்கடல் வணிகப் பகுதிகளில் கண்டறியப்பட்ட தமிழி எழுத்துக்கள், தமிழர்கள் கி.மு. காலத்திலேயே கடல் கடந்து வணிகம் செய்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. இது தமிழர் நாகரிகத்தின் உலகளாவிய தொடர்புகளையும் வணிகத் திறனையும் வெளிப்படுத்துகின்றன

தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ள 60,000—க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள், நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற அழியாத அறிவுச் சொத்துக்கள். இவை வெறும் கற்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் அல்ல; காலத்தை வென்று நிற்கும் தமிழர் வரலாற்றின் உயிருள்ள சாட்சிகளாகும்.

இந்தக் கல்வெட்டுகள், தமிழர் சமூகத்தின் அரசியல், பொருளாதாரம், மொழி, பண்பாடு, மற்றும் அறிவியல் முன்னேற்றங்களை வெளிப்படுத்தும் காலப் பெட்டகங்களாக விளங்குகின்றன. இவற்றைப் பாதுகாப்பதும், ஆய்வு செய்வதும், அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

கல்வெட்டுகள், தமிழர் வரலாற்றின் கற்சிலாச் சாட்சிகளாக, காலத்தை வென்று நம் முன் நிற்கின்றன. அனைத்து தமிழர்களும் கல்வெட்டு எழுத்துக்களையும் ஓலைச்சுவடி எழுத்துக்களையும் படிக்கும் அறிவை பெறுவதற்காக, அவற்றை பள்ளிக் கல்வித் திட்டத்தில் ஒரு பாடமாக கொண்டு வருவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

# அபிநய நாயகி



# புரட்சி

## ‘கன்னடத்துப் பைங்கிளி’ சரோஜா தேவி

பத்ம விருது பெற்றவரும், கன்னடம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி என நான்கு மொழிகளிலும் 200க்கும் மேற்பட்டப் படங்களில் நடித்து, அபிநய சரஸ்வதி என்ற பட்டத்துக்குச் சொந்தக்காரருமான பழம்பெரும் நடிகை சரோஜா தேவி.

தமிழ்த்திரை ஜாம்பவான்கள் மூவர்களாக இருந்த எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் என மூவருக்குமே ஜோடியாக நடித்து புகழ்பெற்றவர்.

தன்னுடைய 17 வயதில் 1955ஆம் ஆண்டு, மகாகவி காளிதாசா என்ற கன்னட படத்தில் அறிமுகமாகி, தமிழில் கடைசியாக, நடிகர் சூர்யா — நடிகை நயன்தாரா நடிப்பல் வெளியான ஆதவன் திரைப்படத்திலும், கன்னடத்தில் புனித் ராஜ்குமார் நடிப்பில் வெளியான நட்டசாரகபவுமா என்ற படத்திலும் நடித்திருந்தார்.

நடிகரும், முன்னாள் முதல்வருமான எம்ஜிஆர், தனக்கு மிகவும் அதிர்ஷ்டமான நாயகியாக, ஜெயலலிதாவுக்கு அடுத்து, சரோஜா தேவியைத்தான் நினைத்திருந்தார். அவருடன் சரோஜா தேவி 26 படங்களில் ஜோடியாக நடித்துள்ளார்.

நாடோடி மன்னன், திருடாதே, தாய் சொல்லைத் தட்டாதே, பாசம், தர்மம் தலை காக்கும், பெரிய இடத்துப் பெண், எங்க வீட்டுப் பிள்ளை, அன்பே வா உள்ளிட்ட படங்கள், எம்ஜிஆர் — சரோஜா தேவி நடிப்பில் வெளியாகி சக்கைப்போடு போட்டவை. இன்றளவிலும் இந்தப் படங்களைப் பற்றி மக்கள் பேசிக்கொண்டிருப்பதே, இப்படங்களின் வெற்றி. இவர்களுக்கு இடையே திரைப்பட பொருத்தம் மக்களுக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது.





# பைங்கிளி

இருவரும் இணைந்து கடைசியாக 1967ஆம் ஆண்டு அரச கட்டளை என்ற படத்தில் நடித்திருந்தனர். அதன்பிறகு, எம்ஜிஆர் — ஜெயலலிதா ஜோடிக்கு மக்களிடையே விருப்பம் அதிகரிக்கத் தொடங்கியது.

நடிகர் சிவாஜி கணேசனுடன் இணைந்து சரோஜா தேவி 22 படங்களில் நடித்துள்ளார். அனைத்துமே சூப்பர் டூப்பர் படங்களாக அமைந்திருந்தன. அதில், தங்கமலை ரகசியம், சபாஷ் மீனா, பாகப் பிரிவினை, பாலும் பழமும், பார்த்தால் பசி தீரும், புதிய பறவை, ஆலயமணி உள்ளிட்டப் படங்கள், ரசிகர்களின் நெஞ்சில் நீங்கா இடம்பிடித்தவை.

நடிகர் ஜெமினி கணேசனுடன் இணைந்து இவர் 17 படங்களில் நடித்துள்ளார். நடிகர் ஜெமினி கணேசனுடன் இணைந்து இவர் 17 படங்களில் நடித்துள்ளார். இவர்கள் இணைந்து நடித்து வெளியான படங்களின் வரிசையில் கல்யாண பரிசு, கைராசி, பாசமும் நேசமும், தாமரை நெஞ்சம், கண் மலர், பணமா பாசமா, வாழ்க்கை வாழ்வதற்கே உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன. இந்த ஜோடியையும் மக்கள் ஏற்றுக் கொண்டனர்.




'திரையுலகில் என்னுடைய துரித வளர்ச்சிக்குக் காரணம் எம்ஜிஆர் என்ற மூன்றெழுத்து மந்திரம்'' என்று சரோஜா தேவி, தன்னுடைய கட்டுரையில் பதிவு செய்திருந்தார். ஆனால் அத்தகைய பெருமை பெற்ற எம்ஜிஆரின் படங்கள் அதிகமாக விலை பேசப்பட்டதற்கும் சரோஜா தேவி முக்கியக் காரணமாக இருந்தார்.



மன்னாதி மன்னன் படச்சுவரொட்டிகளில் சரோஜா தேவியின் ஸ்டில் இல்லாததால் விநியோகஸ்தர்கள், படப்பெட்டியைத் தூக்க மறுத்துப் பின் வாங்கினார்கள் என்ற சரோஜா தேவியின் முக்கியத்துவத்துக்கான அளவுகோல்.

கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த சரோஜா தேவி, 1955 ஆம் ஆண்டில் தனது 17 வயதில் மகாகவி



காளிதாஸ் என்ற கன்னட மொழிப்படத்தில் அறிமுகமானார். அதன்பின் 1957 ஆம் ஆண்டில் பாண்டுரங்க மகாத்யம் என்ற தெலுங்கு படத்தில் நடித்தார். அதற்குப் பின்பே தமிழ்த்திரையுலகில் பாதம் பதித்தார்.

சரோஜா தேவியை தமிழ்த்திரையுலகில் அறிமுகம் செய்தது யார்?

சிவாஜி நடித்த ‘தங்கமலை ரகசியம்‘ படத்தில் நாயகியான ஜமுனாவிடம் தங்கமலை ரகசியத்தைச் சொல்லும் அந்தக் காட்சிதான் சரோஜா தேவியின் அறிமுகக் காட்சி என்கிறார் அவர். ஆனால் சரோஜா தேவியை தமிழகமே ‘யாரிந்த தேவதை’ என்று கேட்க வைத்தது நாடோடி மன்னன் படம்தான். எம்ஜிஆர் தயாரித்து இயக்கி நடித்த அந்தப் படத்தில் சரோஜா தேவியின் அழகும், கொஞ்சும் குரலும் தமிழ் ரசிகர்களை கவர்ந்து இழுத்தது. அந்தப் படம்தான் அக்காலத்தில் ஒரு கோடி வசூலைத் தொட்டது. அதிலிருந்து வசூல்ராணியாகவே அவர் வலம் வந்ததாக தமிழ்த்திரை விமர்சகர்கள் பலரும் அவரைப் பற்றி ஒருமித்த ஒரு குறிப்பைச் சொல்கின்றனர்.

சரோஜா தேவி நடித்த முதல் படம் ‘தங்கமலை ரகசியம்‘ 1957 ஜூன் 29 அன்றுதான் வெளியானது. ஆனால் அடுத்த 3 ஆண்டுகளில் அதாவது 1960 கோடையில் சரோஜா தேவி உச்ச நட்சத்திரமாக ஜொலித்தார். கடும் உழைப்பும், தொழிலில் பக்தியும் இருந்தாலும் பண விஷயத்தில் சரோஜா தேவியின் தாயார் கறார்.

கண்டிப்பு நிறைந்த கன்னடக் குடும்பத்தில் கர்நாடக காவல்துறையில் பணியாற்றி பைரப்பாவின் மகளான சரோஜா தேவியின் தாயார் ருத்ரம்மா, சம்பள விஷயத்தில் ‘கறார் கண்ணம்மா’. தனது மகளுக்கு கேட்ட சம்பளம் கிடைக்கவில்லை என்றால் மறுநொடியே அடுத்த கம்பெனிக்கு டேராவைத் தூக்கி விடுவார். அதனால்தான் அவர் திரைத்துறையை விட்டு விலகி, பல ஆண்டுகளான நிலையிலும், பெரும் கோடீஸ்வரியாக ஒரு ராஜ வாழ்க்கையை வாழ்ந்ததாகச் சொல்கிறார் நடிகர் சிவகுமார்.

‘‘வழக்கமாக திரைத்துறையை விட்டு விலகிய பல நடிகைகள் வயதான காலத்தில் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆனால் 87 வயதிலும் செல்வமும் செல்வாக்கும் மிக்க நல்லதொரு வாழ்க்கையை அவர் வாழ்ந்து மறைந்திருக்கிறார்.’’ என்கிறார் சிவகுமார்.

சிறு வயதிலிருந்தே தான் சரோஜா தேவியின் ரசிகன் என்று குறிப்பிடும் மூத்த நடிகர் விஜயகுமார், ‘‘அவருடைய கொஞ்சும் தமிழ் கேட்பதற்குத் திகட்டாதது. திரையில் மட்டுமின்றி நேரில் பேசும்போதும் அதே கொஞ்சு தமிழில் அன்போடு விசாரிப்பார். எம்ஜிஆர் மறைந்து 30 ஆண்டுகளாகிவிட்டாலும் இன்றும் அவருடைய படங்கள் பேசப்படுவது போல, சரோஜா தேவியின் படங்களும் நிலைத்து நிற்கும்.’’ என்கிறார்.

முதல் முதலாக கன்னடப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைக்கும் முன், தனக்கு குடும்பத்திலும், பொது வெளியிலும் நிகழ்ந்த அனுபவங்களை ஓர் இதழில் எழுதியிருந்தார் சரோஜா தேவி. 1938—ஆம் ஆண்டு ஜனவரி 7—ஆம் தேதி கர்நாடகாவில் பிறந்த சரோஜா தேவியின் இயற்பெயர் ராதாதேவி கவுடா.

குடும்பத்தில் 3 மகள்களுக்குப் பின் அடுத்ததாவது

17 ANNIVERSARY CELEBRATIONS 17 YEARS தமிழ்



மகனாகப் பிறக்க வேண்டுமென்று பல கோவில்களுக்கும் சரோஜா தேவியின் பாட்டனார் யாத்திரை போய் வந்தபின்னும் 4 வது மகளாகப் பிறந்தவர் சரோஜா தேவி. சிறு வயதிலேயே முடக்குவாதம். அது சரியாக விரதமிருந்து கோவில் சென்றிருக்கிறார் சரோஜா தேவியின் தாயார் ருத்ரம்மா. அதற்கு பாட்டனார், 'இது இருந்தால் என்ன செத்தால் என்ன... இது ஒன்றும் பையன் இல்லையே.. இதற்கு எதற்கு நீ பட்டினி கிடக்கிறாய்' என்று திட்டுவாராம். அவர்தான் இப்போது என்னை 'என் செல்லக்கண்ணு' என்று கொஞ்சுகிறார் என்று தன் வாழ்க்கை அனுபவத்தை பதிந்துள்ளார் சரோஜா தேவி.

யாரென்றே தெரியாமல் எம்ஜிஆருக்கு வணக்கம் சொன்ன சரோஜா தேவி!

'கச்ச தேவயானி' என்ற படத்தில் தமிழ்த்திரையுலகின் முதல் கனவுக்கன்னி டி.ஆர். ராஜகுமாரியை அறிமுகம் செய்த இயக்குநர் கே.சுப்ரமணியம், அந்தப் படத்தின் கன்னடப் பதிப்புக்கு நாயகியாக சரோஜா தேவியை தேர்வு செய்து, அவரின் குடும்பத்தையே சென்னைக்கு குடிபெயர வைத்துள்ளார். அந்தப் படத்தின் படப்பிடிப்பு மதிய உணவு இடைவேளையில் நடந்த ஒரு சுவராஸ்ய நிகழ்வையும் சரோஜா தேவி எழுதியிருக்கிறார்.

"மதிய உணவு இடைவேளை. பக்கத்தில் படப்பிடிப்பில் இருந்த ஹீரோ, அங்கே வந்தார். ஆயிரம் சூரியனின் பிரகாசம் அவரிடம். எல்லோரும் எழுந்து வணக்கம் சொன்னார்கள். நானும் சொன்னேன். யார் இவர் என்று இயக்குநரிடம் கேட்டார் அவர். போகும்போது கன்னடத்தில் 'செனாதியம்மா' (சௌக்கியமா) என்று கேட்டு விட்டு காஃபி குடிக்கிறியா என்றும் கேட்டார். நான் தலையை மட்டும் ஆட்டினேன். அவர் போன பின்பே, யாரென்று கேட்டேன். எல்லோரும் ஆச்சரியமாக 'என்ன உனக்கு எம்ஜிஆரைத் தெரியாதா' என்றார்கள். அப்போ அவர் யாரு, அவர் செல்வாக்கு என்ன எதுவுமே தெரியாது. அப்புறம் வருத்தப்பட்டேன். ஆனால் அன்றைக்குத் தெரியாது. அவருடன் நான்தான் அதிகப்படங்களில் நடிக்கப் போகிறேன் என்று!"




எம்ஜிஆரைப் பற்றி இப்படி எழுதிய சரோஜா தேவி, சிவாஜியைப் பற்றி இப்படி எழுதியிருந்தார். "பாகப்பிரிவினை படத்தில் பிரசவ வேதனையில் நான் நடிப்பது போன்று ஒரு காட்சி. அந்த சூழ்நிலையில் ஒரு பெண் எப்படி இருப்பாளோ அதுபோல நான் துடிதுடிப்பது போல நடிக்க வேண்டும். நான் எப்படி நடிக்க வேண்டுமென்று இயக்குநர் பீம்சிங் நடித்துக் காட்டினார். டேக்கில் எனக்கு பயம் வந்தது. அப்போது சிவாஜி சார்தான், 'பிரசவ நடிப்புதானே இங்கே வா சரோஜா' என்று கூப்பிட்டு, அருகிலுள்ள ஒரு மரத்தைக் கட்டிக் கொண்டு அற்புதமாக நடித்துக் காட்டினார். தான் கேள்விப்பட்ட ஒரு விஷயத்தை வைத்து, ஒரு பெண்ணின் உணர்வை அப்படியே நடிப்பில் கொண்டு வந்தார். அதனால்தான் அவர் நடிகர் திலகம்!"

ஜெமினி கணேசனைப் பற்றி, "காதல் மன்னன் படித்தவர் என்பதை விட பண்பு மிக்கவர். சில நேரங்களில் நானே அவரது நடிப்பில் குறை கூறி, இந்தக் காட்சியில் இப்படி நடித்தால் சிறப்பாக இருக்கும் என்று ஆலோசனை கூறுவேன். இவள் என்ன சொல்லித்தருவது என்று கருதாமல் என் யோசனையை உடனடியாக ஏற்றுக் கொள்வார். சினிமாவில் சிருங்காரம் சொட்டும் நடிப்பை எனக்குக் கற்றுத்தந்தவர். காதல் காட்சிகளில்



என் நடிப்பு இயற்கையாக இருக்க ஜெமினி அண்ணாச்சியே காரணம்!" என்று சரோஜா தேவி கூறியுள்ளார்.

கடந்த ஆண்டில் ஒரு வார இதழுக்கு பேட்டியளித்திருந்த சரோஜா தேவி, தான் நடித்த படங்களிலேயே தனக்குப் பிடித்த படம் என்று 'இருவர் உள்ளம்' படத்தைக் குறிப்பிட்டிருந்தார். அந்த படத்துக்கு வசனம் எழுதியவர், முன்னாள் முதல்வர் கருணாநிதி. படத்தைப் பார்த்து விட்டு, 'நல்லா நடிச்சிருக்கே' என்று கலைஞர் என்னைப் பாராட்டினார் என்று கூறியிருந்தார் சரோஜா தேவி.

எம்ஆர் ராதாவின் ஐடியா!

பாகப்பிரிவினை படத்தில் எம்.ஆர் ராதாவை விளக்குமாறால் விளாசுவது போன்று ஒரு காட்சியில் நடிக்க வேண்டிய கட்டாயம் சரோஜா தேவிக்கு. ரத்தக்கண்ணீரில் எம்.ஆர் ராதாவின் குரலைக் கேட்டே நடுங்கிப் போன சரோஜா தேவிக்கு இந்த காட்சியில் எப்படி நடிப்பது என்று அச்சம். அப்போதுதான் எம்.ஆர் ராதா, இயக்குநருக்கு ஒரு ஐடியா கொடுத்திருக்கிறார்.

"நானும் சரோஜாவும் ரூமுக்குள்ள இருக்கிறது மாதிரி முதல்ல படம் பிடிச்சிடுங்க. அதுக்கு அப்புறம் என் அலறல் சத்தம் மட்டும் வெளியே கேட்கும். நான் குய்யோ முய்யோன்னு அடிதாங்காம அலறிட்டு வெளியே ஓடி வருவேன். நம்ம மக்கள் மகா புத்திசாலிங்க. உள்ளுக்குள்ளே என்ன நடந்திருக்கும்னு அவுங்களே யூகிச்சுக்குவாங்க! என்று எம்.ஆர் ராதா ஐடியா கொடுத்தார்" என அந்த அனுபவத்தையும் சரோஜா தேவி பதிவு செய்திருக்கிறார்.

தென்னிந்திய திரைப்படங்களில் சரோஜா தேவி நிறையப்படங்களில் நடித்திருந்தாலும் மலையாளப் படத்தில் நடித்தது இல்லை. "அந்தக் காலத்தில் மலையாளப் படங்களில், நடிகைகள் முண்டு எனப்படும் துண்டு மட்டும் அணிந்து நடிப்பார்கள். மலையாளப்படங்களில் நடிப்பதற்கு நிறைய அழைப்புகள் கேரளத்தில் இருந்து வந்தும் எனக்கு அப்படி நடிக்க விருப்பமில்லை." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூந்தலுக்கு விளக்கெண்ணெய் தேய்த்துக் குளிப்பது, மஞ்சள் பூசிக்குளிப்பதைத் தவிர, அழகிற்காக வேறெதுவும் செய்வது இல்லை என்று சரோஜா தேவி ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். உடலை கச்சிதமாக வைத்திருப்பதற்குக் காரணம் கேட்டபோது, "சின்ன விஷயத்துக்கு ஓஹோன்னு சந்தோஷப்படமாட்டேன். சின்ன துக்கத்தையும் தாங்க முடியாமல் உருகிடுவேன். சாப்பாடு உட்பட எல்லா விஷயத்துலயும் நான் லைட். உடற்பயிற்சி செய்வது கிடையாது. இடையில் பத்தியமா சாப்பிட்டேன். இப்போ அதுவுமில்லை." என்றார். சரோஜா தேவி தமிழில் நடித்த முக்கியமான 10 படங்களின் தொகுப்பு இங்கே.

நாடோடி மன்னன்

எம்ஜிஆர் இயக்கி தயாரித்த அவரின் சொந்தப்படமான நாடோடி மன்னனில் எம்ஜிஆருக்கு நாயகியாக நடிக்க முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டவர் பானுமதி. ஏற்கெனவே எம்ஜிஆரும் பானுமதியும் இணைந்து நடித்த பல படங்கள் சூப்பர் ஹிட் ஆனதால் அதிலும் அவரே ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் படப்பிடிப்பில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நாயகியாக நடிப்பதிலிருந்து பானுமதி விலகிக்கொள்ள, எம்ஜிஆருக்கு நாயகியாகும் வாய்ப்பு சரோஜா தேவிக்கு வந்தது. இளவரசி ரத்னா பாத்திரத்தில்



நடிக்க வைக்க பல புதிய நடிகைகளைத் தேர்வு செய்து, படமெடுத்துப் பார்த்து, அந்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததால் சரோஜா தேவியை இறுதி செய்தார் அந்தப் படத்தில் நடித்தபோது, சரோஜா தேவியின் மழலை கலந்த தமிழுக்கு ஏற்ப வசனங்களை மாற்றியமைத்ததாக அவர் கூறியிருக்கிறார்.

அன்பே வா

என்றைக்குப் பார்த்தாலும் கண்களுக்கும் மனதுக்கும் இதமும் சுகமும் தரும் ஒரு அற்புதமான பொழுது போக்கு படம் ‘அன்பே வா’. பிரபல இயக்குநர் ஏ.சி.திருலோகச்சந்தர் இயக்கத்தில் வெளியான இந்தப் படம் முழுக்க முழுக்க சிம்லாவில் படமாக்கப்பட்டது. எம்ஜிஆருடன் மோதும் ஒவ்வொரு காட்சியிலும் சரோஜா தேவியின் செல்லச் சிணுங்கலும், பொய்க்கோபமும், காதலை வெளிப்படுத்தும் முகபாவங்களும் அன்றைய ரசிகர்களால் பெரிதும் ரசிக்கப்பட்டது.

இந்த படத்திற்காக வாலியால் எழுதப்பட்ட ‘நான் பார்த்ததிலேயே அவள் ஒருத்தியைத்தான் நல்ல அழகி என்பேன் நல்ல அழகி என்பேன்’ என்ற பாடல், சரோஜா தேவிக்காகவே எழுதப்பட்ட வரிகளாக இருக்கும். இதே படத்தில்தான் ‘ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்‘ பாடலும், அதில் எம்ஜிஆர் மற்றும் சரோஜா தேவியின் ஆடை, அணிகலன், அலங்காரம் அத்தனையும் அசல் ராஜா—ராணிக்கான ஓர் அடையாளம் போலிருக்கும்.

சிவாஜி புரடக்சன்ஸ் தயாரிப்பில் வெளியான முதல் படம் புதிய பறவை. சிவாஜியை ஒரு எதிர்மறை நாயகனாகக் காண்பிக்கும் வித்தியாசமான கதைக்களம் உள்ள அந்த ‘காதல் த்ரில்லர்’ படத்தை இந்திப்பட இயக்குநர் தாதா மிராசி இயக்கிருந்தார்.

கோபாலின் முதல் மனைவி இறந்ததன் மர்மத்தை அறியும்போது சரோஜா தேவி உடைந்து உருக்குலைந்து ‘கோபால் கோபால்’ என்று கதறும் காட்சி அக்கால ரசிகர்களை காட்சிக்குள்ளேயே உறைய வைத்தது.




பாலும் பழமும்

பீம்சிங் இயக்கத்தில் உருவான இந்தப் படத்திலும், புதிய பறவை படத்தைப் போலவே சௌகார் ஜானகியும், சரோஜா தேவியும் இரண்டு கதாநாயகிகளாக நடித்தனர். ஆனால் அதிலும் ஒரு சிறப்பம்சமாக சரோஜா தேவி, சாந்தி மற்றும் நீலா என்ற இரண்டு கதாபாத்திரங்களில் இரட்டை வேடத்தில் நடித்தார். அந்த இரண்டு பாத்திரங்களுக்கும் இடையிலும் தனது நடிப்பால் ஒரு பெரும் வித்தியாசத்தைக் காண்பித்திருப்பார்.

தாய் சொல்லைத் தட்டாதே

எம்ஜிஆர்—சரோஜா தேவி இணையின் அதிரிபுதிரி வெற்றிப்படங்களில் இதுவும் ஒன்று. 1961 தீபாவளிக்கு வெளியான இந்தப் படத்தை தேவர் பிலிம்ஸ் தயாரித்திருந்தது. மிகக்குறுகிய காலத்தில் எடுக்கப்பட்டு, மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற படம் இது என்று தன் படங்களைப் பற்றிய பதிவில் சரோஜா தேவி கூறியிருக்கிறார்.

கல்யாணப்பரிசு வெள்ளிவிழாவுக்கு எந்த ஊருக்குமே வர இயலாது என்று கைவிரித்த சரோஜா தேவி, இந்தப் படத்தின் 100 வது நாள்



வெற்றிக்காக கோவை, மதுரை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், நெல்லை என பல ஊர்களுக்கும் எம்ஜிஆருடன் சென்று வந்தார்.

தமிழே அறியாத சரோவை வசந்தியாக்குவதற்குள் ஸ்ரீதரின் யூனிட்டே திண்டாடித் தெருவில் நின்றது என்று இனிய அவஸ்தை என்று அந்தப் படப்பிடிப்பைப் பற்றி சித்ராலயா கோபு எழுதியிருக்கிறார். ஒரு ரூபா என்பதை சரோஜா தேவி தன் கொஞ்சும் தமிழில் 'வரு ரூபா' என்றே திரும்பத்திரும்பச் சொல்லி, ஒரு நாளையும் ஏகப்பட்ட ஃபிலிமையும் தின்று ஏப்பம் விட்டதாக கோபு அதில் நகைச்சுவையாக குறிப்பிட்டிருக்கிறார்.



அந்தப் படத்தில் வரும் 'வாடிக்கை மறந்ததும் ஏனோ' என்ற பாடலுக்காக சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டதாக ஒரு பேட்டியில் சரோஜாதேவி கூறியிருக்கிறார். அந்தப்படம் 25 வாரங்கள் ஓடி வெள்ளிவிழா கண்டது. ஜெமினியின் முதல் வெள்ளிவிழா படம் என்ற முறையில், அதிலிருந்து சாவித்திரிக்கு அடுத்ததாக ஜெமினியின் ஆஸ்தான நாயகியாக சரோ இடம் பிடித்தது கல்யாண பரிசில் இருந்துதான்.

எல்.வி.பிரசாத் இயக்கத்தில் உருவான இந்தப் படத்துக்கு வசனம் எழுதியது முன்னாள் முதல்வர் கருணாநிதி. எழுத்தாளர் லட்சுமியின் பெண் மனம் என்ற நாவலை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படத்தில் சிவாஜிக்கு ஜோடியாக சாந்தா என்ற கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் சரோஜா தேவி. தமிழை தட்டுத்தடுமாறிப் பேசும் சரோஜா தேவிக்காகவே எளிமையான வசனங்களை கருணாநிதி எழுதியிருந்ததாக விமர்சனங்களில் எழுதப்பட்டது. இந்தப் படமும் அக்காலத்தில் வசூல் சாதனை நிகழ்த்திய வெற்றிப்படங்களில் ஒன்றானது.

கடந்த 1997 ஆம் ஆண்டில், சிவாஜி கணேசனுடன் விஜய் இணைந்து நடித்த 'ஒன்ஸ்மோர்' படத்தில், இந்த


படத்திலிருந்து எடுக்கப்பட்ட சில காட்சிகள், பயன்படுத்தப்பட்டன. அந்தப் படத்தை இருவர் உள்ளத்தின் தொடர்ச்சி என்று வர்ணித்தார் சரோஜா தேவி. சரோஜா தேவிக்குப் பிடித்தமான விஷயங்கள், மல்லிகைப்பூ, மாம்பழம், உதட்டுச் சாயம், வெண்மை நிறச் சேலைகள், கறுப்பு சாந்துப் பொட்டு. இஷ்ட தெய்வம் அனுமான்.



ஒன்ஸ்மோர் படப்பிடிப்பின் போது சிவாஜி வீட்டுச் சாப்பாட்டை முதலில் சாப்பிட மறுத்தபோது, சிவாஜி கூறியதாக ஒரு விஷயத்தை சரோஜா தேவி பதிவு செய்திருக்கிறார்.

''சரோஜா! நமக்கு வேண்டியவுங்க ஒவ்வொருத்தரா போயிட்டே இருக்காங்க. பாலையாண்ணன், சகஸ்ரநாமம், ராதா அண்ணன், எம்.ஜி.ஆர் வரைக்கும் போயாச்சு, நான் பப்பி (ஜெயலலிதா), நீன்னு கொஞ்சம் பேர் தான் இருக்கோம். நம்மள்ல யார் முந்துறோம்னு நமக்குத் தெரியாது. இருந்தாலும் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலா அனுசரணையா இருப்போம்!" என்று சிவாஜி கூறியதாகச் சொல்லியிருக்கிறார்.





சிவாஜி கணேசன் கடந்த 2001 ஜூலை 21 அன்று தனது 72 வது வயதில் இறந்தார். ஜெயலலிதா, 2016 டிசம்பர் 5 அன்று தனது 68 வது வயதில் மரணம் அடைந்தார். சரோஜா தேவி, 2025 ஜூலை 14 அன்று தனது 87 வது வயதில் மரணமடைந்துள்ளார்.

திரைப்படத்துறையினராலும், ரசிகர்களாலும், 'கன்னடத்துப் பைங்கிளி', 'அபிநய சரசுவதி' போன்ற அடைமொழிகளால் அழைக்கப்படுகிறார். இந்திய அரசின் பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகள் உள்பட பல்வேறு விருதுகளை இவர் வென்றுள்ளார். தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவின் மாநில அரசு விருதுகளையும் பெற்றுள்ளார்.

























சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

பாகம் - 2

14

## 14. இயற்கை செய்த கிளர்ச்சி !

கொற்றவன்

சாளரத்தின் வழியே அந்த அறைக்குள் வந்து விழுந்த மஞ்சள் மதியின் ஒளியில், கயல்விழியும் வளவத்திரையனும், ஒருவர் முகத்தை ஒருவர் காண்கிற அருகாமை எனும் ஏகாந்த நிலையில், காதல் சுடர் அந்த அறை முழுதுமே ஒளிர்ந்து கொண்டிருந்தது.

“இங்கே தேவியார் இட்டதுதான் சட்டம்! தேவியார் எங்கும் இருக்கலாம்! எப்படியும் இருக்கலாம்!”

அவ்வாறு வளவத் திரையன் சொன்னதன் பொருள் விளங்கியபோது கயல்விழியின் கோவையிதழ்களில் குறுநகை தவழ்ந்ததுடன், அவளது கெண்டை விழிகளில் துள்ளிக் குதித்த குறுகுறுப்பும் வளவத்திரையனைத் தூண்டில் போட்டு இழுப்பதாய் இருந்தது.

“தேவியாரின் சிரிப்புக்கு பொருள் என்னவோ?” என வளவத்திரையன் தயக்கத்துடன் வினவினான்.

“தாங்கள் சொன்னதன் பொருள் என்னவோ?”

“தேவியார் இங்கே எப்படியும் இருக்கலாம் என்றேன்!”

“அதைத்தான் நானும் கேட்கிறேன்!”



“இதில் பொருள் விளங்க என்ன இருக்கிறது? தங்கள் மாளிகையில் தாங்கள் எப்படியும் இருக்கலாம் என்பதுதானே பொருள்!”

“நேரடியாக அதைத்தான் கூறினீர்களா?”

“இதில் வேறு பொருள் ஏதும் தோன்றியிருந்தால் தாராளமாகச் சொல்லலாம்!”

“சொல்லலாம்தான்! ஆனால்...” என்றவள், நாணம் மேலிட மீண்டும் இதழ் சுழித்துச் சிரித்தாள்.

“இப்போதும் சிரிக்கிறீர்கள்! இளவரசியாரின் திருவுளம் இன்னதென்று விளங்கவில்லையே?”

“அடேயப்பா! மரியாதை ஏகத்துக்கும் ஏறிக் கொண்டிருக்கிறதே!“

“ஏன் தங்களுக்கு மரியாதை தரக் கூடாதா?”

“தங்களிடத்தில் நான் மரியாதையை விரும்பவில்லை!”

“தேவி... நான்...” என எதையோ சொல்ல வந்த வளவத்திரையன், சற்றே தயங்கினான்.

“நீங்கள் என் இதயத்தை ஆளும் மன்னர்! இன்னுமா தங்களுக்கு நான் விளக்க வேண்டும்?”

“அதற்கான அருகதை எனக்கு இருக்கிறதா

என்பதுதான் என் ஐயம்!”

“அது எப்போதோ தங்களுக்கு இருக்கிறது!”

“தேவி!... இப்போது என் நிலையைத் தங்களுக்கு எப்படி சொல்வதெனத் தெரியவில்லை!”

“ஏன் என்னிடம் இன்னும் தயக்கம்? சற்று முன்பு நாம் இருந்த நிலைக்குப் பிறகும்...” என, நாணம் மேலிட வார்த்தைகளை முடிக்காமல் நிறுத்தி, புன்னகை பூத்தாள்.

அவள் எந்த நிலை குறித்து இதனைச் சொல்கிறாள் எனத் தெரிந்தாலும், ஏதும் அறியதவனைப் போலவே அவன் அமைதி காத்தாலும், அப்படியென்ன நிலையில் இருந்து விட்டோம் என்ற வினாக்குறியை அவன் முகம் காட்டியது.

“நான் மஞ்சத்தில் தங்கள் மடிமீது...” என அவள் அரைகுறையாக அதனை விளக்க முற்பட்டாள்.

“ஆம்! மயக்கத்தில் கிடந்தீர்கள்!”


“அதற்கும் முன் நான் அரைகுறை நினைவில்...”

“அப்படியா?”

“ஆம்! தங்கள் நினைவில் ஏதேதோ எண்ணங்கள் ஓட, மெய்மறந்து கிடந்தேன்.”

“ஆம்! கிடந்தீர்கள்!”

“அந்த நிலையில்...”



“தாங்கள் தயங்கும் வேறொன்றும் நடக்கவில்லை அந்த நிலையில்!”




“அந்த நிலை அப்போது இல்லைதான்...” எனத் தன் பார்வையை சாளரம் பக்கம் திருப்பினாள்.

“இப்போது இருக்குமோ என எண்ணுகிறீர்களா?”

“அதை உறுதியாகச் சொல்லத் தெரியவில்லை!”

“ஏன் உறுதி இல்லை?”

“தெரியவில்லை!”

“எனக்குத் தெரியும்!” என்றவனைக் கூர்ந்து நோக்கினாள் கயல்விழி.

“எழுகின்ற எண்ணங்களுக்கும் நிகழ்கின்ற கணங்களுக்கும் வேறுபாடு மலையளவு உண்டு!” என்றான் அவன்.

“ஓகோ! இன்னும் என்னவெல்லாம் எனக்குத் தெரியாதது தங்களுக்குத் தெரியுமோ?” என்றவாறு, மஞ்சத்திலிருந்து எழுந்தாள்.

வளவத்திரையனோ சட்டெனத் தன் வலக்கரத்தால்




அவள் வலக்கரத்தைப் பற்றியதில், அவனை நோக்கித் திரும்பியவள், அப்படியே சிலையாய் நின்றாள்.

இருவரது விழிகளும் நேர்க்கோட்டில் சந்தித்தன.

அந்த நேரம் சாளரத்தின் வழியே பாய்ந்த நிலவின் பொன்னொளி பெரும் மாயம் செய்ததில், அவள் பொற்சிலை போல் தெரிந்தாள். வளவத்திரையனோ அந்த மாயத்தைக் கண்டதற்கு சாட்சியாக அமர்ந்த நிலையிலேயே சிலைபோல் அசையாதிருந்தான்.

பொன்னொளியில் மின்னிய கயல்விழி என்ற பொற்சிலையின் பேரழகு ஏற்படுத்திய தாக்கத்தால் அவளையே வெறித்தபடி இருந்த வளவத்திரையன், தங்கநிலவின் ஒளி வீச்சில், தங்கமென அங்கம் மின்னும் அந்த நங்கையின் கன்னம், கழுத்து, நாசி உதடு என யாவும் மாயம் புரிந்ததை உணர்ந்தான்.

அதிலும், அவன் தன் கரம் பற்றி விட்ட நாணத்தில் மெள்ள நெளிந்தவளின் ஒவ்வொரு அசைவும், அவனது உறுதியான உள்ளத்தைப் பெரிதும் அசைத்துப் பார்த்தன.

கயல்விழியும் கூட, பெரும் மாயையில் அகப்பட்டவளாகவே இருந்தாள். சற்று முன்பு வரை கனவுலகில் அவனோடு சுதந்திரமாகச் சஞ்சரித்தபடி கதைகள் பேசிக் கொண்டிருந்தவளுக்கு நனவுலகில் அவ்வாறு பேச இயலாமல், நாணத்தில் வாயடைத்துப் போயிருந்தாள்.

கயல்விழியின் கை பிடித்திருந்தவன், அவளை அப்படியே மீண்டும் மஞ்சத்தில் அமர வைத்தான். இம்முறை அமர்ந்தவள், அவனுக்கு மிக நெருக்கமாகவே அமரும்படி ஆயிற்று!

அப்படி அருகில் அமர்ந்ததால் அவனது

தோளோடு தோள் உரசும் நிலையும் உண்டாயிற்று! அவளது வலக்கையை தன் வலக்கையால் பற்றியிருந்தவன், தன் இடக்கையைக் அவளது தோள் மீது ஆதரவாக வைத்தான். அந்த நிலையில், மயங்கிப் போனவளாய் அவள் அவன் தோள் சாய்ந்தாள்.

அதுநாள் வரை துன்பக் கடலில் நீந்தியவளுக்கு, அவன் தோள் எனும் தோணி பெரும் ஆறுதலை அள்ளித் தந்தது.

“இளவரசி...”

“ம்!..”

“திடீரென எழுந்ததற்குக் என்ன காரணம்?”

“காரணம் ஏதுமில்லை!”

“இப்படி அமர்ந்திருப்பதில் தங்களுக்கு ஏதும் ஆட்சேபணை இல்லையே?” என ஆதரவாய் அவளது தோள் தடவியவாறே வினவினான்.

“இப்படிப் பேசுவதும் கேட்பதும்தான் ஆட்சேபத்துக்குரியது!”

“அனுமதி பெறுவது தவறா?”

“அனுமதி கேட்கும் நிலையில்தான் இன்னமும் இருக்கிறீர்களா?”



அந்தக் கேள்விக்குப் பொருள் புரிந்ததன் காரணமாய் “கயல்விழி...” என அவன் அதரங்கள் அனிச்சையாய் அசைந்த அதேநேரம், அவனது இடக்கை அவளது தோளில் இருந்து மெள்ள இறங்கி அவளது கொடியிடையில் பதிந்ததும், இன்ப மின்னல் தாக்குண்டவளாய் சிலிர்தாள்.




அக்கணத்தில், அவளது அழகிய வதனத்தில் தோன்றிய மலர்ச்சி வளவத்திரையனின் உள்ளத்தில் இனம்புரியாத கிளர்ச்சியைத் தூண்டியதில், அந்தக் கொடியிடையில் அவன் பிடிமானம் இன்னும் இறுகியது.

“இந்தக் கடமையையும் உரிமையையும்தான் தங்களிடம் நான் எதிர்பார்த்தேன்.” என்றவாறே வளவத்திரையனின் தோளில் சாய்ந்தவள், மேலும் அவனது காதோரம் சில வார்த்தைகளை உதிர்த்தாள்.

“நான் தங்களுக்கானவள் என்ற உரிமையில் என் பெயர் சொல்லி அழைக்கின்ற இன்பத்தை, நீங்கள் இளவரசி என்று அழைக்கும் அந்தப் பட்டம் தராது!”

“உண்மையாகவா?”

“ஆம்! ஒரு பெண் தனக்கான மரியாதையை விடவும், தன்



மனங்கவர்ந்தவரிடம் அதிக உரிமையைத்தான் மிகவும் எதிர்பார்ப்பாள். அவரிடம் தன்னை இழப்பதில்தான் அதிக இன்பம் பெறுவாள். அதில் மரியாதை கலந்திருந்தால், பெரும் இடையூறாக இருக்கும் என்பது தங்களுக்கு இப்பொழுது புரிகிறதா?"

தன் காதோரம் கிசுகிசுத்தவளின் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொண்டவன், மெள்ள தன் மடியில் அவளைச் சாய்த்தவாறு மார்போடு சேர்த்து அணைத்ததில், இருவரும் கண்ணோடு கண் கலந்து மிக நெருக்கமான அந்தச் சூழலில் அவள் இதழ்கள் துடித்தன. விழிகள் கிறங்கின.

அடுத்து என்னவும் நிகழலாம் என்பதை அவளும் உணர்ந்திருந்தாலும், அவனது செயலையும், உரிமையையும் அன்பு மிகுதியுடன் ஏற்றுக் கொண்டாள்.

வளவத்திரையனின் உள்ளம், அணை உடைத்த வெள்ளமாய் கரை புரண்டோடியது. தன்னை இந்தப் பேரழகுச் சுரங்கம் தனக்குள் இழுத்துக் கொள்கிறதே மயங்கினான்.



சில நேரங்களில், மனதில் தோன்றும் காட்சிகள், அது இன்பமாகவோ துன்பமாகவோ இருந்தாலும், பூகம்பம்போல் தாக்கும் போது, அது பெரும் விளைவுகளை உண்டாக்கும்.

அந்த எண்ணங்கள் தோன்றும் நேரம் சில கணங்களாகவே இருந்தாலும் கூட, அது ஏற்படுத்துகின்ற தாக்கம் காலத்துக்கும் மாறாததாகவும், மனிதவாழ்வை உயர்த்துவதாகவோ தாழ்த்துவதாகவோ அமைந்து விடும்!

அப்படிப்பட்ட எண்ணைகள் ஆட்சி செய்யும் அந்தத் தருணத்தில், கயல்விழியும் வளவத்திரையனும் எதைப்பற்றியும் யோசிக்கும் நிலையில் இல்லை!

அவ்விருவருக்கும் அதுவொரு பேரின்பம் கலந்த மாய நிலையாகவே இருந்தது.

அந்த அறையே அவர்களுக்கு தேவலோகம் போல் மாறிக் கொண்டிருந்தது.

அந்த மாளிகையே அந்தரத்தில் மிதப்பது போலிருந்தது.

குணகடலை ஒட்டிய பகுதியான போரையார்ரிம் அம்மாளிகைக்குள், கடற்காற்று சாளரத்தின் வழியே சில்லென மாறி வீசத் தொடங்கியது. அந்தக் காற்றோடு கலந்து பலவித நறுமணமும் அந்த அறைக்குள் நுழைந்தது.

மாளிகைக்கு உள்ளே அடர்ந்து வளர்ந்திருந்த மகிழமும், மாளிகைக்கு வெளியே மண்டிக் கிடந்த தாழைப் புதர்களில் இருந்து கிளர்ந்த தாழை மலர்களும், வாரி வழங்கிய வாசத்தில், அந்த மாளிகையே நறுமணத்தில் மிதந்தது.

இயற்கை செய்த இந்தப் பெரும் கிளர்ச்சியில் மயங்காத மனமும் உண்டோ?

அந்நேரத்தில் மகிழ மரத்தில் புள்ளினங்கள் புதுராகம் பாடின.

அவர்களும் அந்நேரம் மயங்கினார்கள்.

ஒருவரை ஒருவர் மறந்தார்கள்.

உயிரோடு உயிராக கலந்தார்கள்.

(கனவு தொடரும்...)


HAPPY
Anniversary
CELEBRATION
VARSHA
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA
17
YEARS
THANK
YOU

## மகா ரசிகர்

“வாரும்வோய் கவிராயரே நுமது
கவியோவி தென்ன புகலும்?
வாக்கிலே பொருளிலே கருதிநீர் மறைவாக
வைத்ததெப் புதையல் ஐயா?
மாகாவியம் என, மனசிலே கொண்டு நீர்
மார் தட்டி வந்து நின்று,
கோரிய காசிலே குறிவைத்து எம்மை நீர்
குடுசங்கி போட வந்தீர்?
அங்குமிங்கும் ஓடும் அரணையைப் பல்லியை
அல்திணை ராசி ஒன்றை
அரியாசனத் தேற்றி அதனிலும் கடையான
அருவருப்பைக் கவியிலே
சிங்காரமாய்க் கூட்டிச் சின்னத்தன மிகு
சிறுமையைக் காட்டி விட்டீர்!
ஆலாலமுண்டவன் அற்றைநாள் மதுரையில்
அணி செய்த தமிழணங்கை
வாலாயமாய் வந்து வாக்கிலே குப்பையை
வாரிச் சொரிந்த கவியே!
ஏலாத செயலிலே ஏனையா முயலுதீர்?
ஏதும் பிழைக்க மார்க்கம்
அறியாது, அறியாத அவலட்சணத் துறை
அதிசயக் கருவின் விளைவை
மூலைக் கொருத்தராய் மூச்சுத் திணறவே
முயன்றிடில் கவியாகுமோ?

**புதுமைப்பித்தன்**

## அற்புதர்கள்

அற்புதங்களைக் கண்டதாய்
சாட்சியம் சொல்லுகையில்
பாதி மூடிய விழிகளில்
புருவங்கள் வளைந்து
மேலெழுந்திருக்கும்.

ஒவ்வொரு சொல்லையும்
அழுத்தி, நீட்டி
உருக்கிச் சொல்வார்கள்
யாரை வேண்டுமானாலும்
ஒருமையில் விளிக்கலாம்.
எங்கிருந்தாவது
ஒரு பல்லி கத்தும் அல்லது
மணியோசை கேட்கும்

தலையிலடித்துச்
சத்தியம் செய்வார்கள்
பின்கழுத்தில்
மயிர்க்கூச்செரியும்
மார்புகள் விம்ம
இமைகளைச் சுருக்கி நெரித்து
துளி கண்ணீர் பிழிவார்கள்.

அற்புதம் மெய்யோ பொய்யோ—
வாய் பிளந்து கேட்கும்
கூட்டத்தின் நடுவே
எப்போதும் நிராகரிக்கப்படும்
அவர்களே
அந்த கொஞ்ச நேரத்திற்காவது
அற்புதமாகிறார்கள்.

**அய்யனார். ஆ.**



# காலண்டர்

ஆள் பார்த்து
அனுப்பி வைத்தானே,
காலண்டர் எனக்கெதற்கு?
ஆனாலும் நன்றி—
அனுப்பி வைத்தவருக்கு,
அங்க சங்கமற்ற ஆளுக்கு,
துணையற்ற வழிப்போக்கனுக்கு,
தனக்குள்ளே தூர் எடுக்கும்
சஞ்சாயக்காரனுக்கு
வழிபாடாய் வந்த
காலண்டருக்கு நன்றி.

அண்டாத ஆழத்தில் கால் அண்ட
காலண்டர் கைக்கோலா?
தனக்கென்று தலைவைத்துப்
படுக்க அகமில்லார்க்கு
காலண்டர் குடைநிழலா?
உள்ளுக்கும் வெளிக்கும்
கணநேரக் கடலில்
கடியார மின்றி
நகரும் கப்பலுக்கு
காலண்டர் துருவமீனா?

ஜன்னல் வழி ரவி விரல்
கடிகார முள்ளும்,
கருங்காக்கை நிழலமர்
பகல் முள்ளும்,
மஞ்சள் வலைவீசும்
மாலை முள்ளும் பார்த்து
மேடேறி பள்ளத் திறங்கி கோடி
காணப்போகும் கண்ணுக்கு
காலண்டர் எதற்கு?

கடிகாரம் சிலந்தி
காலண்டர் வலை.
காலம் வெளி காரண காரியத்
தொடர்பு— அவ்வளவும்
நான் விட்ட பட்டங்கள்
காலண்டர் வால்தானே.
ஆனாலும் காலண்டரனுப்பிய
நினைப்புக்கு வணக்கம்
குழந்தைகளுக் காகும்.

**ந. பிச்சமூர்த்தி**

# மழை பெய்யச் சிந்தித்தல்

## பைஸல் அஹமத்




முறையாக கடலை
கற்பனை செய்ய வேண்டும்
கடல் கற்பனைக்குள்
வரும்போது
நீர் வழியில் சிந்திவிடாமல்
பார்த்துக்கொள்ள வேண்டும்
இங்கு கடலைக் கற்பனை செய்வதற்கு
கடலை விட பெரிய
மூளையுள்ள தலை தேவையில்லை
நீரின் நிறத்தை மாற்றுதல்,
ஆவியாக்குதல்,
ஆகாயத்திற்கு கொண்டு செல்லுதல்,
நீர் இறங்க வேண்டிய இடங்களையும்,
நேரத்தையும் தீர்மானித்தல்
கடல் நீருக்கு மழை எனப்
பெயரிடுதல் எல்லாம்
உங்கள் கற்பனை
படிப்படியாக செய்திட வேண்டும்
இடி மின்னலை கற்பனை செய்யும்போது
எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.
இறுதியாக மழை
உங்கள் கண்களின் வழியாகத்தான்
பெய்யும்

## நிஜ வாழ்விலும் சேர்ந்த ஜோடி!



இணைந்த நட்சத்திரங்கள் ஜொலிக்கட்டும்!

கீதா கோவிந்தம், டியர் காம்ரேட் போன்ற திரைப்படங்களில் ஒன்றாக நடித்த விஜய் தேவரகொண்டாவும், ரஷ்மிகாவும் நீண்ட காலமாக காதலித்து வந்த நிலையில், ராஜஸ்தானின் உதயபூரில், இருவரும் நெருங்கிய குடும்பத்தினர் முன்னிலையில் கடந்த 26 தேதியன்று பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்து கொண்டனர். அவர்களது திருமண புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன. திருமண நிகழ்வை ஆவணப்படமாக்குவதற்கு நெட்ஃபிளிக்ஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

## ‘பிளாக் கோல்டு’ முக்கோணம்!



வட்டம் சதுரம் எனக் கூட்டம் கூடட்டும்!

எம்.மூர்த்தி தயாரிப்பில், இயக்குநர் தீரன் எழுதி இயக்கும் படம் ‘பிளாக் கோல்டு.’ சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பரபரப்பாக நடைபெற்ற இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. எட்டு தோட்டாக்கள், ஜீவி போன்ற படங்களில் கவனம் பெற்ற நடிகர் வெற்றி, பிரியாலயா முக்கியப் பாத்திரத்தில் நடித்துள்ளனர். ஆக்ரோஷமான திரில்லர் முக்கோணக் காதல் கதை எனப் படக்குழு கூறுகிறது.

# 'சூர்யா 47' பக்கா தமிழ் படம்!





சூர்யா, நஸ்ரியா நஸ்ரின், நஸ்லன் நடிப்பில், 'ஆவேசம்' பட இயக்குநர் ஜித்து மாதவன் இயக்கத்தில் 'சூர்யா 47' படம் உருவாகி வருகிறது. சூர்யாவுடன் ஜித்து மாதவன் இணைகிறார் என்றதுமே, இது ஒரு மலையாளப் படத்தின் ரீமேக்காகவோ, இருமொழிப் படமாகவோ இருக்கும் என்ற விவாதம் சமூக வலைதளங்களில் எழுந்த நிலையில் இயக்குநர் ஜித்து மாதவன், 'சூர்யா 47' ஒரு பக்கா தமிழ்ப் படம், மலையாளப் படத்தின் தழுவல் இல்லாமல், தமிழ் கலாச்சாரப் பின்னணியைக் கொண்ட கதைக்களம்' என்று விளக்கம் அளித்திருக்கிறார்.

# அதிக விருதுகளை அள்ளியவர்!





தமிழ், தெலுங்கு, மலையாளம் எனத் தென்னிந்திய மொழிகளில் சிறந்த நடிகையாக வலம் வருபவர் நடிகை சாய் பல்லவி. தென்னிந்திய சினிமாவிலேயே இந்தத் தலைமுறை நடிகைகளில் அதிக ஃபிலிம்பேர் விருதுகள் வென்றவர் என்கிற சாதனையைச் செய்துள்ளார். முதன் முதலாக பிரேமம் திரைப்படத்திற்காக பிலிம்ஃபேர் விருதை வாங்கிய சாய் பல்லவி, லவ் ஸ்டோரி, ஷ்யாம் சிங்கா ராய், விராத பர்வம், கார்கி, அமரன் என அடுத்தடுத்து சிறந்த நடிகைக்கான விருது என, கடந்த 10 ஆண்டுகளில் 15 திரைப்படங்களில் நடித்துள்ள சாய் பல்லவி, இதுவரை மாநில விருதுகள் உட்பட 32 விருதுகளை வென்று அசத்தியுள்ளார்.



# தலவலம்

## திருஅன்பில்

### சுந்தரராஜன் கோயில்

புவனகிரி செயபாலன்

'நாகத்து அணைக் குடந்தை வெகா திருஎவ்வுள்
நாதத்து அணை அரங்கம் பேர் அன்பில் சொல்லுங்க மேடம்
நாகத்து அணைப்பாற் கடல் கிடக்கும்
ஆதி நெடுமால் அணைப்பார் கருத்தனா வான்.'
—திருமழிசை ஆழ்வார்.



காவிரி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள 108 வைணவ திவ்ய தேசங்களில் இது ஐந்தாவது திவ்ய தேசம்.

பெருமாள் மூலவர் — வடிவழகிய நம்பி. (கிழக்கு நோக்கி)

உற்சவர் — சுந்தர ராஜன்

திருநிலை — புஜங்க சயனம்

தாயார் — அழகிய வல்லி நாச்சியார், லட்சுமி.

விமானம் — தாரக விமானம்

தீர்த்தம் — மண்டுக புஷ்கரணி, கொள்ளிடம்.

தல விருட்சம் — தாழம்பூ




தொன்மம் — ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல்.

பெயர்கள்

திரு அன்பில், மேல் அன்பில், திருமாலயன் துறை, மண்டூகபுரி, பிரம்மபுரி என்பன இத்தலத்துப் பெயர்கள்.

அன்பில்

ஒரு சமய பிரம்மாவிற்கு, உலகில் உயிர்களை நாமே பிறக்க வைக்கிறோம். ஒவ்வொரு உயிரும் அழகுடன் இருப்பதற்கு நாம்தான் காரணமாக இருக்கின்றோம். அந்த அழகிய உயிர்களுக்கெல்லாம் மூலாதாரமாக இருக்கும் நாம்தான் அனைவரிலும் அழகானவர் என்ற ஆணவம் உண்டானது.

மேலும் அனைவரையும் படைக்கும் தன்னை யாரும் வணங்குவதில்லையே என்ற ஆதங்கமும் எழுந்தது. பிரம்மாவின் எண்ணத்தை அறிந்த மகாவிஷ்ணு, அவரது ஆணவத்தை விட்டு விடும்படிச் சொல்லி பார்த்தார். பிரம்மாவோ கேட்கவில்லை. எனவே அவரை பூமியில் சாதாரண மனிதனாக பிறக்கும்படி சபித்து விட்டார்.

பூலோகத்திற்கு வந்த பிரம்மா ஒவ்வொரு தலங்களுக்கும் சென்று சுவாமியை எண்ணி தவம் இருந்தார். அப்போது மகா பிஷ்ணு பேரழகு வாய்ந்த மனிதர்கா அவர் முன் வந்தார். அவரைக் கண்ட பிரம்மா, இவ்வளவு அழகான எவரையும் நான் இதுவரை பார்த்ததில்லையே என்று எண்ணி, ‘நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?’ எனக் கேட்டார்.

அவரிடம் விஷ்ணு அன்பாக, ‘அழகு என்பது நிலையற்றது. ஆணவம் ஒருவனை அழிக்கக் கூடியது. இவ்விரண்டு குணங்களையும் கொண்டிருப்போர் சிறப்பான வாழ்க்கையைப் பெறுவதில்லை!’ என்று உபதேசம் செய்து பள்ளி கொண்ட கோலத்தில் அவருக்குக் காட்சி தந்தார்.



உண்மையை உணர்ந்து கொண்ட பிரம்மா, ஆணவம் ஒழியப் பெற்றார். பிரம்மாவின் வேண்டுதலுக்காக விஷ்ணு இத்தலத்தில் பள்ளிகொண்ட கோலத்திலேயே எழுந்தருளினார்.

பிரம்மா மீது அன்பு கொண்டு அவருக்காக மகாவிஷ்ணு எழுந்தருளிய தலம் என்பதால், இத்தலம் ‘அன்பில்’ என்ற பெயர் பெற்றது.

சுதபா — மண்டூகம்




சுதபா என்னும் மகரிஷி தன் தவ வலிமையால் நீரிலும் நிலத்திலும் வாழும் பண்புகளைக் கொண்டவர். மகாவிஷ்ணு மீது பக்தி கொண்ட அவர், ஒருநாள் தண்ணீருக்கடியில் தவம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அவரைத் தேடி துர்வாச முனிவர் வந்தார். தவத்தில் மூழ்கி இருந்த சுதபா முனிவர், துர்வாசர் வந்ததைக் கவனிக்கவில்லை. வெகு நேரம் காத்திருந்தும் சுதபா தன்னைப் பார்க்க வில்லை என்ற கோபத்தால் சுதபாவை தவளையாக மாறும்படி சாபம் விட்டு விட்டார்.

மண்டூகமான முனிவர், தன் தவறை உணர்ந்து துர்வாச முனிவரிடம் சாப விமோசனம் கேட்டார். ‘உனக்குக் கிடைத்த சாபம் முற்பிறவியில் செய்த கர்மத்தால் கிடைத்ததாகும். தகுந்த காலத்தில் மகாவிஷ்ணு தரிசனம் கிடைக்கப் பெற்று சாப விமோசனம் பெறுவாய்’ என்றார்.

அதன்படி பெருமாலை நோக்கி பிரார்த்தனை செய்து இத்தலத்தில் உள்ள திருவடிவழகிய



நம்பி பெருமாளை வழிபட, மகாவிஷ்ணு சுந்தர ராஜராகக் காட்சி தந்து சாப விமோசனம் கொடுத்தார்.

பஞ்சரங்கத் தலங்கள்

அரங்கம் என்றால் ஆறு பிரியும் இடத்தில் அமைந்துள்ள மேடான தீவு அல்லது திட்டு என்று பொருள். காவிரி ஆறு பிரியும் இடத்தில் அடுத்தடுத்து அமைந்துள்ள ஐந்து வைணவ தலங்கள் பஞ்சரங்கத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்த ஐந்து தலத்திலும் திருமால் பள்ளி கொண்டிருக்கும் நிலையில் இருப்பார். அவை முறையே, ஆதிரங்கம் (ஸ்ரீரங்கப்பட்டணம்) மத்திய அரங்கம் (சிவ சமுத்திரம்) அப்பாலரங்கம் (கோவிலடி) சதுர்த்தரங்கம் (சாரங்கபாணி கும்பகோணம்) பஞ்சரங்கம் (மயிலாடுதுறை திரு இந்தளூர்) என்பன. இதுபோல் இருக்கும் தலங்களில் அன்பிலும் ஒன்று.

கோயில்

கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு பார்த்து கட்டப்பட்ட மூன்று நிலை ராஜகோபுரம்.

கருவறை

கருவறை கூரை அமைப்பு கோபுர வடிவில் உள்ளது. திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட கோலத்தில் இருப்பதைப் போல் மகாவிஷ்ணு தாரக விமானத்தின் கீழ் எழுந்தருளியுள்ளார். பக்கத்தில் ஸ்ரீதேவி (லட்சுமி), பூதேவி மற்றும் பிரம்மா



உள்ளனர். பிரகாரத்தில் 12 ஆழ்வார்கள், நரசிம்மர், ஸ்ரீ வேணுகோபாலர், லட்சுமியுடன் நரசிம்மர் மற்றும் அனுமன் சன்னதிகள் உள்ளன.

ஆண்டாள்

கருவறை முன் மண்டபத்தில் தனி சன்னதியில் ஆண்டாள் தெற்கு நோக்கி நின்ற நிலையிலும், உற்சவர் ஆண்டாள் அமர்ந்த கோலத்தில் எழுந்தருளி சேவை சாற்றுகின்றனர். ஒரே இடத்தில் (சன்னதி) ஆண்டாளின் இரு கோலங்களையும் காண்பது அபூர்வம்.

திருமண தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து வேண்டிக் கொண்டால் திருமணம் நடக்கும் என்பது நம்பிக்கை. தேவலோகக் கன்னியான ஊர்வசி, தனது அழகு மீது தனக்கு கர்வம் வந்து விடாமல் இருப்பதற்காகவே இத்தல ஆண்டாளை வணங்கிச் சென்றுள்ளாள் என்கிறது தலபுராணம்.


தாயார்

அழகிய வள்ளி தாயார், தனி சன்னதியில் எழுந்தருளி அருள் பாலிக்கிறார். ஆடி, தை வெள்ளிக்கிழமைகளில் தாயார் புறப்பாடும், புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாள் திருமஞ்சனமும் நடைபெறும்.

ஆதி திருவரங்கம்

இத்தல பெருமாள், ஸ்ரீரங்கநாதருக்கு முன் தோன்றியதாக நம்பப்படுவதால் அன்பில், ஆதி திருவரங்கம் என்றும் போற்றப்படுகிறது. இத்தலம் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் சிறப்பித்து




தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
17th
ANNIVERSARY
17
WE WANT TO SAY
THANK YOU
FOR YOUR SUPPORT



கூறப்பட்டுள்ளது.

சிவன்

சிவபெருமான் பிரம்மாவின் ஐந்தாவது தலையைக் கொய்ததால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. அந்தத் தோஷம் நீங்க, இத்தல பெருமாளை வணங்கி, அந்தக் கபாலத்தில் அன்னமிட்டு சாபம் (தோஷம்) நீங்கப் பெற்றார்.

திருமழிசை ஆழ்வார்

திருமழிசை ஆழ்வார் இங்கு பெருமாளை வழிபட வந்தபோது, மக்களால் அவர் பெரிதும் கேலி செய்யப்பட்டார். அவர்களுக்கு பாடம் கற்பிக்கவும், தான் ஒரு பக்திமான் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என எண்ணி பெருமாள் குறித்து மங்களாசாசனம் செய்ய, மகாவிஷ்ணு வடிவழகிய நம்பியாக காட்சியளித்து சேவை சாற்றினாராம்.

கட்டிடக்கலை

திராவிட கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்ட இக்கோயில் கி.பி 6 முதல் 9 ஆம் நூற்றாண்டுகளில் ஆழ்வார்களால் போற்றப்பட்டது. திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் போன்றோர் பாசுரம் செய்துள்ளனர். இக்கோயில் கி.பி எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இடைக்காலச் சோழர்களால் கட்டப்பட்டதாகவும், பின்னர் விஜய நகர மன்னர்கள் மற்றும் மதுரை நாயக்கர்களின் ஆட்சி காலத்தில் திருத்தம் செய்து கட்டியதாகவும் தெரிகிறது.




சுந்தர சோழர்

இப்பகுதியை ஆண்ட சுந்தர சோழர், இத்தலப் பெருமாள் மீது அளவற்ற பக்தி கொண்டவர். பல போர்களில் வென்றதனால், அதற்காக இக்கோயிலுக்கு ஏராளமான செல்வங்களையும் நன்கொடையாக வழங்கினார். அவரது பிரதான மந்திரி அனிருத்த பிரம்மராயர், கோவில் அமைந்துள்ள அன்பிலைச் சேர்ந்தவர் என்றும் இத்தலத்துக்கு இடைக்காலச் சோழர்களின் பங்களிப்பை இங்குள்ள செப்பேடுகள் மூலம் தெரிய வருகிறது.

இத்தலத்தில் வான்மீக முனிவருக்கு மகாவிஷ்ணு காட்சி கொடுத்ததாக இங்குள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

திருவிழாக்கள்

வருடத்தில் மாசி மாதத்தில் கொண்டாடப்படும் தீர்த்தவாரியையும், மார்கழியில் நடக்கும் வைகுண்ட ஏகாதசியையும் மங்களாசாசனம் செய்த ஆழ்வாரின் திருநாளையும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பரிகாரம்

முற்பிறவியில் செய்த பாவங்களையும் போக்க வேண்டுமானால், இத்தலத்து மண்டூக புஷ்கரணியில் நீராடி, பெருமாளை நோக்கிப் பிரார்த்தனை செய்தால் போதும்.

எதிரிகளை வெற்றி பெறவும், போட்டிகளில் வெல்லவும், வியாபாரத்தில் முன்னேற்றம் காணவும், பொதுவாழ்வில் முன்னுக்கு வரவும் இத்தலப் பெருமாளுக்கு பாலாபிஷேகம் செய்து வந்தால் அத்தனை நலன்களையும் பெறலாம்.

பூஜை

தினசரி ஆறு கால பூஜைகளும், சிறப்பு பூஜைகளும் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசின் இந்து அறநிலைத்துறையால் நிர்வகிக்கப்படுகிறது.

கோவில் திறக்கும் நேரம்

தினமும் காலை 7 மணி முதல் 12.30 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்


திருச்சியில் இருந்து 30 கி.மீ. தூரத்திலும், லால்குடியில் இருந்து 8 கி.மீ.தொலைவிலும் உள்ள மேல் அன்பில் என்ற இடத்தில் இத்தலம் உள்ளது.

(தொடரும் வலம்.....)




# திருவள்ளுவரின் அறிவுக் கோட்பாடு

## ஆசிரியர்: முனைவர் சு. வேல்முருகன்






**விலை : ரூ. 150**

**வெளியீடு:**

**கம்பன் பதிப்பகம்,**
**முருங்கப்பாக்கம்,**

**புதுச்சேரி– 605 004**

*அறிவெனப்படுவது யாது? பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு — அடுத்த பிறப்பு எனக் கூறப்படும் பேதைமையைப் போக்கித் தெளிந்த உண்மையை நிலைநாட்டுவதுதான் அறிவு என விளக்கம் பகிர்கின்ற வள்ளுவர், அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாக உடையவன் அறிவிலே தெளிவுடையவன். பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பம் போலக் கருதிக் காப்பாற்ற முனையாதவர்களுக்கு அறிவு இருந்தும் அதனால் எந்தப் பயனுமில்லை என்கிற விளக்கத்தால், அறிவின் தெளிவும், அதனால் விளைகின்ற பயனையும் படம் பிடிக்கின்றார்.*

*கற்றவரெல்லாம் அறிவுடையோர் என்றால் இல்லை, பல அரும்பெரும் நூல்களைப் படித்தாலும், அதன்படி முயல வேண்டும், இதுவே அறிவைப் பெறும் வழி. அந்த வகையில், உயர்ந்தோர் ஏற்றுக் கொண்ட ஒழுக்கம் எனும் பண்போடு வாழக் கற்காதவர்கள் பல நூல்களைப் படித்திருந்தும்கூட அறிவில்லாதவர்களே என்றெல்லாம் தெளிவுறுத்தும் வள்ளுவரே உலகிற்கு அறிவு புகட்டிய முதல் ஆசான் என்கிற நூலாசிரியர், வள்ளுவரின் கோட்பாடுகள் அக்கால மூடப் பழக்க வழக்கங்களை கடுமையாக சாடுகிறது என்பதையும் காட்டுகிறார். தமிழர்கள் வீட்டில் இருக்க வேண்டிய நல்ல நூல் இது என்றால் மிகையல்ல!*



சிறுகதை

# அஞ்சும் மூணும் எட்டு!

பானு ரவி

ஜன்னலைத் திறந்தபோது, சற்றுத் தொலைவில் மூர்த்தியும் சாருவும் நடந்து வருவது தெரிந்தது. வெள்ளைச் சட்டையும், வெள்ளை நிக்கரும் போதாமல் போய்விட்டது போல், சாருவின் உடம்பைக் கவ்விப் பிடித்திருந்தன. வெளேரென்ற உடம்பும், மூங்கிலில் விளைந்தாற் போன்ற நெகுநெகுவென்ற வளர்த்தியும்.. யாருடைய கண்ணாவது படப் போகிறதே என்றிருந்தது ஜானகிக்கு, டென்னிஸ் விளையாடிய பின் உடை மாற்றிக் கொண்டு வரும்படி, எத்தனையோ தடவை சொல்லியாயிற்று.

“அம்மா, ஒரே பசி. ஐம் கோயிங் டு ஆர்டர் பீட்ஸா” சொல்லிக்கொண்டே வந்தவளை இடை மறித்தாள் ஜானகி, “சாரு, பீன்ஸ்கறியும், மோர்க்குழம்பும் பண்ணி இருக்கேன். சீக்கிரம் குளிச்சிட்டு வா, சுடச்சுடச் சாப்பிடலாம்.”

“ஓ! நோம்மா இன்னிக்கு பீட்ஸா சாப்பிடணும் போல இருக்கு!”

அநேக விஷயங்களில் சாரு இப்படித் தான். துடிப்பும், துள்ளலும் கொப்பளித்துக் கொண்டிருக்கும். “என்னம்மா?” என்று தப்பித் தவறிக்கூட மூர்த்தி பெண்ணைக் கேட்டுவிட மாட்டார்.




அத்தனை அருமை! சாரு ஏதேனும் முதல் நாள் கேட்டுவிட்டால், மறுநாளே அது அவள் கைக்கு வந்துவிடும்.

“அப்பா, சொல்ல மறந்துட்டேனே! எங்க காலேஜ்ல எல்லோரும் எக்ஸ்கர்ஷன் போக ப்ளான் பண்ணி இருக்கோம். இன் ஃபாக்ட், இந்தப் பிளானைச் சொன்னதே நான்தான். எங்க போறோம்னு தெரியுமா? டெல்லி, ஹரித்வார், முசௌரி என்று கம்ப்ளீட்டா நார்த் இந்தியா பக்கம்.. சும்மா பத்தே நாள் தான்!”

சாரு பேசிக்கொண்டே போக, ஜானகிக்குப் பொறுக்க வில்லை. “தோ பாரு சாரு! அதெல்லாம் எதுவும் வேண்டாம். காலம் இருக்கும் இருப்பில், அவ்வளவு தூரம் உன்னை அனுப்பிட்டு நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. எங்க பார்த்தாலும் ஸ்டிரைக்கும். டெரரிஸ்ட் பயமும்..”

“நிறுத்தும்மா..நீ ஏதாவது ஏடாகூடமா கற்பனை பண்ணிண்டு என்னோட மூடைக் கெடுக்காதே. அப்பா, ஐம் கோயிங்.. ஓகே?”

“தட்ஸ் ஃபைன் சாரும்மா. ஆனா, ஜாக்கிரதையா இருக்கணும். பணம் எவ்வளவு தேவைப்படும்னு சொல்லு..” சொல்லியபடியே மூர்த்தி எழுந்து

கொண்டார்.

ஒருவழியாகத் தேர்வு முடிந்தது. இஷ்டம் போல் தொலைக் காட்சி பார்த்து, செல்ஃபோனில் அரட்டை அடித்து, நேரம் கால மில்லாமல் ஊர் சுற்றி, ஜிம்முக்குப் போய் வந்து.. நாட்கள் சென்று கொண்டிருந்தன.

சாவகாசமாய் எழுந்து வந்த சாருவிடம் ப்ரெட் டோஸ்டைக் கொடுத்தபடியே, மெள்ள ஆரம்பித்தாள் ஜானகி.

"சாரும்மா! நாள் இப்படி ஓடிண்டே இருக்கே. சரோஜா டீச்சர்கிட்ட உன்னோட விட்டுப்போன பாட்டு க்ளாசை ஆரம்பி. அப்படியே கிருஷ்ணன் சாரிடமும் வயலின் கிளாஸ் பத்திப் பேசு.."

"உஸ் உடனே ஆரம்பிச்சிட்டியா? நான் அதெல்லாம் எதுவும் செய்யப் போறதில்ல கார் டிரைவிங் கத்துக்கப் போறேன் அதோட ஃபிரெஞ் ச் கத்துக்கப் போறேன்"

ஜானகியின் கோபம் தலைக்கேறியது. "சாரு, டிரைவிங்கும் ஃபிரெஞ்சும் சுத்துக்கிட்டா, தட்டுல சாதம் வந்துடுமா? நாம பெரிய ராயல் ஃபேமிலியா என்ன? மனசுல நீ என்னதான் நினைச்சுண்டிருக்கியோ..?"

"அய்யோ.. ப்ளீஸ் அம்மா கத்தாதே. பாட்டும் வயலினும் ஏழு வருஷம் கத்துண்டாச்சு. அதனால டயம் கிடைக்கிறச்சே சும்மா பிராக்டீஸ் பண்ணினாப் போதும்.. என்னை என் வழியிலே போகவிடும்மா.. சும்மா போரடிக்காதே.." பாப் தலையைச் சிலுப்பிக் கொண்டு விருட்டென்று கிளம்பினாள் சாரு. மூர்த்தியிடம் சொல்லி சொன்ன தினுசில், ஃபிரெஞ்சும், கார் டிரைவிங்கும் கற்றுக் கொள்ளச் சென்று வந்தாள். சரியாக எட்டே வாரங்களில் கையில் லைசென்ஸோடு வந்தபோது, ஜானகி வாயடைத்துத்தான் போனாள்!

நல்ல பெண், நல்ல அப்பா.. இப்படி எல்லாம் தன்னால் இருக்க முடிந்ததா? அப்பா அம்மா கிழித்த கோட்டைத் தாண்டாமல், எப்படி வளர்த்தேன்! அப்படி இருந்ததால் என்ன கெட்டுப் போயிற்று?




கல்லூரி முடித்த கையோடு, அப்பா திருமண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்த போது, கொஞ்ச நாட்களுக்கு வேலை பார்க்க வேண்டும் என்ற ஜானகியின் ஆசை அப்படியே அடங்கிப் போனது. அவ்வளவு என்ற அவளை ஒரு வார்த்தை கூடக் கேட்காமல், 'நல்ல வரன்.. விட்டால் கிடைப்பது கஷ்டம்' என்ற ரீதியில் திரும்பத் திரும்பப் பேசி, கல்யாணத்தையே முடித்துவிட்டார்கள்.



தன் அளவுக்கு அப்படி அடங்கிப் போகாமல், ஓரளவுக்குச் சுதந்திரம் கொடுத்துத் தன்னோட பெண்ணை வளர்க்கணும் என்று சாருவைச் சுதந்திரமாக வளர்த்தவளே ஜானகிதான்! இப்போ என்னடா வென்றால், சாருவின் போக்கும் குணமும் அவளை நிரம்பவே பயமுறுத்தின.

கதைப் பொத்திக்கொண்டாள் ஜானகி, சாருவின்



அறையிலிருந்து மரியாகேரியின் பாப் மியூசிக் அலறியது. அவளது தோழிகள் வேறு வந்திருந்தபடியால் உரத்த சிரிப்பும், பாட்டும், கும்மாளமுமாக இருந்தது.

"ஆன்ட்டி கொஞ்சம் தண்ணீர் தர முடியுமா?" என்றபடி வந்த பெண்ணின் தோள் பட்டையில் தேளும் பாம்புமாக டாட்டு இருந்தது.

"அப்பாடி என்ன பொண்ணுகளோ? எல்லாம் பிசாசுகள்!"

சாருவின் தோழிகள் எல்லாம் ஒவ்வொன்றும் ஒரு ரகம். அதுவும் கட்டிய பசுபோல இருந்த மீரா, கொஞ்ச நாட்களுக்கு முன் அவர்களோடு படித்த ஆல்பர்ட்டைத் திருமணம் செய்து கொண்ட போது, ஆடிப்போய் விட்டாள் ஜானகி. 'அம்மா! ஒரு பெண்ணும் ஆணும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கிறது அவ்வளவு பெரிய விஷயமா என்ன? லவ் ஈஸ் சம்திங் கிரேட் அண்ட் பியாண்ட் எவ்ரிதிங்..' சாரு பேசிக் கொண்டே போனபோது, ஜானகியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.




அன்றிலிருந்து சாருவின் மீது தனியாகக் கண் பதித்துப் பரிசோதனை செய்தாள். சாரு யாரோடெல்லாம் பழகுகிறாள். பேசுகிறாள் என்றெல்லாம் ரகசியமாக ஸர்வே எடுத்தாள், அவ்வப்போது மூர்த்தியிடம் ஏதாவது சொல்லப் போனால், அவர் ரௌத்ர மூர்த்தி ஆகிவிடுவார்..

டெலிஃபோன் அடிக்கவே விரைந்து எடுத்தாள் ஜானகி. மூர்த்திதான்,

"ஜானா! உன்கிட்ட என் ஃபிரெண்ட் கோவர்த்தன் பத்திச் சொல்லி இருக்கேன் இல்லையா? அவன் குடும்பத்தோட இங்கே ஒரு கல்யாணத்துக்கு வந்திருக்கானாம். இன்னிக்கு டின்னருக்கு இன்வைட் பண்ணி இருக்கேன். கிட்டத்தட்ட பத்து வருஷங்களுக்குப் பிறகு பார்க்கப் போறதால ரொம்பவும் எக்ஸைட்டாயிட்டான்.."

"சரி" என்றவள் மளமளவென்று சமையலில் இறங்கினாள். ரவா இட்லி க்ரீன்பீஸ் புலாவ், பூந்தி ராய்தா, சேமியா, பகளாபாத்.. அத்துடன் ஸ்டார்ட்டருக்கு உருளை போண்டாவும், அவல் கேசரியும்..கூடவே புதினா சட்னியும் பைனாப்பிளையும், தர்ப் பூரணியையும் 'டைஸ்' மாதிரி அழகாக வெட்டி ஃபிர்ட்ஜில் வைத்தாள். எலுமிச்சை நன்னாரி சேர்த்து குளிர்பானமும் தயார் செய்துவிட்டு, ஜானகி ரெடியான போது, சொல்லி வைத்தாற் போல் அனைவரும் வந்து விட்டார்கள். பெண்ணாக லட் சணமாக, சாருவும் ஒரு சல்வாரில் வந்து எல்லோரையும் வரவேற்றாள்.

கோவர்த்தனும், அவர் மனைவி ராதாவும் மிகவும் சிலாகித்துச் சாப்பிட்டார்கள். 'வெரி நைஸ் வெரி நைஸ்' என்று அவர்கள் பிள்ளை சம்பத் கேட்டுக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டபோது, ஜானகியின் மனது சந்தோஷத்தில் நிரம்பியது. அவர்களின் எளிமையும், பழகுவதில் தென்பட்ட இனிமையும் அவர்களின் தரத்தைச் சொல்லாமல் சொல்லின.

"மூர்த்தி.. இப்படிச் செய்தால் என்ன..? உன்னோட பெண் சாருவை சம்பத்துக்குப் பேசி முடித்துவிட்டால்..?"

கோவர்த்தனின் வெளிப்படையான அணுகுமுறை, மூர்த்திக்குச் சந்தோஷ அதிர்ச்சியைக் கொடுத்தது.

சம்பத்தைப் பார்த்ததிலிருந்து, அவருக்கும் அந்த எண்ணம் துளிர் விட்டிருந்தது. இந்தச் சின்ன வயதிலேயே ஒரு பெரிய இண்டர்நேஷனல் சாஃப்ட்வேர் கம்பெனியில் உயர் பதவியில் இருந்தான். முன்னுக்கு வரக்கூடிய துடிப்பும், உயர்ந்த இலக்கை அடையக்கூடிய திறமையும், அவனது கண்ணியமான தோற்றமும் மூர்த்தியைக்

கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை. யோசிக்காமல் கண்ணை மூடிக்கொண்டு 'யெஸ்' சொல்லி விடலாம்தான்..ஆனால், சாருவைக் கேட்காமல் அப்படியெல்லாம் சொல்ல அவர் விரும்பவில்லை.



அதற்குள்ளாகச் சாருவும், சம்பத்தும் ஒபாமா, இலங்கைப்போர், ஸ்லம்டாக் மில்லியனர் என எதையும் விட்டு விடாமல் அலசிக்கொண்டிருந்தனர். அவர்களது இயல்பான பேச்சும், ஒருமித்த எண்ணமும் அவர்களைச் சற்றே நெருக்கத்துக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

கோவர்த்தனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மூர்த்தி மிகுந்த யோசனையுடன் சாருவைப் பார்த்தபோது, கோவர்த்தன் சாருவிடமே கேட்டுவிட்டார்... "ஓ! அங்கிள், என்னோட அப்பா எது சொன்னாலும் எது பண்ணினாலும் எனக்கு ஓ.கே" என்ற போது, சாருவின் திருமண விஷயம் அந்த நிமிஷத்திலேயே நிச்சயமாகிப் போனது.

அசுர வேகத்தில் எல்லா ஏற்பாடுகளும் செய்து, இதோ சாருவின் கல்யாணம் முடிந்து விளையாட்டுப் போல் ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஷாம்பூ தலை பறக்க, பாட்டும் சப்தமுமாக வளைய வந்துகொண்டிருந்த சாரு இல்லாமல் வீடு வீடாகவே இல்லை. அவள் போய் வந்த சுற்றுலாப் பயணம் போலவே.. அவளது திருமணமும் ஒரு சுணத்தில் முடிவானது தான், ஜானகிக்கு இன்னமும் ஆச்சர்யத்தைத் தந்து கொண்டிருந்தது.

'அப்பாடி! என்னவெல்லாம் நினைத்துப் பயந்து கொண்டிருந்தேன்.. சாருவின் திருமணம் நல்லபடியாக முடிந்ததில் சந்தோஷம்தான்.. ஆனாலும் இயற்கையாகவே அவ்வப்போது எழும் பயம் அவளைக் கொஞ்சம் நிம்மதி இல்லாமல் செய்து கொண்டிருந்தது. சம்பத்தின் தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, அத்தை, மாமா, கஸின்ஸ், கிட்ட.. தூரத்துச் சொந்தம் என்று ஏகப்பட்ட பேர் வந்தபோது, அவர்களைக் கவனிப்பதில், ஜானகியும் மூர்த்தியும் சற்றே திணறித்தான் போனார்கள். இத்தனை பெரிய குடும்பத்தில், இந்தப் பெண் சாரு எப்படி புகுந்து புறப்பட்டு வரப் போகிறாளோ என்று இனந் தெரியாத கலக்கம் அவளிடத்தில் இருந்துகொண்டே தான் இருந்தது.




இங்கிருந்த வரையில், கடுகு மிளகாய் தாளித்து ஒரு சமையல் செய்தோ, இரண்டிழை கோலம் போட்டு சுவாமி விளக்கேற்றியதோ இல்லை.. அங்கே என்ன செய்கிறாளோ? சாருவிடமிருந்து ஃபோன் வரும்போதெல்லாம்.. ஏதேனும் புகார் சொல்வதாக.. குற்றம் காண்பதாகச் சொல்லி விடுவாளோ என்று மனது அடித்துக் கொள்ளும்.

டெலிபோன் மணி ஒலித்தது.. "ஜானா! அடுத்த வாரம் நான் டெல்லிக்கு ஒரு கான்ஃபரன்சுக்காகப் போகணும். அப்படியே போய் சனி.. ஞாயிறன்று நம்ப சாருவைப் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன்."

மூர்த்தி சொன்னதுதான் தாமதம்.. உடனே சாரு மிகவும் விரும்பிச் சாப்பிடும் பத்த வாடும், ரிப்பன் பக்கோடாவும் பாக் செய்தாள். கல்யாணத்தின் போது திரட்டுப் பால் என்றால் தனக்கு ரொம்ப இஷ்டம் என்று சம்பத் சொன்னது நினைவுக்கு வரவே, அதையும் டப்பர் வேரில் போட்டு வைத்தாள். சாருவுக்கு ஒரு லெஹங்காவும், புது மோஸ்தரில் வந்திருக்கும் ஜேட் ப்ரேஸ்லெட்டும் வைத்து கிஃப்ட்ராப் செய்தாள். ராதாவுக்கு ஒரு வெங்கிடகிரி புடைவையும் கோவர்த்தனுக்கு அருணாசாயிராமின் இசைவட்டுகளும் வாங்கி, அழகாக லெதர் சூட்கேசில் எடுத்து வைத்தாள்.

சாருவிடமிருந்து ஃபோன்.

"நீயும் அப்பாவோட வந்திருக்கலாமே அம்மா..! உன்னை ரொம்பவும் மிஸ் பண்றேம்மா.." சாரு நெகிழ்ச்சியோடு சொன்ன போது, ஜானகியின் கண்களில் குற்றால அருவி பொங்கிற்று.

டெல்லியிலிருந்து மூர்த்தி வந்தாயிற்று. “இந்தா ஜாவா! சாரு என்னமோ கொடுத்து விட்டிருக்கா பாரு..”அவர் நீட்டிய பையில் அவளுக்குப் பிடித்த பெரிய சைஸ் சீதாப் பழங்களும், மயில் கழுத்து கலரில் வல்கலம் புடைவையும்.. வெளேரென்று ஒரு மார்பிள் பிள்ளையாரும்.. கூடவே ‘என்னோட ஸ்வீட் அம்மாவுக்கு’ என்று முத்து முத்தாக எழுதிய கடிதமும் இருந்தன.

“அம்மா! என்னோட ஸ்வீட் அம்மா! உன்னை, முக்கியமா உன்னோட அறுவையை இடைவிடாத தொண தொணப்பை, நான் ரொம்பவே மிஸ் பண்றேன். அப்பா சொன்னார்.. கல்யாணத்துக்கு அப்புறமும் நீ, என்னைப் பத்திக் கவலைப்படறதை நிறுத்தலைனு. ஏன்மா..? அம்மா.. நான் ரொம்பவே அதிர்ஷ்டசாலி.. சம்பத் அருமையானவர். எனது இன்—லாஸும் அவ்வளவு அருமையாகப் பார்த்துக் கொள்கிறார்கள். என்னோட குட் ஃப்ரெண்ட்ஸ் யார் தெரியுமா.. தாத்தாவும் பாட்டியும்தான்..



ஒவ்வொருவருக்கும் ஒருவித டேஸ்ட் இருக்கு. ரசனை இருக்கு. யாரும் எதையும் பிறர் மீது திணிப்பதில்லை.. அதனால் அவரவர்களின் தனித்தத்துவத்தை இழக்காமல், ரொம்பவும் இயல்பா இருக்க முடிகிறது. சமையல் செய்யத் தெரியாது என்று சொன்னபோது, மனசுக்குள் முதல் தடவையா பயமும்.. கூடவே உனது முகமும் எட்டிப் பார்த்தன. ஆனால், பாட்டி என்னைத் தட்டிக் கொடுத்தபடி..

‘சாரும்மா, சமையல் என்ன பிரம்ம வித்தையா? அஞ்சும் மூணும் எட்டானால் அறியாப் பொண்ணும் கறி சமைப்பாள் தெரியுமா? ரெண்டு நாள், அப்புறம் ரெண்டு வாரம்னு சும்மா இப்படி சமையல்கட்டுக்கு வந்து கூடவே இருந்து பாரு.. விளையாட்டுப் போல கவனி! அப்புறம் பாரு.. தன்னால உனக்கும் ஆர்வம் வந்து, நீயும் தூள் கிளப்புவாய்’ என்றார். உண்மைதான்! ஓர் அதட்டல் இல்ல.. அதிகாரம் இல்ல.. இப்போ வாரத்தில ரெண்டு நாட்கள் என்னோட சமையல்தான்..

தாத்தாவோட தினமும் வாக் போகும்போது, நமது சாஸ்திரங்களையும் சம்பிரதாயங்களையும் ரொம்ப அழகாச் சொல்லிக்கிட்டே வருவார். அம்மா! உனக்குத் தோன்றலாம்.. இப்போ மட்டும் எனக்கு எப்படி திடீர்னு ஆர்வம் வந்ததுனு? அம்மா, ஒன்றை யோசித்துப் பார்.. என் மீது உனக்கு என்றாவது நம்பிக்கை வந்திருக்கிறதா? உனக்கு நான் பரம எதிரியாகத்தான் தெரிந்தேன். நான் எது செய்ய விரும்பினாலும் உடனே உன்னிடமிருந்து ஆட்சேபம்தான் கிளம்பும்.

அம்மா! நானும் ஒரு பெண்தான்.. நீயும் ஒரு பெண்தான். ஒரே மண்ணில் செய்த இரண்டு வித்தியாசமான பொருட்களைப் போல்தான்.. கொதித்துக் கொதித்துப் பண்டத்தைச் சிதறவிடாத பானை தான் நீ என்றால், மணமும் வண்ணமும் கொண்ட மலர்களைத் தாங்கிய பூ ஜாடி நான்! ட்ரைவிங் கற்றுக்கொள்ள விரும்பிய போது. நாமென்ன ராயல் ஃபாமிலியா என்று கேட்டாய்? அம்மா, இங்கு சம்பத்தை கம்பெனியில் ட்ராப் செய்து, பிக்கப் செய்து.. எனது மாமியாரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று, தாத்தா பாட்டியை டாக்டரிடம் கூட்டிச் சென்று.. இந்த வேலையெல்லாம் நான்தான் செய்கிறேன் தெரியுமா?

இன்னொரு குட்நியூஸ். ஃபிரெஞ்ச் தூதரகத்தில் எனக்கு வேலை கிடைச்சிருக்கு.. இப்போதைக்கு இங்குள்ள சுற்று வட்டாரக் குழந்தைகளுக்குப் பாட்டும், வயலினும் சனி, ஞாயிறுகளில் சொல்லித் தர்றேன்..

..அம்மா, இனிமேலாவது, என்னைப் பற்றிக் கவலைப்படாதே. நீ வாழ்வில் கெட்ட பெயர் வாங்காத போது, உன்னோட பெண்.. நான் மட்டும் விதி விலக்கா என்ன? பாட்டி சொன்ன மாதிரி, அஞ்சும் மூணும் என்னைக்குமே எட்டு தான்! தப்பே வராது..”

கடிதத்தைப் படித்து முடித்தபோது, ஜானகியின் மனம் நிரம்பியது போலவே கண்களும் நிரம்பித் தளும்பின.


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA
Thank You!

# அறிவோம் தமிழர்

## தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் (1901—1980)

**தெ.**பொ. மீனாட்சிசுந்தரம் (தென்பட்டணம் பொன்னுசாமி மீனாட்சிசுந்தரம்:ஜனவரி 8, 1901 — ஆகஸ்ட் 27, 1980) தமிழறிஞர், தமிழியல் ஆய்வாளர்,பன்மொழிப் புலமை பெற்றவர். பழந்தமிழ்ப்பண்பாட்டு ஆய்வை மேலைநாட்டு ஆய்வுமுறைகளைக்கொண்டு வகுத்துரைத்த கல்வியாளர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், ஒப்பிலக்கியம், மொழியியல் குறித்த பல கட்டுரைகளையும், நூல்களையும், திறனாய்வுகளையும் எழுதியுள்ளார். பல்கலைக்கழகங்களில் மொழியியல்,ஒப்பிலக்கணத் துறைகளை ஏற்படுத்தி, அறிவியல்பூர்வமான ஆய்வுக்கு வழிகோலியவர்.

தெ. பொ. மீனாட்சி சுந்தரம் சென்னையில் உள்ள சிந்தாதிரிப்பேட்டையில் ஜனவரி 8,1901 அன்று பொன்னுசாமி கிராமணியாருக்கு மகனாகப் பிறந்தார். தந்தை பொன்னுசாமிக் கிராமணியார் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவரான தி. க. சுப்பராய செட்டியாரிடம் தமிழ் பயின்றவர். தமிழ் மீதும் தமிழ் அறிஞர்கள் மீதும் இருந்த பற்றினால் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பெயரை தன் மகனுக்கு இட்டார். நாடகக் கலைஞரும், தேசபக்தி நாடகங்களை அரங்கேற்றியவருமான தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் இவரது மூத்த சகோதரர்.

தெ.பொ.மீ பள்ளிக்கல்வியை சிந்தாதிரிப்பேட்டையில் முடித்தார்.1920—ல் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டமும் 1922—ல் பி.எல். பட்டமும் பெற்றார். 1923—ல் வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1934—ல் பி.ஓ.எல் பட்டம் பெற்றார்.




வேதாந்த சங்கத்தை நடத்திய கோ. வடிவேலு செட்டியாரிடம் தருக்கம், வேதாந்தம், தமிழிலக்கியம் ஆகியவற்றைப் பயின்றார். கா.ர. கோவிந்தராச முதலியார், திருமணம் கே. செல்வகேசவராய முதலியார் போன்ற அறிஞர்களிடம் வேதாந்தமும் தமிழ் இலக்கியங்களும் கற்றார். இராமலிங்கத் தம்பிரானிடம் தணிகைப் புராணம் , சேது புராணம் ஆகியவற்றைக் கற்றார். மறைமலையடிகளிடம் சைவ சித்தாந்தத்தையும், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கரச்சாரியார், திருப்புறம்பியம் ராமசாமி நாயுடு மற்றும் ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியார் ஆகியோரிடம் வைணவத் தத்துவமும் பயின்றார்.1939—40 ஆண்டுகளில் தமிழ் வித்வான் இளநிலை, நிறைநிலைத் தேர்வுகள் எழுதி 'வித்வான்' பட்டம் பெற்றார். தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

ஜூல்ஸ் ப்லாக்(**Jules Block**) என்ற பேராசிரியரின் மேற்பார்வையில் 1939—ல் எம். ஓ. எல் பட்டத்திற்காக ஒலியியலில் (**Phonology**) தமிழ் ஒலிகளில் ஆராய்ச்சி செய்தார். அவரது ஆய்வுக்கட்டுரை மிகச்சிறந்த மொழியியல் ஆய்வு எனத் தேர்வாளர்களால் பாராட்டப்பட்டது. ஜூல்ஸ் ப்லாகின் தூண்டுதலால் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிரஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளில் உயர் சான்றிதழ் பெற்றார்.

தமிழியல் வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.இவரது சம காலத்தில் வாழ்ந்த பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை (1891—1956), மயிலை சீனி. வேங்கடசாமி ஆகிய இருவரும் கூட முக்கியம் வாய்ந்தவர்கள். மயிலை சீனி வேங்கடசாமி தவிர, ஏனைய இருவரும் தமிழியல் ஆராய்ச்சிக்கான கல்வி நிறுவனம் சார்ந்த செயற்பாட்டாளர்கள். இந்த மூவரும் தமிழியல் ஆய்வைப் புதிய தளங்களில் நகர்த்தியவர்கள். தமிழியல் ஆய்வுப் பரப்பை ஆழ அகலப்படுத்தி முக்கியமான படைப்பாற்றலைச் செய்தவர்கள்.

தமிழியல் ஆய்வு அறிவு நிலைப்பட்ட அணுகுமுறை களையும் பார்வைகளையும் புலமைப் பாய்ச்சல் களையும் கொண்ட காலகட்டமாக (1925—1960) முனைப்புறத் தொடங்கிய காலகட்ட ஆய்வுப் பரப்பில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தனக்கென்று சில முத்திரைகளைப் பதித்தார்.

# பெருமை

## மதுசூதனன்

மரபுக் கல்விப் பாரம்பரியமும் நவீன கல்விப் பாரம்பரியமும் மிக்க குடும்பச் சூழலில் ஊடாட்டம் கொண்டு நிரம்பிய தமிழ் ஆர்வத்துடன் புலமைத் தேடலுடன் திகழ்ந்தார். 1920—களில் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டம். 1922—ல் சட்டக் கல்லூரியில் படித்து பி.எல். பட்டம். 1923——ல் எம்.ஏ. பட்டம் பெற்றதுடன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகவும் ஆனார். அத்துடன் உயர் நீதிமன்ற நீதிபதியாக வந்த வழக்கறிஞரிடம் பயிற்சி பெறவும் சேர்ந்தார். எனினும், அத் துறை அவரை ஆட்கொள்ளவில்லை.

வரலாறு, பொருளாதாரம் போன்ற துறைகளில் நாட்டம் கொண்டு படித்தார். பட்டமும் பெற்றார். தமிழ் வித்துவான், பி.ஓ.எல். ஆகிய தேர்வுகளிலும் வெற்றி பெற்றார். சென்னை சிந்தாதரிப்பேட்டையில்




வேதாந்த சங்கம் நிறுவித் தமிழ், தருக்கம், வேதாந்தம் ஆகியவற்றைக் கற்பித்த மகா வித்துவான் கோ. வடிவேல் செட்டியாரின் மாணாக்கராகிப் பயின்றார். மறைந்து போன நூல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி வைத்திருந்த இராமலிங்கத் தம்பிரானிடம் 'தணிகைப் புராணம்', 'சேது புராணம்' ஆகிய நூல்களைக் கற்றார். பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காச்சாரியார், திருப்புறம்பியம் இராமசாமி நாயுடு, ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியார் போன்ற அறிஞர்களிடம் வைணவத் தத்துவம் பயின்றார். சைவச் சித்தாந்தத்தை மறைமலையடிகளிடம் கற்றுக் கொண்டார். இவ்வாறு தெ.பொ.மீ.யின் கற்றல், தேடல் பல்துறைசார் அறிவுத் தேட்டங்களுடன் கூடியதாக இருந்தது.



காந்தியச் சிந்தனையில் நாட்டம் கொண்டவ ராகிச் சென்னையிலுள்ள சிந்தாதரிப்பேட்டையில் சேரி வாழ் மக்களின் நலனுக்காகப் பாடுபட்டார். சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும் ஆல்டர்மேனாகவும் பணிபுரிந்து ஒடுக்கப்பட்ட மக்களின் தோழன் என்ற பெயர் பெற்றார். சிந்தாதரிப்பேட்டையிலும் சுற்றுப்புறங்களிலும் பல ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி அவற்றின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் பொறுப்பைப் பல்லாண்டுகள் ஏற்றார். சில தொழிற்சங்கங்களின் தலைவராகப்

பணிபுரியும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது.

வடிவேல் செட்டியாரின் மரணத்தின் பின் வேதாந்த சங்கத்தின் தலைவர் பதவி அவரை நாடி வந்தது. தமிழ் எம்.ஏ. மாணவர்களுக்கு ஊதியமின்றி வகுப்புகள் நடத்துதல், சென்னைத் தமிழ்ச் சங்கம் நிறுவிப் பல இலக்கிய மாநாடுகளை நடத்தியது, அச் சங்கத்தின் வழி பல நூல்களை வெளியிடல் போன்ற பணிகளை அக் காலகட்டத்தில் மேற்கொண்டார். இளமை யிலேயே ஈழத்து இலக்கிய ஏடான கலாநிலையத் திலும் விவேக சூடாமணி, நவசக்தி, லோகோபகாரி, தேசபக்தன் போன்ற பல இதழ்களிலும் இடையறாது எழுதி வந்தார்.

பொது வாழ்வு, கற்றல், கற்பித்தல் என்ற தொடர்ச்சியில் தெ.பொ.மீ— யின் ஆளுமை உருவாக்கம் புடம் போடப்பட்டது. இதன் சாத்தியப்பாட்டைத் துல்லியமாக்கும் விதத்தில் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், இந்தி, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளைப் பேரார்வத் துடன் கற்றுப் பன்மொழிப் புலவராகவே இருந்தார். வரலாறு, கல்வெட்டியல் தத்துவம், இலக்கணம், இலக்கியம், மொழியியல் போன்ற துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். பன்மொழிப் புலமை, பல்துறைப் புலமை யாவும் தெ.பொ.மீ. யின் உலகப் பார்வையை — அறிவியல் வரலாற்றுப் பார்வையை — விசாலப்படுத்தின. இவையே இவரது பன்முக ஆளுமை விகசிப்புக்குக் காரணமாயிற்று. இதனால் ஆய்வுலகில் தனக்கான தனிப்பாதையில் பீடுநடை போடவும் முடிந்தது. புலமை மிக்க பேராசிரியராகத் திகழ்வதற்கும் சமன்நிலைப் பண்பும் ஒருங்கிணைந்த ஒருமுகப் பண்பும் கொண்டிருந்தமை, ஆய்வில் காழ்ப்புணர்ச்சி இன்றி முன்னேறவும் வழி வகுத்தது.

தெ.பொ.மீ. 1924 சென்னை நகராட்சி உறுப்பினராகப் பொறுப்பேற்றது முதல், அண்ணா மலைப் பல்கலைக்கழகம், சென்னை மாநிலக் கல்லூரி ஆகியன இவரைப் பேராசிரியராகப் பெற்றது வரை தெ.பொ.மீ.யின் ஆளுமை படிப்படியாக வளர்ச்சியுற்றது.

தெ.பொ.மீ.யின் தமிழ்ப் புலமையும் பல்துறை அறிவுத் திறனையும் கண்ட இராஜா சர். அண்ணா மலைச் செட்டியார் தம் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் தலைவராக அவரை அமர்த்தினார். ஈராண்டுகளை (1944—1946) அத் துறையின் கீழமைந்த பல திராவிட மொழிகள் உருது, இந்தி, மொழித் துறைகள் என்பவற்றின் வளர்ச்சியையும் உயர்த்தப் பயன்படுத்தினார். 1945—இல் அப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனைத்திந்திய வரலாற்று மாநாட்டில் புதிதாகத் திராவிடப் பிரிவு அமைக்கப்பட்டபோது அதற்கு தெ.பொ.மீ. தலைவராக்கப்பட்டார்.

1954—இல் சென்னை மாநிலக் கல்லூரியில் முதன்மைப் பேராசிரியராக அமர்ந்து தமிழ் ஆய்வை வளர்க்கவும் பாடத் திட்டங்களைப் புதுமை செய்யவும் துணை செய்தார். 1958—இல் மீண்டும் அண்ணா மலைப் பல்கலைக்கழகம் சென்று தமிழ், மொழியியல் என்னும் இரு துகளையும் செவ்வனே வளர்த்தார்.

தமிழியலுக்கு தெ.பொ.மீ. யின் முதல் பங்களிப்பு 1960 களில் பல்கலைக்கழக நிலையில் ஒப்பிலக்கியத்தைத் தமிழ்த் துறையில் ஒரு பாடமாக்கி அந்தத் துறையில் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியது. அப்போது பல தமிழாசிரியர்கள் முணுமுணுத்தாலும் இன்று ஒரு சிறப்பான தேவை யான பாடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணும்போது தமிழியலின் தளம் விரிவுபடுத்தப்பட



வேண்டுமென்ற அவரது தொலைநோக்குப் பார்வை நன்கு பரிமளித்துள்ளது என்பது புலனாகிறது.

அடுத்த பங்களிப்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறைக்கு உருவம் கொடுத்து அதைப் பயிற்றுவிக்கும் துறையாகவும், ஆய்வுத் துறையாகவும் அமைத்து அனைத்திந்திய நிலையில் ஒரு அங்கீகாரம் பெற்றுத் தந்து தென்னகம் முழுமையும் மொழியியலைப் பரப்பியது. அதன் ஒரு பகுதியே அவருடைய இலக்கணத் துறையில் ஆய்வும் ஆய்வு வழிகாட்டலும். இலக்கண மொழியியல் கோட்பாடு, இலக்கியக் கோட்பாடு, மொழி வரலாறு ஆகியவை உருவாகவும் உழைத் தார். இதனால் பழைய பாடங்கள் புதிய நோக்குப் பெற்றன.

தெ.பொ.மீ. தமிழுக்குச் செய்த தொண்டு தமிழைத் தமிழர் அல்லாதார் அறியச் செய்தது. இதுவும் இரண்டு பரிமாணம் உடையது. ஒன்று அவருடைய ஆங்கில நூல்கள், கட்டுரைகள், மற்றொன்று அவர் சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கல்வி தொடங்க வழிகாட்டியதோடு அறிஞர், புலமையாளர் என்ற முறையில் அங்கு தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் மொழி வரலாறு என்ற இரண்டு தலைப்பில் பத்துப் பத்துச் சொற்பொழிவுகள் செய்து நூல்களாக வெளியிட்டுத் தமிழ் ஆய்வுக்குப் பரந்த அளவில் அடித்தளம் இட்டது. அவருடைய மொழி வரலாறு முற்றிலும் புதுமையானது. அறிவியல் ரீதியானது.

1963 முதல் 1965 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநராகத் திறம்படப் பணியாற்றித் தமிழகத்தில் மொழியியல் கல்வி தனித்து வளர்வதற்கும், அத் துறைசார் ஆய்வாளர்கள் பலரின் தோற்றுவிப்புக்கும் காரணமாகி இருந்துள்ளார். அதன் பின்னர் 1965—இல் புதிதாகத் தொடங்கிய மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்த ரானார். பழைய சென்னைப் பல்கலைக்கழகத்தின் மரபையும் ஆற்றலையும் பல வழிகளில் பயன்படுத்திக் கொண்டதுடன் புதிய அறிவியல் துறைகள், உயிரியல், பொருளாதாரம், கணிதம் போன்ற துறைகளையும் தொடங்கி வெற்றி கண்டார்.

தமிழ் வளர்ச்சி, தமிழ் வழிக் கல்வி போன்றவற்றில் கூட உறுதியும் தெளிவும் கொண்டிருந்தார். தமிழே எல்லா மட்டங்களிலும் பயிற்சி மொழியாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் அறிவியலைத் தமிழில் கற்பிக்கவும் எழுதவும் வகை செய்யும் திட்டங்களைத் தீட்டினார். தாமே ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கை போன்ற அறிவியல் தத்துவங்களைத் தமிழில் எழுதித் தமிழரால் முடிந்ததெல்லாம் தமிழால் முடியும் என்று உலகுக்கு உணர்த்தியவர்.

தெ.பொ.மீ. யின் ஆய்வுகள், சிந்தனைகள், கட்டுரைகள், நூல்கள் யாவும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வுக்கு அறிவியல் நெறிப்பட்ட அணுகுமுறைகளை, புதிய செல்நெறிகளை வழங்கிச் சென்றுள்ளன. தற்சார்பு அகவயப்பட்ட பார்வை களுக்கு மாற்றாக புறவயப்பட்ட பார்வையை வழங்கித் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் உலகுக்கு என்ன கொடுத்தது என்ன பெற்றுக் கொண்டது என்பதைப் பரந்துபட்ட ரீதியில் தெளிவுபடுத்தி உள்ளார்.

தன் மனதுக்குத் தன் அறிவுக்குச் சரி என்று பட்டதைத் தைரியமாகவே சொல்லி வந்தார். தமிழ் உலகில் தமிழ் மொழி உணர்வு அதிகமாக ஆட்சி செய்த காலத்தில் அறிவு வழிப்பட்ட விஞ்ஞான ரீதியான கருத்துக்கள் பரவுவதற்குப் பாடுபட்டதுடன் அதற்கான புலமைச் சூழலை உருவாக்கிக் கொடுத்தார். ‘தமிழுக்காக உயிர் கொடுப்போம்‘ என்ற மேடை முழக்கத்துக்கு மாற்றாகத் ‘தமிழுக்கு உயிர் கொடுக்கும்‘ புலமைச் சவாலை அறிவார்ந்த தளத்தில் எதிர்கொண்டார். பல தமிழ் நூல்களுக்கு வடமொழி மூலம் கற்பிக்கப்பட்டதைத் தன்னுடைய ஆய்வால் தமிழ் மூலம் நிரூபித்து அவருடைய காலத்தில் ஏற்பட்ட வாத விவாதங்களுக்குத் தர்க்க அடிப்படையில் பதில் கொடுத்தார்.




இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வுப் பரப்பில் மடை மாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் தெ.பொ.மீ. யும் ஒருவர். 1920—1980 களில் தெ.பொ.மீ. யின் வாழ்க்கையும் சிந்தனைகளும் செயற்பாடுகளும் இதனை நிரூபித்துள்ளன.

விருதுகள், சிறப்புகள்

பல்கலைச் செல்வர் — திருவாடுதுறை ஆதினம்

பன்மொழிப் புலவர் — குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம்

பெருந்தமிழ் மணி — சிவபுரி சன்மார்க்க சபை (முதலமைச்சர் காமராசர் தலைமை)

கலைமாமணி விருது—தமிழக அரசு

பத்மபூஷண் விருது

நாட்டுடைமை

தெ.பொ. மீனாட்சிசுந்தரத்தின் படைப்புகள் தமிழக அரசால் 2007—ல் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.



# சிவகாமியின்

## நான்காம் பாகம் : சிதைந்த கனவு

### அரண்ய வீடு 1

ஆயனரின் அரண்ய வீட்டைச் சுற்றி மீண்டும் மரங்கள் செழித்து வளர்ந்து வானோங்கி நின்றன. நெடுந்தூரம் படர்ந்திருந்த கிளைகளில், பசுந்தழைகளும் இளந்தளிர்களும் அடர்ந்திருந்தன. சில விருட்சங்களில் மலர்கள் கொத்துக் கொத்தாய்க் குலுங்கின. இளங்காற்றில் மரக்கிளைகள் அசைந்து ஒன்றோடொன்று மோதியபோது, உதிர்ந்த மலர்கள் பூமியில் ஆங்காங்கு புஷ்பக் கம்பளம் விரித்தது போல் கிடந்தன. அந்த மலர்களின் நறுமணம் நாலாபுறமும் 'கம்' என்று நிறைந்திருந்தது. கானகத்துப் பறவைகள் அவ்வப்போது கலகலவென்று ஒலி செய்து, அங்கே குடி கொண்டிருந்த நிசப்தத்தைக் கலைத்தன.

ஆயனர் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த தாமரைக் குளத்தில் தண்ணீர் ததும்பி அலைமோதிக் கொண்டிருந்தது. தாமரை இலைகள் தள தளவென்று விளங்கின. அந்த இலைகளின் மீது தண்ணீர்த் துளிகள் முத்துக்களைப்போல் தத்தளித்துக் கொண்டிருந்தன. இளங்காற்றில் தாமரை இலைகள் அசைந்த போது, அந்த ஒளி முத்துக்கள் அங்குமிங்கும் ஓடியது, கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

இந்த இயற்கை அழகையெல்லாம் பார்த்து அனுபவிப்பதற்கு மனிதர்கள் மட்டும் அங்கே இல்லை.



ஆயனரின் அரண்ய வீட்டைச் சுற்றி முன்னொரு காலத்தில் நூற்றுக்கணக்கான சிற்பக்கலைச் சீடர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தற்சமயம் அங்கே சீடன் எவனும் காணப்படவில்லை. அங்கே இப்போது குடிகொண்டிருந்த சூனியத்தின் வேதனையை இன்னும் அதிகப்படுத்தும்படியாக அரண்ய வீட்டுக்குள்ளிருந்து ஒரே ஒரு தனிக் கல்லுளியின் சத்தம் 'கல் கல்' என்று கேட்டுக் கொண்டிருந்தது.

ஆம்; வீட்டுக்குள்ளே அயனச் சிற்பியார் மீண்டும் கையில் கல்லுளி எடுத்து வேலை செய்து கொண்டிருந்தார். அருமைப் புதல்வியை ஆயனர் பறி கொடுத்து இப்போது ஒன்பது ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன. இத்தனை காலமும் அவர் உயிர் வாழ முடிந்தது மீண்டும் சிற்பத் தொழிலில் கவனம் செலுத்திய காரணத்தினாலேதான்.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னே, நாம் அந்தச் சிற்பக் கிரஹத்தில் பார்த்ததைக் காட்டிலும் இப்போது அதிகமான நடனச் சிலைகளைப் பார்க்கிறோம். சிலை வடிவம் ஒவ்வொன்றும் சிவகாமியை நினைவூட்டுகின்றன. மண்டபத்தின் சுவர்களிலே அந்த நாளில் நாம் பார்த்த சித்திரங்கள் எல்லாம் இப்போது நிறம் மங்கிப் போயிருக்கின்றன. இதிலிருந்து அஜந்தா வர்ண இரகசியத்தை இன்னும் ஆயனர் தெரிந்து கொள்ளவில்லையென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

ஆயனரின் உருவத் தோற்றத்திலும் பெரிய மாறுதலைக் காண்கிறோம். அவருடைய தலை ரோமம் தும்பைப் பூவைப்





போல் வெளுத்துப் போயிருக்கிறது. கண்கள் குழி விழுந்திருக்கின்றன; முகத்திலே சுருக்கங்கள் காணப்படுகின்றன. அவரை இப்போது ஆயனக் கிழவர் என்று கூறினால் யாரும் ஆட்சேபிக்க முடியாது.

ஆயனர் தமது வேலையில் முழுக்கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தபடியால், வீட்டின் வாசலில் இரட்டைக் குதிரை பூட்டிய ரதம் வந்து நின்ற சத்தம் அவர் காதில் விழவில்லை.

"தாத்தா!" என்ற மழலைக் குரலைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தார். மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியும் அவருடன் இரு குழந்தைகளும் வாசற்படியைத் தாண்டி வந்து கொண்டிருந்தார்கள்.

மாமல்லரின் உருவமும் ஓரளவு மாறியிருந்தது. அவருடைய முகத்தில் யௌவனத்தின் தளதளப்புக்குப் பதிலாக முதிர்ச்சி பெற்ற கம்பீர தேஜஸ் குடிகொண்டிருந்தது. படபடப்புக்குப் பதிலாகத் தெளிந்த அறிவும் முரட்டுத் துணிச்சலுக்குப்





பதிலாக வயிர நெஞ்சத்தின் உறுதியும் அவருடைய கண்களிலே பிரகாசித்தன.

அவருடன் வந்த குழந்தைகளின் முகத் தோற்றத்திலிருந்து அவர்கள் அண்ணனும் தங்கையுமாக இருக்க வேண்டுமென்று ஊகிக்க முடிந்தது. அண்ணனுக்கு வயது எட்டு. தங்கைக்கு ஆறு இருக்கும். மாமல்லருடைய சாயல் இருவர் முகத்திலும் காணப்பட்டது.

“தாத்தா!” என்று கூவிக்கொண்டு இரு குழந்தைகளும் ஆயனரிடம் ஓடினார்கள். ஆயனர் அவர்களை, “என் கண்மணிகளே வாருங்கள்!” என்று சொல்லி வரவேற்றார். அவர்களைத் தம் தோளின் மேல் சாய்த்துக் கொண்டு கொஞ்சிச் சீராட்டினார். அவருடைய கண்களில் கண்ணீர் துளித்தது. அது குழந்தைகளைக் கண்டதனால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீரா, அல்லது நடந்திருக்கக் கூடியதையும் நடக்காமற் போனதையும் நினைத்துக் கொண்டதனால் ஏற்பட்ட தாபக் கண்ணீரா என்று யாரால் சொல்ல முடியும்!


குழந்தைகள் சற்று நேரம் ஆயனருடன் விளையாடிக் கொண்டிருந்த பிறகு, மாமல்ல சக்கரவர்த்தி அவர்களைப் பார்த்து, “குந்தவி! மகேந்திரா! இரண்டு பேரும் வெளியே ஓடிப்போய்ச் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருங்கள். நான் தாத்தாவுடன் கொஞ்சம் பேசிவிட்டு வருகிறேன்!” என்று சொல்லிக் கொண்டே குழந்தைகளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் தொடங்குகிறோம்!” என்றார் மாமல்லர்.

“ஐயா! நானும் கேள்விப்பட்டேன். திருக்கழுக்குன்றம் மலைச்சாரலில் வந்து சேர்ந்திருக்கும் மாபெரும் சைனியத்தைப் பற்றிக் குண்டோதரன் கூறினான். கண்ணுக்கெட்டிய தூரம் யானைப் படையும், குதிரைப்படையும், காலாட்படையும் ஒரே சேனா சமுத்திரமாய் இருக்கிறதாமே? இன்னமும் வீரர்கள் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்களாமே? வாளும் வேலும் ஈட்டியும் மலை மலையாகக் குவிந்து கிடக்கின்றனவாமே? குண்டோதரன் வந்து சொன்னதைக் கேட்டதும் எனக்கே திருக்கழுக்குன்றம் போய்ப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது.”

“ஆயனரே! திருக்கழுக்குன்றத்தில் இறங்கியிருக்கும் படைகள் நமது சைனியத்தில் மூன்றில் ஒரு பங்குதான். வடக்கே பொன்முகலி நதிக்கரையில் ஒரு பெரிய சைனியம் நமது சேனாபதி பரஞ்சோதியின் தலைமையில் காத்திருக்கிறது. தெற்கேயிருந்து பாண்டியனுடைய சைனியம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது. வராக நதிக்கு அருகில் வந்துவிட்டதாக இன்று தான் செய்தி கிடைத்தது.

“பிரபு! என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் காலங்கடத்திக் கொண்டிருப்பதாக எண்ணி நொந்து கொண்டிருந்தேன். எப்பேர்ப்பட்ட பகீரதப் பிரயத்தனம் செய்திருக்கிறீர்கள் என்று இப்போதுதான் தெரிகிறது....”

“பகீரதப் பிரயத்தனம் என்றா சொன்னீர், ஆயனரே!”



“ஆம் ஐயா!”

“ஒரு சம்பவம் ஞாபகம் இருக்கிறதா? மகேந்திர பல்லவரும், நானும், நீங்களும் கடல் மல்லைத் துறைமுகத்தில் பாறைகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. ஒரு பாறை இரண்டாய்ப் பிளந்தது போல் நடுவில் பள்ளமாயிருந்தது. பாறையில் பெய்த மழைத் தண்ணீர் அந்தப் பள்ளத்தின் வழியே தடதடவென்று கொட்டியது ‘ஆகாச கங்கை விழுகிறது!’ என்று நான் சொன்னேன். உடனே, மகேந்திர பல்லவர், ‘சிற்பத்துக்கு நல்ல விஷயம்; இங்கே பகீரதன் தவத்தைச் சித்திரிக்கலாம்‘ என்றார். நீங்களும் அதை ஒப்புக் கொண்டு சிற்பிகளை அழைத்து வேலை தொடங்கும்படி சொன்னீர்கள். அப்போது நான் தந்தையிடம் பகீரதன் கதை சொல்லும்படி கேட்டுக் கொண்டேன்.

பகீரதன் கதையை அன்று மகேந்திர பல்லவரிடம் கேட்ட போது எனக்கு ஒரே வியப்பாயிருந்தது. பகீரதனுடைய தவத்துக்கு என்னென்ன இடையூறுகள் நேர்ந்தன? அவ்வளவையும் சமாளித்து அவன் எடுத்த காரியத்தைச் சாதித்ததைக் குறித்துப் பெரிதும் ஆச்சரியப்பட்டேன். இளம்பிள்ளைப் பிராயத்தில் அப்பாவிடம் கேட்ட அந்தக் கதை இப்போது எனக்கு வெகு உபயோகமாயிருந்தது. ஆயனரே! வாதாபியிலிருந்து நான் உங்கள் குமாரியை அழைத்து வராமல் திரும்பி வந்தபோது, மூன்று வருஷத்துக்குள்ளே படை திரட்டிக் கொண்டு வாதாபிக்குப் போகலாம் என்று எண்ணியிருந்தேன். வரும் வழியெல்லாம் அவ்வாறுதான் நானும் பரஞ்சோதியும் திட்டம் போட்டுக் கொண்டு வந்தோம். மூன்று வருஷத்தில் நடத்த எண்ணிய காரியத்துக்கு ஒன்பது வருஷம் ஆகிவிட்டது.”

“பல்லவேந்திரா! ஒன்பது வருஷம் ஆயிற்று என்றா சொன்னீர்கள்? ஒன்பது யுகம் ஆனதாக எனக்குத் தோன்றுகிறது!”

“எனக்கும் அப்படித்தான், ஆயனரே! சிவகாமியைப் பார்த்துப் பல யுகம் ஆகிவிட்ட மாதிரிதான் தோன்றுகிறது. ஆனாலும், நான் என்ன செய்ய முடியும்? இரண்டு வருஷம் நாட்டில் மழையில்லாமல் பஞ்சமாய்ப் போயிற்று. ஒரு வருஷம் பெரு மழையினால் தேசங்கள் நேர்ந்தன. இலங்கை இளவரசன் மானவன்மனுக்கு ஒத்தாசை செய்ய வேண்டி வந்தது. பாண்டியனுக்கும் சேரனுக்கும் மூண்ட சண்டையில் தலையிட்டுச் சமாதானம் செய்விக்க வேண்டியிருந்தது. இத்தகைய காரணங்களினால் மனச்சோர்வு ஏற்பட்ட போதெல்லாம் அடிக்கடி துறைமுகத்துக்குச் சென்று பகீரதனுடைய தவச் சிற்பத்தைப் பார்த்தேன். மீண்டும் ஊக்கமும் தைரியமும் அடைந்தேன். கடைசியில் பகீரதன் முயற்சி பலிதமடைந்ததுபோல், என்னுடைய பிரயத்தனமும் பூர்த்தியடைந்து விட்டது. அடுத்த வாரத்தில் போருக்குப் புறப்படப் போகிறேன்.”




“பிரபு! இது என்ன? ‘புறப்படப் போகிறேன்’ என்று சொல்கிறீர்கள்?” என்று கேட்டார் ஆயனர்.

“வேறு என்ன சொல்லவேண்டும், ஆயனரே?”

“‘புறப்படப் போகிறோம்‘ என்று சொல்ல வேண்டும். பல்லவேந்திரா! இன்னும் எத்தனை காலம் நான் உயிரோடிருப்பேனோ, தெரியாது. சிவகாமியை ஒரு தடவை கண்ணாலே பார்த்து விட்டாவது கண்ணை மூடுகிறேன்.”

மாமல்லர் தம்முடைய கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, “ஐயா! உம்முடைய மகளுக்காக நீர் உயிர் வாழ்ந்தே ஆக வேண்டும். சாவைப் பற்றி நினைக்கவே வேண்டாம். நீங்கள், வந்தே தீரவேண்டுமென்றால் அழைத்துப் போகிறேன். விஜயதசமியன்று புறப்பட ஆயத்தமாயிருங்கள்!” என்றார்.

(சபதம் தொடரும்)



# யோக

### உடலுக்கு ஒளி... மனதுக்கு அமைதி !

நமது நோயின் தன்மைக்கு ஏற்ற மருந்து, மாத்திரைகளை எடுத்தாலும், நமது உடல்நிலை பின்னோக்கி செல்லாமல் இருக்க, சில வாழ்வியல் முறைகளும் இன்றைக்கு அவசியமானதாக இருக்கிறது என்பதனால், முறையான உடற் பயிற்சி, சுவாசப் பயிற்சி மற்றும் யோகா தெரபியையும் சேர்த்தே நோயாளிகளுக்கு வழங்க மருத்துவமனைகள் சில முன் வருகின்றன. இன்று மாடர்ன் மெடிசனோடு யோகா தெரபியையும் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு பரிந்துரை செய்கின்றனர்.

இதில் யோகா பயிற்சியாளர் என்பவர், ஆசனத்தின் இலக்கணத்திற்கு ஏற்ப உடலை வளைத்து, நெளித்துக் கொண்டு செல்பவர். யோகா தெரபிஸ்ட் என்பவர் நோயாளியின் உடலுக்கு எந்த அளவுக்கு நெகிழ்வுத் தன்மையும், பலமும் இருக்கிறதோ அதற்கு ஏற்ற ஆசனங்களை, இலக்கணம் மாறாமல் மாற்றங்களை செய்து கற்றுத் தருபவர். இனி இந்த இதழுக்கான ஆசனங்கள் சிலவற்றை தொடர்ந்து பார்ப்போம்.

ஹஸ்த உத்தானாசனம்

விரிப்பு ஒன்றின் மீது இரண்டு கால்களையும் இணையாக வைத்து, தலை, கழுத்து, முதுகுத் தண்டு வடம் நேர்கோடாக இருக்கும் படி நிமிர்ந்து நிற்க வேண்டும். கைகள் இரண்டும் தொடையை தொட்டுக் கொண்டு இருத்தல் வேண்டும். இது ஆரம்ப நிலை. இதனை ஸ்திதி அல்லது சம ஸ்திதி என்று கூறலாம்.சம ஸ்திதியில் நின்று கொண்டு உள் மூச்சை இழுத்துக் கொண்டே இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி இடுப்பிலிருந்து பின் பக்கமாக லேசாக வளைய வேண்டும். இந்த நிலையில் மார்பு பகுதியானது நன்றாக விரிந்திருக்கும். கைகளை பின் நோக்கி நன்றாக எடுத்துச் செல்ல வேண்டும்.



கழுத்துப் பகுதிகளில் தோள்களின் இறுக்கம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த நிலையில் 10லிருந்து 20 விநாடிகள் அப்படியே நிற்கலாம். பிறகு மூச்சினை வெளி விட்டபடி முதுகுத் தண்டையும், தலையும் நேராக்கி, இரண்டு கைகளையும் பொறுமையாக தொடையோடு பக்கவாட்டில் தொடும்படி கொண்டுவர வேண்டும்.ஹஸ்த என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு கைகள் அல்லது கரம் என்று அர்த்தம். உத்தான என்ற சொல்லுக்கு நீட்டுதல் அல்லது விரிவாக்குதல் என்று அர்த்தம். இரண்டு கைகளையும் மேலே உயர்த்தியும், நீட்டியும் நிற்பது ஹஸ்த உத்தானாசனம்.

செய்யக் கூடாதவை

*முதுகு வலி மற்றும் கழுத்து வலிப் பிரச்னை






ஆ.வின்சென்ட் பால்

உள்ளவர்கள் பின் நோக்கி சாய வேண்டாம்.

*உயர் ரத்த அழுத்தம், இதய நோய் பிரச்னை உள்ளவர்கள் லேசான சாய்வுடன் நிறுத்த வேண்டும்.

*கர்ப்ப காலங்களில் மருத்துவரின் ஆலோசனை பெற்றே செய்ய வேண்டும்.


*தலைசுற்றல், மயக்கம், உடலை சமநிலைப்படுத்துவதில் சிக்கல் உள்ளவர்கள் சுவற்றைப் பிடித்து செய்யலாம்.

பலன்கள்

*முதுகுத் தண்டின் நெகிழ்வுத் தன்மை கூடும்.

*தோள் மற்றும் கைகளில் தசைகள் வலிமை பெறும்.

*மார்பு மற்றும் நுரையீரல் பகுதி விரிவடைவதால் ஜீவகாந்தம் வலிமை பெறும்.




*வயிற்றுப் பகுதி உறுப்புகளுக்கு ரத்த ஓட்டம் பாயும்.




*செரிமான மண்டலம் பலம் பெறும்.

*உடல் சோர்வும், மன அழுத்தமும் குறையும்


*சுறுசுறுப்பும், விழிப்புணர்வும் கூடும்.

*நம்பிக்கை, நேர்மறை எண்ணங்கள், இரக்கம், தைரியம், சுயமரியாதை மாதிரியான குணங்கள் மேன்மையுறும்.

அர்த்த உத்தானாசனம்

அர்த்த என்ற சொல்லுக்கு அரை அல்லது பாதி என்று அர்த்தம். அர்த்த உத்தானாசனம் என்றால் உத்தானாசனாவில் பாதி எனப் பொருள்.

கால்கள் இரண்டையும் இணைத்து விரிப்பின் மீது நின்று கொள்ள வேண்டும். மூச்சினை உள்ளிழுத்தபடி கைகள் இரண்டையும் தலைக்கு மேல் உயர்த்த வேண்டும். இப்போது மார்பு பகுதி விரிவடையும். வெளி மூச்சினை உள் இழுத்த நிலையில், படத்தில் காட்டியிருப்பது போல், இடுப்பு பகுதியில் இருந்து முழு உடலையும் முன் நோக்கி கொண்டு செல்ல வேண்டும். இப்போது முதுகுத் தண்டு, கழுத்து, தலை நேராக இருத்தல் வேண்டும்.




கைகள் இரண்டையும் இப்போது, மெதுவாகக் கீழே இறக்கி தரை மீது வைக்க வேண்டும். பார்வை இப்போது கீழ் நோக்கி அல்லது முன்னோக்கி இருக்கலாம். கைகளை தரையில் பதிக்க முடியாதவர்கள், முழுங்கால் அல்லது கணுக் கால்களை பிடிக்கலாம். பத்து முதல் இருபது விநாடிகளுக்கு அர்த்த உத்தானாசன நிலையில் இருந்து விட்டு மீண்டும் உள் மூச்சினை எடுத்து ஸ்திதி நிலைக்கு செல்லலாம்.

செய்யக் கூடாதவை

*முதுகுத் தண்டில் காயம், பிரச்னை உள்ளவர்கள் தரை வரை கைகளைக் கொண்டு செல்லாமல், முழங்கால்களிலேயே வைக்கலாம்.



*கழுத்து வலி, கழுத்து எலும்பில் அழற்சி உள்ளவர்கள், பார்வையை முன்னோக்கி வைக்காமல் கீழே பார்க்கலாம்.

*உயர் ரத்த அழுத்தம், மயக்க பிரச்னை உள்ளவர்கள் நீண்ட நேரம் இந்த ஆசனத்தில் இருக்க வேண்டாம்.

*கர்ப்ப காலத்தில், கால்களை விரித்து, கைகளைத் தொடை அல்லது முழங்கால் பகுதியில் வைத்து இந்த ஆசனத்தை செய்ய வேண்டும்.

பலன்கள்

*முதுகெலும்பு நீட்டிப்பு அடையும்.

*கழுத்து, தோள், முதுகு தசைகள் நெகிழ்வு கூடும்.

*இடுப்பு பகுதி, பிட்டம், தொடையின் பின்புற தசைகள் வலிமை பெறும்.

*உடல் சோர்வு குறையும். உடலின் சமநிலை மேம்படும்.

*மன அழுத்தம் குறையும்.

*ஒருமித்த சிந்தனையும், கவனமும் கூடும்.

உத்தானாசனம்

விரிப்பின் மீது சம நிலையில் நிற்க வேண்டும். இப்போது தலை, கழுத்து, முதுகுத் தண்டு நேராய் இருத்தல் வேண்டும். உள் மூச்சை இழுத்த படி இரண்டு கைகளையும் மேலே தூக்கி முதுகுத் தண்டை நன்றாக நீட்டிக்க வேண்டும். வெளி மூச்சை எடுத்தபடி இடுப்பிலிருந்து மெதுவாக முன்நோக்கி வளைய வேண்டும். இரண்டு கைகளையும் கீழே கொண்டு வந்து முதல் கட்டமாக விரல் நுனிகளை தரையில் தொட்டபடி வைத்துக் கொள்ளலாம்.

இன்னும் மேம்பட்ட நிலையை அடைய கை விரல்களை பாத விரல்களுக்கு அடியில் வைத்து அழுத்திக் கொண்டால் அது பாத ஹஸ்தாசனம். மேலும், மேம்பட்ட நிலைக்கு இரண்டு கைகளையும் கொண்டு சென்று, குதிங்கால்களின் பின் பகுதியில் நன்றாக பிடித்துக் கொண்டு இருந்தால் அதுவே உத்தானாசனம். 10ல் இருந்து 20 விநாடிகளுக்கு உத்தானாசனத்தில் இருந்து விட்டு, உள் மூச்சினை இழுத்தபடி கைகள், மேல் உடம்பு அனைத்தையும் நேராக நீடிக்க வேண்டும். பிறகு கைகளை மட்டும் இறுக்கி சம நிலைக்கு வந்து விடலாம்.

தொடக்க நிலை பயிற்சியாளர்கள் எனில்,




இரண்டு பாதங்களுக்கு இடையே சிறிது அகலம் வைத்து, முழங்கால்களை முதலில் மடக்கிக் கொள்ளலாம். மேம்பட்ட நிலையில் வருவதற்கு பாதங்கள் நேராகவும், முழுங்கால் நேராகவும், முதுகுத் தண்டின் டெய்ல்போன் பகுதி மேல் நோக்கியும் இருத்தல் அவசியம். தோள்கள், கழுத்து, தலைப்பகுதி தளர்வாக இருக்க வேண்டும். உயர் ரத்த அழுத்த பிரச்னை உள்ளவர்கள் மெதுவாகவும், கவனமாகவும், தளர்வாகவும் செய்து பழகுதல் வேண்டும்.

பலன்கள்

*அர்த்த உத்தானாசனத்தின் பலன்கள் இதிலும் கிடைக்கும்.

*மூளைச் செல்களுக்கு செல்கிற ரத்த ஓட்டம் அதிகரிக்கும்.

*தைராய்டு மற்றும் பிட்யூட்டரி சுரப்பிகளின் செயல்பாடு மேம்படும்.

*பெரிமெனோபஸ் நேரத்தில் பெண்களுக்கு வரும் மனநிலை மாற்றம் சமநிலைப்படுத்த உதவும்.

பாலாசனம்

விரிப்பின் மீது மண்டி இட்டு அமர்ந்து கொள்ள வேண்டும். இப்போது பாத விரல்கள் இரண்டும் ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். உடலையும், மனதையும் சற்று தளர்த்தியபடி மெதுவாக இடுப்பை கீழே இறக்கி குதிங்கால்கள் மீது உக்கார வேண்டும்.கைகள் இரண்டையும் விரிப்பின் மீது வைத்து தளர்வாக, பொறுமையாய் முன் பக்கம் விரிப்பின் மீது நெற்றி படும் வரை குனிய வேண்டும். இதே நிலையில் ஐந்து நிமிடம் வரை இந்த ஆசனத்தில் தாராளமாய் இருக்கலாம். ஆசனத்திலிருந்து வெளிவர, மூச்சினை உள்ளே இழுத்துக் கொண்டே, முதுகுத்தண்டை நேராகக் கொண்டு வர வேண்டும். இப்போது இரண்டு கைகளையும் மென்மையாக தேய்த்து கண்களின் மேல் ஒத்தி வைத்து, பிறகு கண்களை மெதுவாகத் திறக்கலாம்.




பலன்கள்

*மனமும் உடலும் தளர்வடையும்.

*மன அழுத்தம் குறைகிறது.

*நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்துகிறது.

*உடலிலும் மனதிலும் உள்ள பதற்றம் குறைவதால் தூக்கமின்மை பிரச்னைகள் வராமல் இருக்கும்.

*வயிற்றுப்பகுதி தொடை மீது அழுத்துவதால், குடல் மற்றும் உள்ளுறுப்புகளுக்கு மசாஜ் கிடைக்கிறது.

*உணவு செரிமானம் சீராகி, மலச்சிக்கல் பிரச்னை குறைகிறது.


*முதுகெலும்புக்கு ஓய்வும், தளர்வும் கிடைக்கிறது.

*ரத்த ஓட்டத்தை உடல் முழுவதும் துரிதப்படுத்தும்.

*இடுப்புவலி பிரச்னையில் இருந்து தப்பிக்கலாம்.

*கணுக்கால் பகுதி பலம் அடைவதுடன், நெகிழ்வுத் தன்மை கூடுகிறது.

*மார்பு பகுதி விரிவடைவதால் சுவாச செயல்பாடு சிறப்பாக இருப்பதுடன், உடல் முழுமைக்குமான ஆக்சிஜன் சப்ளை அதிகரிக்கும்.




பார்ஸ்வ பாலாசனம்

இதுவொரு ஜென்டில் ட்விஸ்டிங் ஆசனா. முதலில் டேபிள் டாப் நிலைக்கு வந்து, படத்தில் காட்டியுள்ளது போல், இடது கை மற்றும் இடது முட்டிக்கு இடையே உள்ள இடைவெளிக்குள், வலது கையினை உள்ளே நுழைக்க வேண்டும். இப்போது வலது தோள் பட்டை முழுமையாக விரிப்பின் மீது பட வேண்டும்.மேல் உடலின் எடை முழுவதும் வலது தோள் பட்டையில் தெரிய வேண்டும். இதுவே பார்ஸ்வ பாலாசனம். ஊசியின் கண்ணுக்குள் நூலை நுழைப்பதை போன்று இது இருப்பதினால் **Thread and Needle pose** என்றும் பெயர் உள்ளது.30 விநாடிகள் முதல் ஒரு நிமிடம் வரை இந்த ஆசன நிலையில் இருக்கலாம். உள் மூச்சு, வெளி மூச்சு இரண்டையும் எடுத்துக் கொண்டே, முதுகுத்தண்டை கவனிக்க வேண்டும். வலது பக்கம் செய்தது போலவே இடது பக்கமும், அதே கால அளவில், படத்தில் காட்டியிருப்பது போல் செய்தல் அவசியம்.

பலன்கள்

*நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்துகிறது.

*ரத்த ஓட்டம் மேம்படுகிறது.


*வயிற்றுப் பகுதி உறுப்புகளுக்கு மசாஜ் கிடைப்பதால் செரிமானம் சீராகிறது.

*மன அழுத்தம் குறைந்து, உடலின் நெகிழ்வுத் தன்மை அதிகரிக்கிறது.

*உடலில் உள்ள ஆற்றல் மையங்களை **(chakras)** சமநிலைப்படுத்துகிறது.

பச்சிமோட்டானாசனம்

இது மிகவும் சிறப்பானதொரு ஆசனம் ஆகும். விரிப்பின் மீது கால்களை நீட்டியபடி அமர்ந்து கொள்ள வேண்டும். இப்போது முதுகுத்தண்டு






நேராக இருத்தல் வேண்டும். மூச்சினை உள்ளிழுத்தபடி கைகளை மேலே உயர்த்தி, முதுகுத் தண்டு வடத்தை நன்றாக உயர்த்தி, உடலுக்கு ஒரு நல்ல நீடிப்பை கொடுக்க வேண்டும். மூச்சினை இப்போது வெளியேற்றியபடி, முன்பக்கம் நன்றாகக் குனிந்து, கைகள் இரண்டும் கால் பாதங்களில் உள்ள பெரு விரல்களை பிடித்த நிலையில், நன்றாக உள் மூச்சு, வெளி மூச்சு எடுத்தபடி, இடுப்பு பகுதியிலிருந்து மேல் உடலை மடித்து, படத்தில் காட்டியிருப்பது போல், முன் பக்கமாக கொண்டுவர வேண்டும். இப்போது நெற்றி முட்டியில் படும் வரை கீழ்நோக்கி வருவதற்கான முயற்சியினை செய்ய வேண்டும்.

பலன்கள்

*மன அழுத்தம், பதற்றம், மனச் சோர்வை குறைக்க உதவும்.

*முதுகு தசைகளை தளர்த்தி நீட்டிக்க உதவுகிறது.


*முதுகெலும்பு வலுவடைகிறது.

*தொடை எலும்புகள் மற்றும் கெண்டைக்கால் தசைகள் வலிமை பெறுகிறது.

*மூல பந்தம், உட்டியான பந்தம், ஜலந்தர பந்தம் என்ற மூன்று பந்தங்களுமே இந்த ஆசனம் செய்யும் பொழுது செயல்படுகிறது.

*உடலில் உள்ள ஆற்றல் கலம் தூண்டடப்படுகிறது.

*நீண்ட நேரம் இந்த ஆசனத்தில் இருப்பதற்கு, முறையான பயிற்சி எடுத்தவர்களால் அவர்களின் குண்டலினி சக்தி தூண்டப்படுவதை உணர முடியும்.




பூர்வோத்தனாசனம் **(Upward plank pose)**

கால்கள் இரண்டையும் நீட்டிய படி விரிப்பின் மீது அமர வேண்டும். கைகள் இரண்டையும் இடுப்புக்கு பின் பக்கமாக, உள்ளங் கைகள் தரையில் படும்படி வைக்க வேண்டும். இப்போது விரல்கள் அனைத்தும் உள் நோக்கி இருக்க வேண்டும். உள்ளங்கைகள் வழியாக, தரையில் இருந்து உடலுக்கு ஒரு உந்துதலைக் கொடுத்து இடுப்பை மெல்ல, படத்தில் காட்டியிருப்பது போன்று மேலே தூக்க வேண்டும். மார்பு பகுதி இப்போது நன்றாக விரிந்திருக்க வேண்டும். அதேநேரம், கழுத்து தளர்வாகவும், தலை துவண்ட நிலையிலும் இருக்க வேண்டும். 30 விநாடிகள் முதல் ஒரு நிமிடம் வரை இந்த ஆசனத்தில் இருக்கலாம். இது பச்சிமோட்டானாசனாவுக்கு மாற்றான ஒரு நல்ல ஆசனமாக இருக்கிறது.




பலன்கள்

*லோவர் பேக் ஸ்டெங்தனிங், ஷோல்டர் ஸ்டெங்தனிங் இரண்டுமே இதன் மிக முக்கிய பலன்கள்.

*முதுகெலும்பு, முதுகு தசைகள், மணிக்கட்டுகள், புஜங்கள், கால்களை பலப்படுத்துகிறது.

* தோள் பட்டை மற்றும் மார்பும் விரிவடைவதால் சுவாசப் பிரச்னைகள் சரியாகும்.



# மருத்துவத்

## புதினா நல்லதுதான் !

புதினா — வரலாறு மற்றும் கலாசார முக்கியத்துவம் கொண்ட இயற்கை மருத்துவ முறையில் முக்கிய இடம்பெற்ற மூலிகை ஆகும். இவ்வளவு சிறப்பு பெற்ற புதினாவை இரவு முழுவதும் தண்ணீரில் ஊற வைத்து காலை எழுந்தவுடன் வடிகட்டி வெறும் வயிற்றில் பருகுவதை புதினா நீர் என்கிறோம் இதன் பயன்கள் குறித்து இந்தப் பதிவில் காண்போம். நம்முடைய அன்றாட உணவில் பயன்படுத்துகிற புதினா நிறைய மருத்துவ குண்ஙகளைக் கொண்டிருக்கிறது. அதேசமயம் அதில் பக்க விளைவுகளும் உண்டு. அதுபற்றி இங்கே பார்க்கலாம்.

நாம் தினமும் பிரியாணி, சட்னி இவற்றில் பயன்படுத்தும் புதினாவில் ஏராளமான மருத்துவ பலன்கள் உள்ளன. புதினா எண்ணெய், புதினா மாத்திரைகள் என்று நிறைய வடிவங்களில் நமக்கு பயன்படுகிறது. மாதவிடாய் பிடிப்புகள், வாய் துர்நாற்றம் நீங்க, சீரண சக்திக்கு என்று இதன் பயன்கள் ஏராளம்.

மிளகுக்கீரை (புதினா) ஒரு வாசனையுடைய தாவரமாகும். இதன் வாசனையால் பிரியாணி போன்ற சமையலில் பயன்படுகிறது. வாயில் இருக்கும் துர்நாற்றத்தை போக்க இதை வாயில் போட்டு மெல்வதால் வாயிற்கு நல்ல புத்துணர்ச்சி கிடைக்கிறது. அதனால் தான் மெந்தோ ஃபிரஸ், சுவீங்கம், மவுத் வாஷ் போன்றவற்றில் கூட இதை பயன்படுத்துகின்றனர். இது உடலுக்கு குளிர்ச்சியை கொடுக்கக் கூடிய ஒரு தாவரமாகும். நிறைய மருத்துவ குணங்களை கொண்டு இருப்பதால் இந்த புதினா இலைகளை நீங்கள் டீ போட்டு குடிக்கலாம். இதன் மூலம் நிறைய நன்மைகளை பெற முடியும். தலைவலி, சீரண சக்தி, வாய் ஆரோக்கியம் என்று நிறைய இடங்களில் பயன்படுகிறது. இந்த இலைகளிலிருந்து பெறப்படும் எண்ணெய்களும் நமக்கு உடம்பு வலிகளை நீக்க உதவுகின்றன. அதிலுள்ள மருத்துவ குணங்கள் என்ன என்பதை இங்கே காண்போம்.






### புதினா எண்ணெய்

மிளகுக்கீரை (மெந்தா பைபெரிட்டா) என்பது மருத்துவ துறையில் பயன்படுத்தப்படும் தாவரமாக உள்ளது. இந்த தாவரத்தில் இருந்து பெறப்படும் எண்ணெய் மாத்திரை வடிவில் கூட கிடைக்கின்றன. நிறைய உணவுப் பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது. எளிதில் சீரண சக்தியை கொடுக்கக் கூடிய மூலிகை.

இதன் இலைகள், பூக்களை உலர்த்தி காய வைத்து அதிலிருந்து மெந்தால் எண்ணெய் எடுக்கிறார்கள். இவற்றை ஆல்கஹால் தயாரிப்பிலும் பயன்படுத்துகின்றனர். ஏனெனில் மெந்தால் மனதிற்கு ஒரு அமைதியை கொடுக்க கூடியது. இந்த எண்ணெய்யை இயற்கை வைத்தியங்கள் மற்றும் அரோமோதெரபிகளில் பயன்படுத்துகின்றனர். மிளகுக்கீரை எண்ணெய் வயிற்று பிரச்சனைகள்






**மணிமேகலை**

மற்றும் நெஞ்செரிச்சலை சரி செய்கிறது.

உடல் நல நன்மைகள்

புதினா ஒரு கலப்பின தாவரமாகும். ஸ்பியர்மின்ட் மற்றும் வாட்டர்மின்ட் தாவரத்தை கலப்பு செய்து உருவாக்கப்பட்டது. இதன் எண்ணெய்யை தலைக்கு தேய்த்தால் அல்லது உடம்பிற்கு தேய்த்தால் ஒரு குளிர்ச்சி தன்மை கிடைக்கும். இதில் ஆன்டி மைக்ரோபியல் மற்றும் மயக்கக்கூடிய பண்புகள் உள்ளன. இதன் நறுமணம் ஒரு கார்மினேடிவ் ஏஜெண்ட் மாதிரி செயல்பட்டு வயிற்றில் இருக்கும் வாயுவை வெளியேற்றுகிறது.

அதுமட்டுமல்லாமல் இந்த புதினா கீழ்க்கண்ட நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

ஒவ்வாமை நாசியழற்சி கெட்ட சுவாசம் சளி பல் வலி அஜீரணக் கோளாறுகள் எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி (ஐ.பி.எஸ்) மாதவிடாய் பிடிப்புகள் ஒற்றைத்தலைவலி காலை நோய்(மார்னிங் சிக்) குமட்டல் சைனஸ் நோய்த் தொற்று பதற்ற தலைவலிபோன்றவற்றை சரி செய்ய உதவுகிறது.

குடல் பிரச்சனைகள்




மலம் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல் உணர்வை மிளகுக்கீரை போக்குகிறது. மலத்தை இலகுவாக வெளியேற்றி குடலை நிதானப்படுத்துகிறது. ஜர்னல் ஆஃப் கிளினிக்கல் காஸ்ட்ரோஎன்டாலஜி இதழில் வெளியிடப்பட்ட ஆய்வுகளின் படி, புதினா எண்ணெய் எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறிக்கு ஒரு சிறந்த மருந்தாக செயல்படுகிறது. இதற்காக அவர்கள் 726 பேர்களை கொண்டு 9 விதமான ஆய்வுகளை நடத்தினர். இதன் முடிவு எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறிக்கு புதினா எண்ணெய் சிறந்தது என்பது தெரிய வந்தது.




இது குடலில் உள்ள தசைப்பிடிப்பை குறைத்து எரிச்சலை குறைக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். குடலில் இருக்கும் பிரச்சனையை காண பயன்படும் கொலோனோஸ்கோபிக்கு சிகிச்சைக்கு முன் புதினா எண்ணெய் கலந்த இனிமாவை தான் கொடுப்பார்கள். இது குடலை சுத்தப்படுத்த உதவுகிறது. இந்த எண்ணெய் சிகிச்சையின் போது குடல் தசைகளை சுருக்க உதவுகிறது. இதன் மூலம் பிடிப்புகள் குறைகிறது என்று ஆக்டா காஸ்ட்ரோ—என்டோரோலிகா பெல்ஜிகாவில்



வெளியிடப்பட்ட ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

அஜீரணம்

அலிமென்டரி மருந்தியல் மற்றும் சிகிச்சை முறைகளில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின் படி , மிளகுக்கீரை எண்ணெய் மற்றும் கேரவே எண்ணெய் கலவையானது அஜீரணக் கோளாறுகளுக்கு சிறந்த தீர்வளிக்கிறது என்கிறது. இதற்காக டிஸ்பெபெஸியா கொண்ட 96 பேர்கள் கலந்து கொண்ட னர். 28 நாட்களுக்கு அவர்களுக்கு 90 மி. கி புதினா எண்ணெய், 50 மி. கி கேரவே எண்ணெய்யும் பரிந்துரைக்கப்பட்டது. இந்த எண்ணெய்யை பயன்படுத்திய பிறகு அவர்களுக்கு வயிற்று வலி, அழுத்தம், வயிறு கணத்தல், மந்தம் போன்ற பிரச்சினைகள் குறைந்திருப்பது தெரிய வந்துள்ளது. இதே மாதிரி காலை நோய் (ஹைபரெமஸிஸ் கிராவிடாரம்) வாந்தி, குமட்டல் போன்றவற்றிற்கும் உதவுகிறது.

தலைவலி

2010 ஆம் ஆண்டு சர்வதேச மருத்துவ மருத்துவ இதழில் வெளியிடப்பட்ட கருத்துப் படி மிளகுக்கீரை எண்ணெய்யை தலையில் தேய்த்து வந்தாரை தலைவலி சரியாகும். இதற்காக ஒற்றைத் தலைவலி கொண்ட 35 பேர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். புதினா எண்ணெய்யை தலையில் தடவ கொடுக்கப்பட்டது. இதன் பயனாக அவர்களுக்கு நீண்ட நாட்கள் இருந்து வந்த ஒற்றைத் தலைவலி, குமட்டல், வாந்தி, ஒலி ஒளி உணர்திறன் பிரச்சனைகள் சரியாகி இருப்பது தெரிய வந்துள்ளது. ஒற்றைத் தலைவலி அடிக்கடி வருகிறவர்கள் புதினாவை அரைத்து மெல்லிய பற்று நெற்றியில் போடலாம். சிறிது நேரத்திலேயே தலைவலியில் இருநுத்து விடுபடுவீர்கள்.



பதற்ற தலைவலி

1996 ஆம் ஆண்டு நடந்த ஆய்வில் பதற்றத்தால் வரும் தலைவலியைக் கொண்ட 41 பேர்கள் ஆய்வுக்கு ஈடுபட்டனர். அவர்களுக்கும் புதினா எண்ணெய் கொடுத்து தலையில் தடவ வைத்தார்கள். புதினா எண்ணெய் 1000 மி. கி டைலெனால் (அசிடமினோபன்) மருந்தை போல செயல்பட்டது எல்லாருக்கும் ஆச்சர்யத்தைகொடுத்தது.இது எப்படி சாத்தியம் என்பது இன்னும் தெளிவாகப்படவில்லை. ஆனால் இது குறித்து மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால் புதினா எண்ணெய் கன்னம், தாடைப்பகுதியில் உள்ள நரம்புகளை ரிலாக்ஸ் செய்கிறது. இதனால் தலைவலி போய்கிறது என்றனர். அதுமட்டுமல்லாமல் இதன் நறுமணம் மனதிற்கு அமைதியை தருவதால் மன அழுத்த சிகிச்சைக்கு கூட இந்த புதினா எண்ணெய்யை பயன்படுத்துகின்றனர்.

பல் பிரச்சனை, வாய் துர்நாற்றம் போக

புதினாவின் நறுமணத்தால் அது நமக்கு ஏற்படும் வாய் துர்நாற்றத்தை போக்குகிறது. துர்நாற்றத்திற்கு காரணமான கெட்ட பாக்டீரியாக்களை ஆன்டி மைக்ரோபியல் தன்மையால் அழிக்கிறது. 2013 ஆம் ஆண்டு நடந்த ஆய்வில் புதினா ஸ்டேஃபிளோகோகஸ் ஆரியஸ், எஸ்கெரிச்சியா கோலி, மற்றும் கேண்டிடா அல்பிகான்ஸ் போன்ற நச்சு பாக்டீரியாக்களை அழிப்பது தெரிய வந்துள்ளது. மேலும் இதன் குளிர்ச்சி தன்மை பல் வலியை குறைக்க உதவுகின்றன.

சளித்தொல்லை

உங்களுக்கு ஒவ்வாமை, சளி, சுவாச தொற்று எது இருந்தாலும் சில துளிகள் மிளகு எண்ணெய்யை சூடான நீரில் இட்டு ஆவி பிடித்தால் சளித்தொல்லை நீங்குகிறது. இந்த எண்ணெய் யூகாப்லிப்டஸ் ஆயில் போல செயல்படுகிறது. 2014 ஆம் ஆண்டு பைட்டோமெடிசின் அவிசென்னா ஜர்னலில் வெளியிட்ட ஆய்வில், மிளகுக்கீரை எண்ணெய்யை நேரடியாக சுவாசிப்பது சுவாச செயல்பாட்டை பாதிக்கிறது என்று குறிப்பிடப்பட்டது. இதனால் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டு புதினா எண்ணெய் மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட்டன. மேலும் 5 நிமிடங்கள் மட்டுமே சுவாசிக்க பரிந்துரைக்கப்பட்டது. இது நம் நுரையீரல் காற்று கொள் திறனில் 35.1 சதவிகிதம் மற்றும் (பி.இ.எஃப்) 65.1 சதவிகிதம் அதிகரிப்பது தெரிய வந்தது.

மாதவிடாய் பிடிப்புகள்

பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில்




ஏற்படும் பிடிப்புகளை சரி செய்ய புதினா எண்ணெய்யை பயன்படுத்துகின்றனர். 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், 127 மாதவிடாய் பிடிப்பு கொண்ட பெண்கள் கலந்து கொண்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு 3 நாட்கள் தொடர்ந்து புதினா மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட்டன. மோட்ரின் (இப்யூபுரூஃபன்) அல்லது அலீவ் (நாப்ராக்ஸன்) போன்ற ஸ்டெராய்டல் அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளுடன் ஒப்பிடும் போது மாதவிடாய் வலியை வெகுவாக குறைத்து இருப்பது தெரிய வந்துள்ளது. மாதவிடாய் கால வலியிலிருந்து நிவாரணம் பெற புதினா டீயைக் குடிக்கலாம். அந்த எண்ணெய் மிகச் சிறந்த தீர்வைத் தரும்.

பக்க விளைவுகள்

நெஞ்செரிச்சல், வாய்ப் புண்கள், தலைவலி போன்ற அழற்சியை ஏற்படுத்தலாம்.

குடலிறக்கம், கல்லீரல் பாதிப்பு, பித்தக் குழாய் அடைப்பு இருப்பவர்கள் புதினா மாத்திரைகளை தவிர்ப்பது நல்லது. இது கூடுதல் சிக்கலை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

சருமத்திற்கு இந்த எண்ணெய்யை அப்ளே செய்யும் போது பாதாம் அல்லது ஜோஜோபா எண்ணெய் போன்ற கேரியர் எண்ணெயுடன் கலந்து மட்டுமே பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் எரிச்சல், சருமம் சிவத்தல் ஏற்படலாம்.

குழந்தைகளுக்கு இந்த எண்ணெய்யை எக்காரணம் கொண்டும் பயன்படுத்த கூடாது.

வினைபுரியும் மாத்திரைகள்

மிளகுக்கீரை மாத்திரைகள் சில மாத்திரைகளுடன் வினை புரியக் கூடியது. எனவே உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொண்டு சாப்பிடுங்கள்.

அஜிலெக்ட் (ரசகிலின்) க்ளோசரில் (க்ளோசாபின்) கோக்னெக்ஸ் (டாக்ரின்) டைரினியம் (ட்ரையம்டிரீன்) ஃப்ரோவா (ஃப்ரோவாட்ரிப்டன்) யூலெக்சின் (புளூட்டமைடு) லோட்ரோனெக்ஸ் (அலோசெட்ரான்) மெக்ஸிடில் (மெக்ஸிலெடின்) ரெமரான் (மிர்டாசபைன்) கோரிக்கை (ரோபினிரோல்) ரோசெரெம் (ரமெல்டியோன்) ஜானாஃப்ளெக்ஸ் (டைசானிடைன்) சோமிக் (ஜோல்மிட்ரிப்டன்) ஜிப்ரெக்சா (ஒலான்சாபின்)




இது போன்ற மாத்திரைகள் எடுத்துக் கொள்கிறவர்கள் புதினாவை எடுத்துக் கொள்ளக் கூடாது. அது ஒவ்வாமையை ஏற்படுத்தக் கூடும். அதனால் மருத்துவ ஆலோசனை அவசியம்.

சிறுநீரக கல் முதல் தலை வழுக்கை வரை எல்லா பிரச்சினைக்கும் தீர்வு தரும் கோபுரந்தாங்கி மூலிகை...

எடுத்துக் கொள்ளும் அளவு

மிளகுக்கீரை எடுத்துக் கொள்ளும் அளவாக 90 மி. கி — 120 மி. கி வரை பரிந்துரைக்கப்படுகிறது. மிளகுக்கீரை எண்ணெய், மாத்திரைகளை மருந்து கடைகளில் ஆன்லைன்களில் வாங்கி பலன் அடையலாம். மாத்திரைகளை வாங்கும் போது நுகர்வோர் தரச் சான்றிதழ் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள். புதினா தேயிலை கடைகளில் கிடைக்கிறது.

கவனத்தில் வைக்க வேண்டியவை

புதினா எண்ணெய்யை ஒரு போதும் குடிக்க கூடாது. ஏனெனில் இதன் அடர்த்தி அதிகம் என்பதால் உடம்பிற்கு நச்சாகும். மெதுவான இதய துடிப்பு, சுவாசம் விரைவாகுதல் , தலைச்சுற்றல், குமட்டல் வாந்தி, சிறுநீரில் இரத்தம் வருதல் , சிறுநீர் கழிக்க இயலாமை , வலிப்பு மற்றும் மயக்கமின்மை



பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)

# இயக்கும்

## இசையால் வசப்படுத்தலாம்!


அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், சீனா, பின்லாந்து, டென்மார்க், ஹாலந்து உள்ளிட்ட பல நாடுகளிலும் பள்ளி களில் இசைப் பயிற்சி கட்டாயம். பல நாடுகளில் ஆறாம் வகுப்பிலிருந்தும், சில நாடுகளில் ஆறு வயதிலிருந்தும் இசைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இசைக் கருவிகள் வாசிக்கவும் பயிற்றுவிக்கப்படுகிறது.

பள்ளி அளவிலேயே இசைப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் என்ன, இசை பயில்வதால் மாணவர்களுக்கு கிடைக்கும் பலன்கள் யாவை என்ற கேள்விகள் எழும். மாணவர்களின் திறமையை வெளிக்கொணரவும், சரியான வழியில் திருப்பிவிடவும் இசைப் பயிற்சி உதவும். அவர்களின் கவனக் குவிப்பை அதிகரிக்கும்; புலன்கள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்படச் செய்யும்.

இன்றைய மாணவர்களுக்கு கல்வி பெரும் சவாலாக உள்ளது. வீட்டுப் பாடங்கள், தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள், போட்டித் தேர்வுகளுக்காக ஆயத்தப்படுத்துதல் என தொடர்ச்சியாக பல சவால்கள் முன்நிற்கின்றன. இருப்பினும், பள்ளியில் ஒவ்வோர் நாளும் 45 நிமிஷங்கள் இசைப் பயிற்சிக்காக ஒதுக்குவது, அவர்களுக்கு மன அழுத்தம் போன்றவற்றில் இருந்து விடுபெற உதவும்.

இசைப் பயிற்சி பெறுபவர்களின் மனதை இலகுவாக ஆக்கும் வல்லமை இசைக்கு உண்டு. எனவே, அதைக் கற்பவர்கள் தெளிவான மன நிலையில் செயல்படுவார்கள். மாணவர்களின் நேரம், தரமான வழியில் செலவிடப்படும்; கைப்பேசி போன்றவை ஏற்படுத்தும் தீய தாக்கங்கள் கணிசமாகக் குறையும். சிறார் குற்றங்களும் குறையும்.

ஏராளமான பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கு இது கூடுதல் சுமையா என்ற கேள்வி எழுவது இயல்பு. ஆனால், இசைப் பயிற்சி “திறமை மடைமாற்றும்‘ ஆற்றலை வெளிப்படுத்தும். அதன்மூலம், மாணவர்களின் படைப்பாற்றல் மட்டுமின்றி, மொழி மற்றும் கணிதம் ஆகியவற்றைக் கற்பதற்கான அவசியமான பகுப்பாய்வு திறனும் மேம்படும். அவர்களை பல்துறைகளில் பரிணமிக்கச் செய்யும். இந்தத் தகவலை பள்ளிக்கூட ஆசிரியர்கள் உறுதி செய்கின்றனர். இசை, நாட்டியம் கற்கும் மாணவர்கள், அவற்றில் மட்டுமின்றி, தங்கள் பாடங்களையும் நன்கு கற்கிறார்கள் என்பது



# இசை

இரா. கதிரவன்


தெரியவந்துள்ளது.

குழுவாக வாசிக்க அல்லது பாடுவதற்கு கற்பிக்கப்படும் மாணவர்கள் ஒத்திசைவு பயிற்சி பெறுகிறனர். அதன்மூலம் ஒழுக்கம்}கட்டுப்பாடு, விதிகளுக்கு இயைந்து நடப்பது, குழுவாகச் செயல்படுவது மற்றும் குழுவினர் குறித்த புரிதல் ஆகியன மட்டுமின்றி, ஒருவரிடமிருந்து இன்னொருவர் கற்கும் திறன் வளர்ச்சியும் ஏற்படுகிறது. விடாமுயற்சிக்கும் வித்திடுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இசைப் பயிற்சி என்பது மாணவர்களுக்கு நாம் செய்யும் பேருதவியாகும்.

ஏதோ ஆறேழு ஆண்டுகள் மட்டுமே மாணவர்களுடன் பயணிக்கும் விஷயமல்ல இசை. மாறாக, வாழ்நாள் முழுமைக்கும் துணையாக வருவது. கல்விச் சாலையைக் கடந்து, அவரது பணியிடத்தில் செயல்திறனை அதிகரிக்கும். காரணம், இசைப் பயிற்சி தனி மனிதனுக்கு அர்ப்பணிப்பு, விடாமுயற்சி ஆகிய இரு பெரும் குணங்களை ஏற்படுத்தும்.





தியானம் செய்வதற்கு ஈடான பலனை இசைப் பயிற்சி ஏற்படுத்தும்; இதனால், சீரான ரத்த அழுத்தம் மற்றும் நாடித் துடிப்பு ஆகியன உடல் ஆரோக்கியத்தை உறுதி செய்யும். இல்லத்தில் அமைதி மட்டுமின்றி, அண்டை அயலாருடன் இணக்கம், நல்லுறவு ஆகியவற்றை ஏற்படுத்தும். தனி மனிதனுக்கு மட்டுமின்றி சமூக வளர்ச்சிக்கும் வழிகோலும்.ஏனெனில், இசை என்பது ஜாதி, மத, இன,நிற வர்க்க பேதங்கள் கடந்த உலக மொழியாகும்.




தமிழ் மக்களுக்கு அந்நியமானது அல்ல இசை. நம் தமிழோடு கலந்த ஒன்று; 2000 ஆண்டுகளுக்கு முன்பே பல இசை நூல்கள் நம்மிடம் இருந்தன. முத்தமிழின் ஒரு பகுதியாக இசை இருந்தது. அந்த வகையில், வேறெந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழுக்கு உண்டு. பிறப்பு முதல் இறப்பு வரையில் தமிழர்களுடன் இயைந்தது இசை.

கிராமப் புறங்களில் தற்போது வழக்கத்தில் இல்லையென்றாலும், சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை வயலில் ஏற்றம் இறைக்கும்போதும், நாற்று நடும் போதும், களை எடுக்கும் போதும் அதில் ஈடுபடுவோர் நாட்டுப்புறப் பாடல்

களைப் பாடுவது உண்டு. இறைவனைப் பாடி தொழுது பரவசம் அடைந்தனர் நம் முன்னோர். ஆயினும்,




எப்படி இசை நமக்கு தற்போது அந்நியமானது? என்பது தெரியவில்லை.

ஆங்கிலம், கணிதம், அறிவியல் போன்ற பாடங்களுக்கு டியூசன் செல்பவர்களைவிடவும் இசையைக் கற்றுக்கொள்ளும் குழந்தைகள் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுகிறார்கள்' என்று கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

தற்போது மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று பாடங்களை மட்டும் கற்காமல் 'எக்ஸ்ட்ரா கர்ரிகுலர் ஆக்டிவிட்டிஸ்' என்று அழைக்கப்படும் விளையாட்டுகள், மொழிப் பயிற்சிகள், கராத்தே, சிலம்பம், கணினி வகுப்புகள், நீச்சல்,நடனம் உள்ளிட்ட பல்வேறு வகையான வகுப்புகளுக்குச் சென்று திறன்களை வளர்த்துக்கொள்கிறார்கள். இவை மட்டுமல்லாமல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறவேண்டும் என்பதற்காக டியூசன் செல்பவர்கள் அதிகம். இதுபோன்ற பயிற்சிக்குச் செல்வதைவிடவும் இசைப் பயிற்சி மேற்கொள்ளும் குழந்தைகள்தான் பாடத்தில் அதிகமாகக் கவனம் செலுத்தி, அதிக மதிப்பெண் பெறுகிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள்.




இசை கற்கும் மாணவர்கள்தான் பள்ளியில் டாப்! — ஆய்வு சொல்லும் ஆச்சர்யம்

``பொதுவாக பள்ளி, கல்லூரிகளில் உள்ள மாணவர்கள் இசையைப் படிக்க அதிக ஆர்வம் காட்டமாட்டார்கள். இசையைவிடவும் பள்ளி அல்லது கல்லூரிப் பாடங்களைப் படிக்க டியூசன் அனுப்பவே பெற்றோர்களும் விரும்புகிறார்கள். இசை வகுப்புக்குச் சென்றால் அவர்களால் பாடத்தில் அதிக கவனம் செலுத்தமுடியாது என்ற எண்ணம் அனைவர்

மத்தியிலும் இருப்பதுதான் அதற்குக் காரணம். ஆனால், நாங்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்த எண்ணம் தவறானது என்பது புரியவந்திருக்கிறது. இசையில் ஆர்வமுள்ள மாணவர்கள்தான் மற்றவர்களைவிடவும் அதிக மதிப்பெண் பெற்று சிறந்துவிளங்குகிறார்கள். பள்ளிகளில் மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்குச் சென்றபிறகும் அவர்கள் மற்றவர்களைவிடவும் படிப்பில் மேம்பட்டவர்களாக இருக்கிறார்கள்” என்று இந்த ஆய்வை மேற்கொண்ட பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீட்டர் கூறியிருக்கிறார்.

இசை பரவலாக்கப்பட வேண்டும்; பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். பொருளாதாரம்} குடும்பச் சூழல் போன்றவை இசைப் பயிற்சிக்குத் தடையாக இருக்கக் கூடாது.

இசையைப் பாடத் திட்டத்தில் சேர்ப்பதற்கு முன்பாக, அதை மாணவர்களுக்கு கற்பிக்க தரமான ஆசிரியர்களை போதிய எண்ணிக்கையில் நியமிக்க வேண்டும். தற்போது, இத்தகைய ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். எனவே, இசைக் கல்லூரிகள் இசை ஆசிரியர்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்க வேண்டும். அரசு ஊக்கம் தந்தால், இசைக் கல்லூரிகளில் ஏராளமானோர் சேர்ந்து பயின்று, மாணவர்களுக்கு கற்பிக்க முன்வருவர்.




தமிழருக்கும் இசைக்கும் அப்படி ஒரு பொருத்தம். இசை என்பது இனிமையான ஒலி. இசை, மனதை லயிக்கவைத்து தன் வசப்படுத்தும். இசைக்கு மயங்காதோர் யாரும் கிடையாது என்றுகூட சொல்லலாம். நாம் மட்டுமில்லாமல் அந்த காலத்திலே சங்ககால தமிழர்களும் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள். இசை அனைவரையும் கட்டிப்போடும் ஒரு வசீகரன்.

சங்ககால இலக்கியங்களிலும் இசை முக்கிய இடத்தை பிடித்திருந்தது. அதனால்தான் சங்ககால இலக்கியங்களை இயல் இசை நாடகம் என்ற மூன்று வகைகளாக பிரித்திருந்தனர். இசையை இனிமையாக வெளிப்படுத்தும் கருவிகள் இசைக்கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன.




இசை ஆய்வாளர்களின் கருத்துப்படி இசைக்கு ஐந்து கருவிகளால் உரிய ஓசைகள் உண்டாகின்றன. அந்தகால இசைக்கருவிகளை ஐந்து வகையாக பிரிக்கலாம்.

அவைகள்: தோல்கருவிகள், துளைக்கருவி, நரம்புகருவி, கஞ்சக்கருவி, மிடறு என்பனவாகும்.

தோல் கருவிகள்:

இந்த வகை இசைக்கருவிகள் மரத்தினால் செய்யப்பட்டு தோலினால் கட்டப்பட்டவை.

பெரும்பறை, சிறுபறை, பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமடூகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வலையம், மொந்தை, முரசு, நிதாளம், கண்விடுதூம்பு, துடுமை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், துடி, நாளிகைப்பறை.

மத்தளம்

இதற்குத் தண்ணுமை என்றும், மிருதங்கம் என்றும் பெயர்கள் உள்ளன. மத்து என்பது




ஓசைப்பெயர். தளம் என்பது இசையிடனாகிய கருவிகளுக்கெல்லாம் தளமாக இருப்பது. ஆதலால் மத்தளம் என்று பெயர் பெற்றது.

குடமுழா

தோற்கருவிகளில் ஒன்றாகக் கூறப்படும் குடமுழா என்பது ஐந்துமுக வாத்தியம் என்று இப்போது கூறப்படுகிறது.இது இப்போது இசைப்பாட்டில் வாசிக்கப்படாமல் மறைந்து விட்டது.

தவுல்

இது நாதசுரத்துடன் வாசிக்கப்படுகிற தோற்கருவி. அந்த காலத்தில் இதன் பெயர் மட்டுகம் என்றும் சொல்வார்கள்.

பதலை

இது தோற்கருவி இன்றைக்கு தபலா என திரிந்து வழங்குகிறது. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டு பிற்காலத்தில் மறைந்துவிட்டது. ஆனால் வடநாட்டில் தபலாவாக புகழ்சூடி இன்றும் இருக்கிறது.

முரசு

இது ஒரு ஒலிக்கருவி. இது அரைக்கோள வடிவத்தில் பெரிதாக இருக்கும் தோல்கருவி. அந்தகாலத்தில் அரசர்களின் ஆணையை மக்களுக்கு அறிவிக்க பயன்பட்ட ஒரு தோல்கருவி. இன்றும் சில ஊர்களில் இருக்கிறது. பள்ளிவாசல்களில் மின்சாரம் இல்லாத நேரத்தில் முரசு அறிவித்து மக்களை தொழுகைக்கு அழைப்பார்கள்.




துளைக்கருவிகள்

இந்த வகை இசைக்கருவிகள் துளைகளின்மூலம் காற்றின் வழியாக இசையை தருவிக்கும் கருவிகள் துளைக்கருவிகள் எனலாம்.

* புல்லாங்குழல்
* முகவீணை
* மகுடி
* சங்கு
* தாரை
* கொம்பு
* எக்காளை
* எஆசருஅம்

புல்லாங்குழல்

இது மிகவும் தொன்மையான வரலாற்றையுடைய ஒரு இசைக்கருவி. உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் இது துளைக்கருவி **(aero phones)** வகையைச் சேர்ந்தது.

இசையை பள்ளிகளில் பாடத்திட்டத்தில் இணைப்பது என்பது, நிச்சயம் நம்மை அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்லும். இது குறித்து கொள்கை முடிவு எடுக்கப்பட்டால், போதிய கால இடைவெளியில் சரியான திட்டமிடலுடன் சில ஆண்டுகளில் பள்ளிகளில் இசைப் பயிற்சியை நடைமுறைப்படுத்த முடியும்.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு









# தமிழ்


நற்றமிழரின் நாடித்துடிப்பு

## அடியெடுத்து வைத்த



















# ஒவ்வொரு ஆண்டிலும்...


March 2016
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
7


March 2017
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
8
நூற்றாண்டு நாயகன்


March 2018
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
9
வித்தக வள்ளல்


March 2019
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
10


March 2020
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
11



March 2021
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
12


HAPPY
Anniversary
தமிழ்
17
THANK YOU

# தமிழ்


நற்றமிழரின் நாடித்துடிப்பு













# ஒவ்வொரு ஆண்டிலும்...


March 2026
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தமிழ்
17
THANK YOU


VARSHA
தமிழ்
VARSHA
17
THANK YOU

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

# 2026

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |


## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
th
17
ANNIVERSARY
17
WE WANT TO SAY
THANK YOU
FOR YOUR SUPPORT